தமிழ் பேசும் மக்களின் தேசிய சஞ்சிகை

# இருக்கிறம்

ඉරුක්කිරම්
வார இதழ்
ஒரு பொல்லாப்புமில்லை
காத்திருப்பு 01 இருக்கை 11



## தீர்வின்றித் தவிக்கும்...
## சாய்ந்தமருது முகாம் மக்கள்



## நடந்தது என்ன?

13.06.2011

## மனதை உலுக்கிய உறவுகளின் அழுகுரல்கள்

30/-

## பூநகரியில் தாய், பூசாவில் மகன்

# கரைக்கால் மக்கள் 15 நாட்களுக்குள் வெறியேற வேண்டும்; கோயில் நிர்வாகம்

நாட்டில் இடம்பெற்றுவந்த யுத்த சூழ் நிலையால் கடந்த 1990ஆம் ஆண்டு கட்டுவன் வறுத்தலபுரத்திலிருந்து இடம் பெயர்ந்து இணுவில், காரைக்கால் முகாமில் தங்கியிருக்கும் மக்களை 15 நாட்களுக்குள் வெளியேறுமாறு பிரதேச கிராம சேவகரின் ஊடாக குறிப்பிட்ட கோயில் நிர்வாகம் பணித்திருப்பதாக முகாம் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த 20 வருடங்களாக முகாம் மக்கள் தங்கியுள்ள இக்காணியானது காரைக்கால் சிவன் கோயிலுக்குச் சொந்த மானதென்றும் கோயில் நிர்வாகத்தி னரின் வேண்டுகோளுக்கு இணங்க மக்களை வெளியேறுமாறு பணித்ததாக காரைக்கால் ஜே-117 பிரிவு கிராம சேவகர் எமக்குத் தெரிவித்தார்.

இந்நிலையில் தாங்கள் கோயில் நிர்வாகத்தினரோடு கதைத்ததாகவும் நிர் வாகத்தினர் இது தொடர்பில் தங்களுக்கு எதுவும் தெரியாது என்று குறிப்பிட்ட தாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அங்கேயே வாழ்ந்து பழக்கப்பட்டு போன இவர்கள் எவ்வாறு தமது வாழ்க் கையை பிறிதொரு இடத்தில் அரம்பிக்கப் போகிறார்கள்?

அதேவேளை, இதுபற்றி மேலும் குறிப்பிட்ட கிராம சேவகர் கோயில் நிர்வா கத்தினர் மக்களை கோயில் காணி யிலிருந்து வெளியேற பணிக்குமாறு தனக்கும் அரச அதிபருக்கும் கடிதம் அனுப்பியுள்ளதாவும் தெரிவித்தார்.

எனினும் இவர்களை சொந்த இடத் திற்கு மீள்குடியேற அனுமதிக்காமல் வச விளானில் மீள்குடியேறுவதற்கு அரச அதிபர் நடவடிக்கை எடுத்ததாகவும் இன்னு மொரு தகவல் தெரிவிக்கிறது.

# சிங்களப் புலி உறுப்பினர் ஒருவர் யாழ். நீதிமன்றத்தில் விடுதலை

விடுதலைப் புலிகளிடம் வன்னியில் பயிற்சி பெற்றதாகக்கூறி கடத்தப்பட்டு, காணாமல்போன சிங்களப் புலி உறுப்பி னரான பதுளையைச் சேர்ந்த பிரியந்த நிஹால் குணரட்ன கடந்தவார இறுதி யில் யாழ். நீதிமன்றத்தால் விடுவிக்கப் பட்டுள்ளார்.

யாழ். மேல்நீதிமன்றில் விசாரணைக் காக கொண்டு செல்லப்பட்ட குணரட்ன குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றினை அளித்திருந்தமை சாட்சியாக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் முன்வைக் கப்பட்டது. இந்நிலையில் சட்ட அமைவு களுக்கு ஏற்றவகையில் அவரது வாக்கு மூலம் அமைந்திருக்கவில்லை எனக்கூறி யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதி அவர் மீதான குற்றச்சாட்டை நிராகரித்து விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

இடதுசாரி சார்புடைய கட்சியின் ஆதரவாளர்களான நான்கு பேர் விடுத லைப்புலிகளிடம் வன்னியில் பயிற்சி பெற்றதாகக்கூறி கடத்தப்பட்டு காணாமல் போயிருந்தனர். இவர்களில் ஒருவரே விடுதலையானவராவார்.

குறித்த நான்கு பேரும் அண்மையில் தமிழ் அரசியல் கைதிகளுடன் இணைந்து சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்திருந்தனர். எனினும் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பான தகவல்கள் வெளியாக வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மாணவர்களின் சீருடைத் துணியில் சீர்கேடு நடைபெற்றுள்ளதாக புகார்

பாடசாலை மாணவர்களுக்கு அரசி னால் இலவசமாக வழங்கப்படும் சீருடைத் துணி இவ்வருடம் வழமையைவிட அளவில் சிறியதாகவும் தரம் குறைந் ததாகவும் வழங்கப்பட்டுள்ளதால் மாண வர்கள் பெரும் அசௌகரியத்தை எதிர் நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக நீளக்காற்சட்டை உடுத்தும் முஸ்லிம்மாணவர்களே இதனால் பெரிதும் பாதிக்கப்படுவதாக மாணவர்களின் பெற் றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலை தொடருமானால் வசதியற்ற மாணவர்களும் முஸ்லிம் மாணவர் களுமே பாதிக்கப்படுவார்கள். எனவே, சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டுமென மாணவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஆரம்பத்தில் தரப்படவேண்டிய சீரு டைத் துணியானது வருடத்தின் நடுப் பகுதியில் வழங்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் கடமைக்கான கொடுப்பனவுகள் இன்னும் வழங்கப்படவில்லையென புகார்

தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட அக்க ரைப்பற்று கல்வி வலயத்திற்குட்பட்ட ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கே இவ்வாறு கொடுப்பனவுகள் வழங்கப்படாமல் இழுத் தடிப்பு செய்யப்படுவதாக கூறப்படுகிறது.

இது தொடர்பில் வலயக் கல்வி பணிமனையில் முறையிட்டபோதும் தகுந்த நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் தவறியுள்ளதாக குறித்த ஆசிரியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, இக்கொடுப்பனவுகளை விரைவில் பெற்றுத்தருவதற்கு உரிய அதிகாரிகள் தகுந்த நடவடிக்கையெடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்திருக் கின்றனர்.

# அடிப்படைத்தேவை நிறைவேறாத நிலையில் மீள்குடியேற்ற மக்கள்

மாந்தை கிழக்கு, பாண்டிக்குளம் பிரதேசத்தில் கடந்த 2009ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் இன்றளவும் அடிப்படை தேவை களைக்கூட நிறைவு செய்துகொள்ள முடியாத நிலையில் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படு கின்றது.

இந்நிலையில் 30 குடும்பங்களுக்கு மாத்திரமே வீட்டுத் திட்டம் வழங்கப்பட வுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இப்பிரதேசத்தில் 270 குடும்பங்கள் மீளக்குடியேறினர். இக் குடும்பங்களில் 60இற்கும் மேற்பட்ட கணவனை இழந்த பெண்களும் வாழ்ந்து வருகின்றனர்.

இம் மக்களுக்கான தற்காலிக வாழி டங்களை அமைத்துக் கொள்வதற்காக ஒரு குடும்பத்திற்கு தலா 12 தகரங்களும் 6 கைமரங்களும் வழங்கப்பட்டுள்ளன. பின்னர், எவ்விதமான உதவிகளும் வழங்கப்படாத நிலையில் இவ்வீட்டுத் திட்டத்திலும் பாரபட்சம் காட்டப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசத்தில் மீள்குடியேறிய மக்களுக்காக அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட நிவாரணமும் 6 மாதங்களோடு நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் வறட்சி, குடிநீர் தட்டுப்பாடு குளங்கள், நீரோடைகள் வற்றிவிட்டன

மட்டக்களப்பில் தற்போது நிலவும் கடும் வறட்சியால் மாவட்டத்தின் கொக்கட் டிச்சோலை, வவுணதீவு, வெல்லாவெளி, வாகரை உட்பட பல பகுதிகளில் குடிநீருக் கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இக்கடும் வறட்சியால் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளிலுள்ள குளங்கள், ஏரிகள், நீரோடைகள் முழுமையாக வற்றி வருவதுடன் வயல்நிலங்களும் வறண்டு காணப்படுகின்றன.

இதேவேளை கால்நடைகள் மேய்ச்சல் தரையின்றி தமது உணவுத் தேவையை நிறைவு செய்யமுடியாமல் அலைந்து திரிகின்றன. மாவட்டத்தின் சிறுபோக நெற்செய்கையும் பெருமளவில் கைவிடப் பட்டுள்ளது.

இவ்வருட ஆரம்பத்தில் பெரும் மழை பெய்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட போதி லும் மட்டக்களப்பு வாவியினூடாக கட லுக்கு நீரை திருப்பிவிட்டதால், நிலத்தடி நீர் மட்டம் குறைந்து கடும் வறட்சி ஏற்பட்டிருப் பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

# சீரான சேவையற்ற வைத்தியசாலை

மாந்தை கிழக்கு, நாட்டான்கண்டல் பிரதேசத்தில் இயங்கிவரும் வைத்திய சாலை போதிய சேவையை வழங்காமை யால் மக்கள் பெரும் சிரமத்திற்குள்ளா வதாக தெரியவருகிறது.

இப்பிரதேசத்தில் இருக்கும் 15இற்கும் மேற்பட்ட கிராமங்களுக்கான ஒரே வைத்தி யசாலை இதுவாக இருக்கின்றது. இல்லா விட்டால் 6 கி.மீ. தூரத்திலுள்ள மல்லாவி வைத்தியசாலையைத்தான் மக்கள் நாட வேண்டியிருக்கும்.

இந்நிலையில் தாதிமார், வைத்தியர் களின் பற்றாக்குறை, ஆண்களுக்கான தனியான வார்டுகள் இல்லாமை போன்ற பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கும் இவ்வைத்தியசாலையினை சீர்செய்து தருமாறு மக்கள் வேண்டுகின்றனர்.

இங்கு வைத்தியர் ஒருவர் கடந்த 2 வாரங்களுக்கு முன்புதான் நியமிக்கப் பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.


## இருப்பு



'சாது' மிரண்டால்...?

# கொக்கலிய

# மீள்குடியேற்ற மக்கள் எதிர்நோக்கும் சவால்கள்



◄ த.சிந்துஜா ►

அண்மையில் வவுனியாவிலுள்ள ஒரு எல்லைக் கிராமமான கொக்கெலியவிற்கு சென்றிருந்தோம். இந்தக் கிராமம் 1985ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளினால் பல்வேறு பாதிப்புகளுக்கு முகங்கொடுத்து முற்றாக அழிவடைந்திருந்தது. ஏறக்குறைய 155 குடும்பங்கள் வாழும் இக்கிராமத்தில் எட்டு தமிழ்க் குடும்பங்களும் வசிக்கின்றன. எவ்வித பேதங்களுமின்றி வாழ்ந்து வந்த இவ்விரு சமூகங்களும் நீண்டகாலத்திற்குப் பின்னர் மீண்டும் அங்கு குடியமர்ந்து சில மாதங்களே ஆகின்றன.

யுத்தத்தால் இடம்பெயர்ந்து 23 வருடங்களின் பின் மீண்டும் இக்கிராமத்தை வந்தடைந்துள்ள இம்மக்கள் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்துள்ளனர். விஷேட தினங்களின்போது மூத்த பரம்பரையினருடன் இணைந்து இன்றைய தலைமுறையினர் பலூன் ஊதுதல், கிடுகு பின்னுதல், மரம் ஏறுதல் போன்ற விளையாட்டுக்களை சிறப்பாகக் கொண்டாடி வருவதனை இங்கு சென்றபோது காணக்கூடியதாகவிருந்தது.

தமது பூர்வீக கிராமத்தில் நீண்ட நாட்களின்பின் கால்பதிக்கக் கிடைத்த வாய்ப்பு மகிழ்ச்சிக்குரியதாக இருந்தாலும் அம் மகிழ்ச்சியை நிலையானதாக்க இம்மக்கள் தொடர்ந்தும் போராட வேண்டியுள்ளனர். அத்தோடு வாழ்வாதாரப் பிரச்சினையூடாக ஏற்படும் தீர்வுகளை எதிர்பார்த்து நிற்கின்றனர். தங்குவதற்கு வீட்டையும் நாட்களை நகர்த்த வாழ்வாதாரத்தையும் உருவாக்கிக்கொள்ள தம்மிடமுள்ள குறைந்த வளங்களைக்கொண்டு இம்மக்கள் தங்களால் முடிந்தவற்றைச் செய்துகொண்டு வருகின்றனர்.

சீமெந்துக்கல் தயாரிப்பில் ஈடுபட்டிருந்த ப. விமலசிறி என்பவர் அக்கிராமத்தின் இன்றைய நிலவரங்களை எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

'இப்போது முன்னேற்றம் அடைகின்றது எனக் கூறினாலும் அரசாங்கம் 28 வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளது. அதற்கு தேவையான அடிப்படைப் பொருட்கள் இல்லை. சீமெந்து, கல்லுகள் இல்லை. வவுனியா போன்ற தூரப் பிரதேசங்களில் இருந்துதான் அவற்றையெல்லாம் கொண்டுவர வேண்டும். அதற்கு நிறையப் பணம் செலவழிக்க வேண்டும். அதனால் இக்கிராமத்தில் உள்ள இளையவர்களுக்கு தொழில் ஒன்றைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று நான் முடிவெடுத்தேன். இப்போது நாங்கள் இவற்றைத் தயாரிப்பதன் ஊடாக கிராமத்தின் தேவையை ஓரளவு பூர்த்தி செய்யக்கூடியவாறு இருக்கின்றது. அத்தோடு கிராமத்தில் உள்ளவர்களுக்கும் எவ்வளவாவது பணம் கிடைக்கும் தானே. வெளியில் செலவழிக்கும் பணத்தை கிராமத்தில் சேமிக்கலாம் தானே. அரசாங்கம் அல்லது ஏனைய நிறுவனங்கள் எமக்கு இதை முன்னேற்ற உதவி செய்தால் அவர்களுக்கு நாங்கள் நன்றியை தெரிவிக்கலாம்' என்றவர் தொடர்ந்து தன் வேலையில் மும்முரமானார்.





விமலசிறி



நல்நாயகி



திலகரட்ண

தன்னம்பிக்கையுடன் முன்னேற முயற்சிக்கின்ற இந்த கிராம மக்கள் தமது வாழ்க்கையை கட்டியெழுப்புவதற்கான உதவிகளை அனைத்து தரப்பினரிடமிருந்தும் எதிர்பார்க்கின்றனர். கொக்கெலிய மக்களில் அனேகமானவர்கள் விவசாயிகளாவர். எனினும் இன்று நிவாரண உதவிகளை மாத்திரமே நம்பி தமது வாழ்க்கையை நகர்த்த வேண்டிய நிலைக்கு இவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். விவசாயத்திற்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்கு வேறு பிரதேசங்களுக்குச் செல்கின்றார்கள்.

'எங்கள் கிராமத்தை மறக்க முடியுமா? நாங்கள் எங்கு இருந்தாலும் இடம்பெயர்ந்தவர்கள் என்று தான் எங்களை கூறுகின்றார்கள். எனது பிள்ளைகளை சொந்த இடத்திற்கு அழைத்துவர முடிகின்றது. என்பதை நினைத்து சந்தோசமடைகின்றேன். எனது காலம் கழிந்துபோய் விட்டது எனது பிள்ளைகளின் எதிர்காலம் நன்றாக அமைய வேண்டும். வாழ்வதற்கு கஸ்ரமாக உள்ளதுதான். இங்குள்ள பழைய மக்கள் எங்களை வந்து சந்தித்தார்கள். சிங்கள மக்களுடன் நாங்கள் மகிழ்ச்சியாக இருக்கின்றோம். தாயைப்போல் எல்லோரும் வந்து எங்களை பார்த்துப்போகின்றார்கள். எங்களுக்கு எந்தவித பயமும் இல்லாமல் இருக்கின்றோம்' என்று சொந்தக் கிராமத்திற்கு வந்த சந்தோஷத்துடன் இக்கிராமவாசியான நல்நாயகி விஜயராசா தெரிவித்தார்.

இக்கிராமத்து மக்கள் விவசாயத்திற்கான நீரை பெற்றுக்கொள்வதில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கின்றனர். சுமார் 450 ஏக்கர் விவசாய நிலம் காணப்பட்டாலும் குறுகிய பிரதேசத்திற்குள்ளேயே விவசாயத்தினை மேற்கொண்டு வருகின்றனர். இதுபற்றி அப்பிரதேசத்தின் கிராமசேவகர் சி.ப. திலகரட்ணவிடம் நாம் கேட்டோம்.

'இவர்களுக்கு உலருணவு பொருட்கள் கொடுத்தோம். அரசாங்கத்தால் வீடு கட்டிக் கொடுத்தார்கள். ஏனைய தேவைகளையும் பெற்றுக் கொடுக்கின்றோம். விவசாயம் செய்வதற்காக நெல் போன்றவற்றைக் கொடுத்தோம். தற்போது இவர்கள் இயல்பு வாழ்விற்கு மாறி வருகின்றார்கள். பெரும்போகத்தில் விவசாயம் பண்ணுகின்றோம். வெள்ளத்தினால் எல்லாம் அழிந்துவிட்டது. சிறுபோக பருவத்தில் 150, 200 ஏக்கர்களில் விவசாயம் செய்வதற்கு எதிர்பார்க்கின்றோம். தற்போது நெல்லை விதைத்துள்ளோம். எதிர்காலத்தில் முழுக்கிராமத்திலும் விவசாயம் செய்ய எதிர்பார்க்கின்றோம். பிரதான நீர் வழியான கொக்கெலிய ஆற்றில் சுவர் உடைந்து பண்ட் உடைந்திருந்தது. அதனை ஐ.எம்.ஓ. நிறுவனத்தின் உதவியுடன் திருத்துவதற்கு உறுதியளித்திருந்தோம். இன்னும் சில நாட்களில் அதன் வேலையை ஆரம்பிக்க உள்ளார்கள்' எனக் கூறினார்.

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் கொக்கெலிய கிராம மக்கள் சொந்த கிராமத்திற்கு திரும்பக் காரணம் யுத்தத்தினால் தம்மிடம் இருந்து பறிக்கப்பட்ட உரிமைகளை தமது அடுத்த சந்ததிகளுக்காவது பெற்றுகொடுக்கவேயாகும். மீள்குடியேற்றம் என்பது சில உலர் உணவுப் பொருட்களுக்கும் தகரங்களுக்கும் மட்டுப்படுத்தப்படாமல் இம்மக்கள் தமது வாழ்வாதாரத் திற்கான நிலையான பாதையை அமைத்துக் கொள்ள வழிவகுக்கக் கூடியதாக இருக்கவேண்டும். அதனைப் பூர்த்திசெய்ய வேண்டியது அரசின் கைகளிலேயேதான் தங்கியுள்ளது.

வாசகர்களே...!

'இருக்கிறம்' பற்றிய உங்கள் காத்திரமான விமர்சனங்களையும் ஆலோசனைகளையும் எதிர்பார்க்கின்றோம். வேறெதிலும் பிரசுரமாகாத உங்களுடைய சொந்தப் படைப்புக்களை எங்களுக்கு எழுதி அனுப்பலாம். அனுப்பவேண்டிய முகவரி,

The Editor
'IRUKKIRAM'
# 03, Torington Avenue,
Colombo - 07

E-mail : irukiram@gmail.com
Skype : irukkiram
Tel : 011 3150836
Fax : 011 2585190
Website: www.irukkiram.tk

13.06.2011
காத்திருப்பு 01 இருக்கை 11

## விடையில்லா வினாக்கள்

வணக்கம் என் உறவுகளே!

அழிக்கப்பட்ட நிலங்களில் காய்ந்துபோயிருந்த குருதியின் ஈரம் மீண்டும் ஊறத்தொடங்கியிருக்கிறது. புற்கள் மூடிய புண்ணிய பூமியிலிருந்து கொடும் ஆக்ரோஷமாய் வேர்கள் ஈட்டிகளாய் முளைவிடத் தொடங்கியிருக்கின்றன. வன்முறையும் அராஜகமும் வலிகளால் ரணமாகியிருக்கும் எம் உறவுகளை மீண்டும் மீண்டும் இரையாக்கி வருகின்றன. என்ன செய்வது விமோசனமென்பதே இன்று விலையாகிப்போய்விட்டது.

அவசரகாலச்சட்டமோ அநியாயமாய் பழிவாங்க பயங்கரவாதச் சட்டமோ எம்மை சட்டங்களுக்குள் சமாதியாக்கத் துடிக்கின்றது. காணாமல் போனவர்களுக்காய் மன்றாடும் உறவுகளின் கண்ணீர்க் கதைகள் மனங்களில் வலியையும் வேதனையையும் விதைத்துவருகின்றன. ஊமை விழிகளிலிருந்து வடியும் கண்ணீர் ஆயிரம் கதைகளை எமக்குள்ளே போட்டுப் புதைத்து நிற்கிறது.

கோர யுத்தம் முடிந்த பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் 300 இளைஞர், யுவதிகள் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா அண்மையில் தெரிவித்திருந்தார். அவசரகாலச் சட்டம் அவசியமாயின் அது மிக இறுக்கமாக்கப் படவேண்டும். ஆனால் அது இன்று யாருக்கு என்ற கேள்வியே எங்கள் மனங்களில் பலவித எண்ணங்களை உருவாக்கி வைத்திருக்கிறது. தொடரும் கொலைகளும், கைதுகளும் பல வினாக்களை மனங்களில் விதைத்து நிற்கின்றன. மீண்டும் தொடரும் சப்பாத்துக் கால்களும் முட்கம்பிச் சுருள்களும் இரவுகளின் நிசப்தத்தை தொலைக்கத் தொடங்கியிருக்கின்றன. தேடுதல்களும் விசாரணைகளும் அநாவசியக் கைதுகளும் நிம்மதியான வாழ்வை வேண்டிநிற்கும் எம் சனங்களுடைய வாழ்வியல் கோலங்களை சிதைக்கத் தொடங்கியிருக்கின்றன.


தடுப்புக்காவலில் உள்ளவர்கள் விடுவிக்கப் படவேண்டுமென்றும் காணாமல் போனவர்கள் மீண்டும் திரம்பிவரவேண்டுமென்றும் நடந்து வரும் ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும், பிரிந்த உறவுகளை மீண்டும் ஒன்றுசேர்க்க உதவவேண்டும். அமைதியான, நிலையான வாழ்வு அவர்களுக்கு மீண்டும் கிடைக்க வேண்டும். ஆனால், அமைதியென்பதே இன்று இத்தேசத்தில் அடிமையாய் கிடக்கின்றது. யுத்தம் முடிந்து இரண்டு வருடங்களாகியும் உறவுகளைத் தேடி ஓடும் கால்கள் ஓய்வில்லாமல் ஓடிக்கொண்டு தானிருக்கின்றன.

பாரததேசத்தில் இலங்கை மீதான பொருளாதாரத் தடை விதிக்குமாறு கோரி தமிழக சட்டசபையில்தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். பொருளாதார தடைக்காய் பொங்கியெழுந்து தீர்மானம் நிறைவேற்றியவர்கள், நான்கு தறப்பாள் கூடாரங்களையும் அரிக்கன் லாம்புகளையும் வாங்கி அனுப்பியிருந்தால் எங்கள் சனங்களின் வலிகள் கொஞ்சமாவது ஆறியிருக்கும். உறவுகளின் மீள்குடியேற்றம், கைதிகளின் விடுதலை, உயிர்வாழ்வதற்கான திட்டங்களென ஏதாவதொன்றுக்காய் தீர்மானம் நிறைவேற்றியிருந்தால் எமது கண்ணீர் வீண்போயிருக்காது.

உறவுகளைத் தொலைத்து தொழிலின்றி வளமின்றி எதிர்காலமே சூனியமாய் நிற்கும் எமது உறவுகளுக்கு விமோசனம் எப்போது கிடைக்கும். விடைகளில்லாத வினாக்களே இன்று அதிகரித்துக் கொண்டு போகின்றன. உங்களைப்போல் தொலைந்துபோன விடைகளைத் தேடியபடி காத்திருக்கும்...

அருள் - சஞ்சீத்

ஆசிரியர்




# கருணாநிதியை கொப்பியடித்தார் சகாதேவன் 3 நாட்களில் முடிவுக்குவந்த உண்ணாவிரதம்

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய உதவிகளை வழங்க வேண்டும் என்று கோரி யாழ்ப்பாணம், கோட்டை முனீஸ்வரர் கோயில் முன்பாக கடந்த சனிக்கிழமை 04.06.2011 காலை 7 மணிக்கு சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்த நபர் அவ்உண்ணாவிரதப் போராட்டத்தை சரியாக 48 மணித்தியாலங்களில் முடித்து தனது இருக்கையைச் சுருட்டிக்கொண்டு சென்று விட்டார்.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் அமைப்பின் பிரதம செயற்பாட்டாளர் வி. சகாதேவன் என்பவரின் தலைமையிலான குழுவினர் எட்டுப்பேர் இதில் பங்கேற்றனர்.

போரினால் பாதிக்கப்பட்ட 'மக்களுக்காக குரல் கொடுக்க வாருங்கள்' என்ற பதாதைகளுடன் உண்ணாவிரதம் இருக்கக் குந்தியவர்கள் தாம் சில கோரிக்கைகளை முன் வைத்துள்ளதாகவும் அந்த கோரிக்கைகள் நிறைவேறும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் எச்சரித்திருந்தனர். ஆனால் அவர்களது போராட்டம் குறித்து பல்வேறு சந்தேகங்கள் நிலவியபோதும் போராட்டத்தின் இரண்டாம் நாள் காலை போராட்டத்தின் நோக்கம் முழுமையாக மக்களுக்குப் புரிந்துவிட்டது. போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்குப் பக்கத்தில் ஐ.நா போர்க்குற்ற அறிக்கைக்கு எதிரான பதாதைகள் புதிதாய் முளைத்திருந்ததும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு படையினரும் புலனாய்வாளரும் பாதுகாப்பு வழங்கியமையுமே இவர்கள் மீதான சந்தேகத்தை வலுவாக்கியது.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் மக்கள் கூடிக்கதைத்தாலோ கூட்டம் நடத்தினாலோ துருவித்துருவி விசாரணை நடத்தும் படையினர் சகாதேவனின் உண்ணாவிரதத்திற்கு பாதுகாப்பு வழங்கியதோடு அவர் உண்ணாவிரதத்தை



முடித்துக்கொள்வது பற்றியும் 'திங்கட்கிழமை காலை 7 மணிக்கு அரச அதிபர் இமெல்டா சுகுமார் உண்ணாவிரதத்தை முடித்து வைப்பார்' எனவும் ஊடகங்களுக்கு அறிவித்திருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் ஒத்தி வைக்கப்பட்ட பிரதேசங்களுக்கான உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அரசியல் கட்சி ஒன்றினாலேயே இந்த உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப் பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த உண்ணாவிரதத் தியாகி இரண்டாம் நாளே தான் மிகவும் களைப்படைந்து விட்டதாகவும் தன்னால் ஊடகங்களுக்குப் பேட்டி கொடுக்க முடியாது என்றும் மறுத்துவிட்டார். ஆனால் தன்னை அரச அதிகாரிகளோ அரசியல் பிரமுகர்களோ வந்து சந்திக்கவில்லை என ஆதங்கப்பட்டதுடன் பொதுமக்கள் கூட்டமாய்க் கூடி தனக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை எனவும் கவலைப்பட்டுக் கொண்டார்.

இவரைப்பார்த்து இரக்கமடைந்த சில இணைய ஊடகங்கள் இவர் சோர்ந்து வாடி நா வறண்டு படுத்திருந்த காட்சியை வீடியோக்களாக வெளியிட்டு அவரது பப்பிளிசிற்றி நோக்கத்தை தாங்களாகவே வெளிக்கொணர்ந்தன. ஊடகங்களில் தனது பெயர் நன்றாக அடிபட்ட திருப்தியோடு அந்த உண்ணாவிரத தியாகி அரச அதிபர் இமெல்டா கொடுத்த குளிர்பானத்தைக் குடித்து தனது விரதத்தை முடித்து அங்கிருந்து வெளியேறியுள்ளார். இவரது இந்த மூன்றுநாள் உண்ணாவிரத நாடகம் முன்னாள் தமிழக முதல்வர் மு. கருணாநிதி இருந்த உண்ணாவிரத நாடகத்தை கொப்பியடித்திருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர் ●

இருக்கிறம்
ஒரு பொய்யாப்புமில்லை
வார இதழ்

எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் வெளியிடப்படுகிறது.
3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு - 07.
தொலைபேசி : +94 11 3150836
தொலைநகல் : +94 11 2585190
மின்னஞ்சல் : irukiram@gmail.com
இணையம் : www.irukkiram.tk

ஆசிரியர் : அருளானந்தம் சஞ்சீத்
நிர்வாக ஆசிரியர் : சாந்தி சச்சிதானந்தம்
செய்தி ஆசிரியர்கள் : கலாவர்ஷ்னி கனகரட்ணம்
தவநாதன் இரவிவர்மன்
நிருபர் குழு : தர்மராசா சிந்துஜா
கந்தலிங்கம் மாலா
சண்முகநாதன் பார்த்தீபன்
அருமைத்துரை ஜசீகரன்
ஜேசுதாசன் ஜீவராஜ்
கார்ட்டுன் : சஞ்சீத்
புகைப்படம் : யாத்ரா
தமிழியன்
பக்க வடிவமைப்பு : முஹம்மட் பிறவ்ஸ்

கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளிவரும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல.




# யுத்தக் குற்றவாளிகள் இனி என்னதான் செய்யப் போகிறார்கள்?

என்னவோ தெரியவில்லை, எங்கள் ஆட்சியாளர்களுக்கு எல்லாமே இந்த நேரம் பார்த்துதான் நடக்கின்றது. முதலில் தனது மக்களைக்கொன்று குவித்த காரணத்திற்காக லிபியாவுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தன அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும். பிறகு, ஐ.நா. நிபுணர் குழு இலங்கை அரசு யுத்தக் குற்றங்கள் புரிந்ததற்கான சாட்சியங்கள் இருக்கின்றன என்று நிறுவிய அறிக்கை வெளியிடப்பட்டது. இராஜதந்திர நகர்வுகள் ஒருபுறமும் சண்டித்தனம் இன்னொரு புறமுமாக இதனை முறியடிப்பதற்கான நடவடிக்கை களை மேற்கொண்டிருக்கும்போது, 16 வருடங்களாகத் தேடப்பட்டு வந்த பொஸ்னியாவின் முன்னாள் இராணுவத்தளபதி ராட்கோ மிலாடிக் கைது செய்யப்பட்டார்.

மிலாடிக்கின் வழக்கு சுவாரஸ்யமான திருப்பங்களைக் கொண்டது. பொஸ்னியாவின் உள்நாட்டு

## மீட்சியடையும் சர்வதேச நீதியின் செயலாட்சி (Universal Jurisdiction)

யுத்தத்தின்போது செரபெறனிக்காவில் 8,000 முஸ்லிம் ஆண்களைப் படுகொலை செய்த குற்றத்திற்கும் அரசியல் பழிவாங்கல்கள் போன்ற பல்வேறு குற்றங்களுக்குமாகத் தேடப்பட்டு வந்தவர் இவர். நெதர்லாந்தின் ஹேக் நகரில் ஸ்தாபிக்கப்பட்டு வந்த முன்னாள் யூகோஸ்லாவியாவுக்கான குற்றச் செயல்கள் மன்றமே (International Criminal Tribunal for the former Yugoslavia) இவருடையதும் இவரைப் போன்ற ஏனையோரினதும் வழக்கு களைத் தொடர்ந்து வந்தது. ஆனால், மிலாடிக்கின் நாடான சேர்பியாவில் கருத்துகளோ வேறாக இருந்தன. கடந்த டிசம்பர் மாதம் பெல்கிரேட் நகரின் மாநகரசபை நீதிமன்றம் மிலாடிக் தப்புவதற்கு உதவி செய்ததற்காக சந்தேகிக்கப்பட்ட 10 நபர்களை விடுதலை செய்தது. அந்நாட்டில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பொன்றில் 52 வீதமான சேர்பியர்கள் மிலாடிக் நெதர்லாந்திற்கு நாடு கடத்தப்படக்கூடாதென கருத்துத் தெரிவித்தனர்.


ஆனால், ICTY எதற்கும் பின்வாங்கவில்லை. அதன் வழக்கறிஞரான சேர்ஜ் பிரம்மர்ட்ஸ் மிலாடிக்கினைக் கைது செய்து ஒப்படைக்குமாறு சேர்பியாவையும் ஏனைய நாடுகளையும் கோரியிருந்தார். இவரைத் தப்ப வைத்தால், ‘பல வருடங்கள் தலைமறைவாக இருந்தால் உலகம் தங்களைப் பற்றி மறந்து விடும் என்று உலகெங்குமுள்ள யுத்தக் குற்றவாளிகள் நினைக்க ஏதுவாகி விடும்’ என்று இவர் வாதிட்டார். யுத்தக்குற்றவாளிகள் அனைவரையும் ஒப்படைக்காவிட்டால் சேர்பியா ஐரோப்பிய ஒன்றியத்தில் சேரமுடியாது என்று வேறு ஐரோப்பியப் பாராளுமன்றம் கட்டளையிட்டது. இதுதான் மிலாடிக் பிடிபட்டதன் பின்னணியாகும். எத்தனை வருடங்கள் சென்றாலும் யுத்தக் குற்றங்கள் புரிந்தவர்கள் தண்டனை பெற்றேயாக வேண்டும் என்ற அபிப்பிராயம் வலுப்பட்டுக்கொண்டு வருவதற்கு மிலாடிக்கின் வழக்கு ஒரு உதாரணமாகும்.

இதேநேரம் நோர்வேயில் இலங்கை அரசாங்கத்தின் ஜனாதிபதி, பாதுகாப்பு செயலாளர் உட்பட 53 இராணுவக் கட்டளை அதிகாரிகள்மீது யுத்தக் குற்றச்சாட்டின் பேரில் வழக்கு தொடரப்பட்டிருக்கின்றது. அமெரிக்காவில் ஜனாதிபதிக்கெதிராகத் தொடரப்பட்ட வழக்கு தொடர்பில் இருமுறை நீதிமன்ற பிடியாணை கொழும்பிலுள்ள அலரி மாளிகைக்கு அனுப்பப்பட்டது. இருமுறையும் இலங்கையின் ஜனாதிபதி வீட்டிலில்லை என அது திருப்பியனுப்பப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினையெல்லாம் போதாதென இப்பொழுது ஸ்பெயின் நாடு தன் பங்குக்கு இன்னொரு பிரச்சினையை எழுப்பியுள்ளது.



சமீபத்தில் ஸ்பெயினின் உச்ச நீதி மன்றம் எல் சல்வடோரின் முன்னாள் உயர் இராணுவ அதிகாரிகளைக் கைதுசெய்யுமாறு உத்தரவிட்டுள்ளது. 1989ஆம் ஆண்டு 6 பாதிரியார்களைக் கொலை செய்த குற்றத்திற்காக எல்சல்வ டோரின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர், உதவிப் பாதுகாப்பு அமைச்சர், அதன் இராணுவக் கட்டளை அதிகாரியும் உட்பட்ட 20 நபர்களே இங்கு குற்றம் சாட்டப்பட்டவர்களாவார்கள். அமெரிக்காவின் சன்பிரான்சிஸ்கோ நகரிலுள்ள நீதிக்கும் கணக்குக் காட்டுவதற்குமான நிலையம் பாதிக்கப்பட்டோரின் சார்பில் ஸ்பெயினில் தொடர்ந்த இந்த வழக்கில் பிரதிவாதிகள் யுத்தத்தின்போது ஏற்பட்ட குழப்ப நிலைமைகளின் பயனாகவே இதுபோன்ற கொலைகள் நிகழ்ந்தன என்று வாதிட்டனர். இதெல்லாம் சுத்தக் கட்டுக்கதை, இது திட்டமிட்டுக் கைக்கொள்ளப்பட்ட இராணுவ உபாயங்களென தனது 77 பக்க தீர்ப்பறிக்கையில் ஸ்பெயின் நீதிமன்றம் காறித் துப்பியிருக்கின்றது. ‘சர்வதேச நீதியின் செயலாட்சி’ (Universal Jurisdiction) என்னும் கோட்பாடே இந்த வழக்கின் அடிப்படையாகும்.

இனப்படுகொலை, சட்டத்துக்கு அப்பாற்பட்ட கொலைகள், சித்திரவதை, மனித இனத்துக்கெதிரான குற்றச் செயல்கள் (பாலியல் வன்முறையும் இதற்குள் அடங்கும்), யுத்தக்குற்றங்கள், காணாமல்போதல் இவையனைத்துமே சர்வதேச சட்டங்களுக்குக் கீழ் குற்றச் செயல்களாகக் கருதப்படுகின்றன. இக்குற்றங்களைப் புரிந்தவர்கள்மீது அவை செய்யப்பட்ட நாடுகளில் உள்ள அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறுமிடத்தில், சர்வதேச சமூகத்தின் சார்பில் ஒவ்வொரு நாட்டினதும் நீதிமன்றங்கள் இவற்றை விசாரணைக்கு எடுத்து குற்றவாளிகளைத் தண்டிப்பது மட்டுமல்லாமல் பாதிக்கப் பட்டவர்களுக்கான இழப்பீட்டினையும்




கொடுக்கவேண்டும் என்கின்ற கோட்பாடு ‘சர்வதேச நீதியின் செயலாட்சி’ எனப்படும். அதாவது, எந்தவொரு நாட்டிலும் குற்றஞ் செய்தவர்கள் அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் வேறெந்த நாட்டிலும் தண்டனை பெறும் வகையில் இந்தக் கோட்பாடு உருவாக்கப்பட்டுள்ளது. Impunity எனப்படும் தண்டனைக்குத் தப்பி வாழும் நிலைமையை அறவே இல்லாதொழிக்கவே இந்த ஏற்பாடு.

உலகிலுள்ள சகல அரசுகளும் குறிப்பிட்ட 6 குற்றங்களுக்கும் எதிராக சர்வதேச நீதியின் செயலாட்சியினை செயற்படுத்தும் வகையில் தத்தமது நீதிமன்றங்களைப் பலப்படுத்த வேண்டுமென பொது மன்னிப்புச்சபை (Amnesty International) பகிரங்கக் கோரிக்கை விடுத்துள்ளது. தற்போது கிட்டத்தட்ட 125 நாடுகளில் மேற்குறிப்பிட்ட குற்றங்களில் ஏதாவதொரு குற்றத்துக்காகவேனும் சர்வதேச நீதியின் செயலாட்சியினைச் செயற்படுத்தக்கூடிய சட்டங்கள் இருக்கின்றனவாம். இரண்டாம் உலக மகாயுத்தத்திற்குப் பின்னரான காலகட்டத்தில் அவுஸ்திரேலியா, அஸ்திரியா, பெல்ஜியம், கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, பின்லாந்து நோர்வே உட்பட்ட 15 நாடுகள் சர்வதேச நீதியின் செயலாட்சியினைச் செயற்படுத்தியிருக்கின்றன. அதேவேளை, ஸ்பெயின், அமெரிக்கா, செனகல், இங்கிலாந்து மெக்ஸிகோ போன்ற நாடுகள் இதே கோட்பாட்டின் கீழ் யுத்தக் குற்றங்களைப் புரிந்தவர்களை நாடு கடத்தியிருக்கின்றன.

யுத்தக்குற்றங்கள் புரியப்படும் எந்த நாட்டிலும் அவை செய்யப்படுவதற்கான கருத்தியல் அச்சமூகத்திற்குள் ஊடுருவியிருப்பது தவிர்க்க முடியாததாகும். மிலாடிக்கின் கதை இதற்கு நல்லதோர் உதாரணமாகும். சேர்பியாவின் பெரும்பான்மையினர், இவர் குற்ற வழக்கிற்காக நாடு கடத்தப்படக்கூடாது என்று அபிப்பிராயப்பட்டனர். எங்கள் ஊரிலும் அப்படித்தானே. தென்பகுதிகளிலெல்லாம் ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை குறித்து இலட்சோப இலட்சம் அளவில் கையெழுத்து வேட்டை நடத்தப்படுவது, அதுவும் பௌத்த பிக்குகளினால் நடத்தப்படுவது கிட்டத்தட்ட சேர்பிய நிலைமைகளையே எமக்கும் காட் டுகின்றது. சமூகங்கள் மத்தியில் இனக் குரோதங்கள் மற்றும் பாகுபாடுகள் நிலவுதல், சுயாதீனமின்றிய நீதித்துறை இயங்குதல், போன்ற எங்கள் நாட்டிலுள்ள பிரச்சினைகளெல்லாம் வேறு பல நாடுகளிலும் இருக்கின்றன. இதுபோன்ற நாடுகளிலுள்ள பாதிக்கப்பட்டோர்களுக்கெல்லாம் சர்வதேச நீதியின் செயலாட்சி ஒரு பெரிய மீட்சியாகவே இன்று பிரசன்ன மாகியிருக்கின்றது.

எங்களவர்களுக்கெல்லாம் காலம் சரியில்லை, கிரகங்கள் எல்லாம் மாறிவிட்டன, என்று அதற்குத்தான் சொன்னோம். சரத் பொன்சேகாவை விட்டு வைத்திருந்தாலும்கூட அவர் தலையில் எல்லாவற்றையும் கட்டிவிட்டுத் தப்பியிருக்கலாம். இது ‘நான் ஒருவனேதான் யுத்த வெற்றிக்குக் காரணம்’ என்றுவேறு மார் தட்டியாகிவிட்டது. 6 பாதிரிமார்களுக்கும் 8,000 ஆண்களுக்கும் கழுத்தில் விழுந்த சுருக்கு 100,000 மக்களுக்கு இன்னும் எவ்வளவு இறுக்கமாக விழப் போகின்றது? இனி என்னதான் செய்யப் போகிறார்களோ?




# மீண்டும் ஏமாற்றப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள்

6 சுற்றுப் பேச்சு வார்த்தைகள், தொழிலாளர்களின் பணி பகிஸ்கரிப்பு போராட்டங்கள், சம்பள கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத் திடாத மலையக தொழிற் சங்கங்களின் கோரிக்கைகள். இப்படி கடந்த இரண்டு மாத காலமாக இழுபறியில் இருந்த தோட்ட தொழிலாளர்களின் சம்பள கூட்டு ஒப்பந்தம் கடந்த 6ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளது.

வழமைப்போல இம்முறையும் ஒப்பந்தம் தொழிலாளர்களின் நியாயமான எதிர்பார்ப்புகளை தவிடு பொடியாக்கியுள்ளதாக பலரும் அதிருப்தி தெரிவிக்கின்றனர். '500 ரூபா அடிப்படைச் சம்பளம் வழங்கப்பட வேண்டும்' என்ற கோரிக்கை வெறும் கோரிக்கையாகவே போய்விட்டதால் தொழிலாளர்கள் ஒப்பந்தத்திற்கு எதிராக தங்களது கடும் கண்டனத்தை















தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக அண்மையில் நுவரெலியா மாவட்டத்திலுள்ள ஹைபொரஸ்ட் தோட்டத் தொழிலாளர்க ளைச் சந்தித்து அவர்களது எண்ணங் களைத் தெரிந்து கொண்டோம்.

'எங்களது சம்பளப் பிரச்சினைக்கு நியாயமான முடிவு வராததுக்கு இந்த கூட்டு ஒப்பந்தம்தான் காரணம். இத முதல்ல இல்லாமல் செய்யணும். இப்ப இருக்கிற வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப இந்த சம்பள பிரச்சினைக்கு முடிவு வரல. ஒரு வீட்டில் ஒருவர் வேலை செய்து 5 பேர் சாப்பிட வேண்டிய கட்டாயம் இருக்கு. இந்த நிலையில மீண்டும் கூட்டு ஒப்பந்தம் என்ற பெயரில் ஏமாத்திட்டாங்க' என தனது ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார் தோட்டத் தொழிலாளியான வீரமணி.

கடந்த 2009ஆம் ஆண்டு கூட்டு ஒப்பந்தத்தில் அடிப்படைச் சம்பளமாக 285 ரூபாவும் வருகைக் கொடுப்பனவாக 90 ரூபாவும் ஊக்குவிப்பு கொடுப்ப னவாக 30 ரூபாவுமாக மொத்த சம்பளம் 405 ரூபா வழங்கப்பட்டு வந்தது. தற்போதைய இரண்டு வருடத்திற்கான ஒப்பந்தத்தின்படி அடிப்படை சம்பளமாக 380 ரூபாவும் வருகைக் கொடுப்பனவாக 105 ரூபாவும் தேயிலை மற்றும் இறப்பர் விலை உயர்வுக்கேற்ப நிரந்தர கொடுப்பனவாக 30 ரூபாவுமாக மொத்தச் சம்பளம் 515 ரூபா கிடைக்கவுள்ளது.

'இரண்டு ஒப்பந்தங்களிலும் பெரிதாக வித்தியாசம் ஒன்றுமில்லை. அடிப்படை சம்பளமாக 500 ரூபா கேட்ட தொழிலாளர்களுக்கு 380 ரூபாவே கிடைத்துள்ளது. இதில் சந்தோஷப்படுவதற்கு ஒன்றுமில்லை' என்கிறார் தொழிற்சங்கவாதியான மாரிமுத்து.

'நாங்க ஹைபொரஸ்ட்ல தான் இருக்கம். வாழ்கைச்செலவு ரொம்ப அதிகரிச்சிருக்கு, இந்த சந்தர்ப்பத்தில் எல்லாக்கட்சிக் காரங்களும் ஒன்றாகச் சேர்ந்து இந்தப் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வு பெற்றுத் தருவாங்கணு எதிர்பார்த்து, இப்ப ஏமாந்து போயிட்டோம். கட்சிகள் தங்களுக்கு இருக்கும் பிரச்சினைகளை இதில காட்டக்கூடாது. தொழிலாளர்களை இவர்கள் இம்முறையும் ஏமாத்திட் டாங்க' என்கிறார் தோட்டத் தொழிலாளியான மூக்கையா.

இத்தோட்டத் தொழிலாளியான மங்களேஸ்வரி 'நாள் சம்பளமாக 500 ரூபா கூட எங்களுக்குப் போதாது. வாழ்க்கை செலவை சமாளிக்கக் கூடிய வகையில எங்களுக்கு சம்பள உயர்வு வேணும்ணு எதிர்பார்த்து ஏமாந்து போயிட்டம். தலைவர்கள் எண்டு சொல்லித் திரியிறவங்க எங்க கஷ்டத்தை எப்பவுமே புரிந்து கொள்ள மாட்டாங்க' என்று அலுத்துக் கொண்டார்.

'தோட்டத்துல தலைவர்மார் இருக்காங்க, அத செஞ்சு தாறேன், இத செஞ்சு தாறேன் அப்டினு சொல்வாங்க. ஆனா, எதுவுமே நடக்காது. போக்குவரத்து, புள்ளங்க படிக்கிறது இப்படி எல்லா விசயத்திலும் நாங்க கஷ்டத்தைத்தான் அனுபவிக்கிறோம். கடன்லதான் வாழ்க்கை ஓடுது. இருக்கிறதுக்கு வீடுகூட இல்ல, ஆனாலும் இந்த சம்பள விசயத்திலாவது ஒழுங்கான முடிவு கிடச்சிருந்தா சந்தோஷப்பட்டிருப்போம். ஓட்டுக் கேட்கும்போது மட்டும் அதுக்குப் போடு இதுக்கு போடுனு சொல்வாங்க. ஆனால், அதுக்குப் பிறகு இந்த பக்கமே வாறதில்ல. மாடு மாதிரி கொழுந்த அறிச்சி கொட்டுறதுதான் மிச்சம். இப்ப ஏமாந்து நிக்கிறம்' என சலித்துக்கொண்டார் கந்தையா பரமேஸ்வரி.

தங்களது இந்நிலைமையை நினைத்து வருந்தியபடி நின்றுகொண்டிருந்த அருணாச்சலம் புஸ்பமணியிடம் இப் பிரச்சினை தொடர்பாக வினவியபோது;

'வீட்டில நான் மட்டும்தான் வேலை, என் கணவருக்கு முடியாது. இந்த நிலையில குடும்ப கஷ்டத்தை நாங்க எப்படி சமாளிக்கிறது. 500ரூபா தாறதா சொல்லி 380ஐக் கொடுத்து, திரும்பவும் ஏமாத்திட்டாங்க. அதுலயும் அதுக்கு இதுக்குனு சொல்லி கழிச்சிடுவாங்க. இன்னும் ரெண்டு வருசத்திற்கு இதப்பத்தி பேச்சே இருக்காது. நஷ்டம் எங்களுக்குத்தான். நாங்க கஷ்டப்பட்டு கொழுந்து எடுக்கிறதாலதான் இந்த நாட்டுக்கு பெரிய லாபமே கிடைக்கிது. ஓட்டுக்கேட்டு வரும்போது ரொம்ப பணிவா பேசுவாங்க, தொரமார்கிட்ட [தோட்ட நிர்வாகத்தினர்] போய் வீடு ஒழுகுதுணு சொன்னாக்கூட கடையில தகரம் இருக்கு வாங்கிப் போட்டுக்கங்கணு சொல்றாங்க' என்று உடைந்த தன் வீட்டுக் கூரையை எம்மிடம் காட்டினார். கடையில தகரம் இருக்கின்றதென்று அவர்களுக்குத் தெரியாதா? சாப்பிடுவதற்கே கஷ்டப்படும் இம்மக்கள் தகரம் வாங்க எங்கே போவார்கள்...?

இன்று தோட்டப்புறங்களிலுள்ள மரக்கறித் தோட்டங்களில் வேலைசெய்வோர்கூட நாள் சம்பளமாக 700 ரூபாவுக்கு மேல் சம்பாதிக்கின்றனர். ஆனால், வெயிலிலும் மழையிலும் மாடாய் உழைத்து நம் நாட்டுக்கு அந்நிய செலாவணியை பெற்றுத்தரும் இம்மக்களுக்கு வழங்கப்படுவதோ அடிமட்ட சம்பளம்தான். தற்போதைய புதிய ஒப்பந்தத்தின் படி அதிலும் 75 வீதமான நாட்கள் வேலை செய்யாவிட்டால் வருகை கொடுப்பனவான 105 ரூபாவும் இல்லை. இந்நிலையில் 515 ரூபா சம்பள உயர்வென்பது வெறும் கண்துடைப்பே.

**◀ ச. பார்தீபன் ▶**

தோட்ட தொழிற்சங்கங்களும் கம்பனிகளுடன் பலமுறை பேச்சு வார்த்தை நடாத்தி கிடைத்த பலன் ஒன்றுமில்லை. தோட்டத் தொழிலா ளர்கள் மீண்டும் இரண்டு வருடங்களுக்கு ஏமாற்றப்பட்டு விட்டார்கள். இவர்கள் போராடி கிடைக்கப்போவது ஒன்றுமில்லை. இவர்கள் சார்பாக தேர்தல்களில் போட்டியிட்ட தலைவர்களும் சரி, முதலாளிமார் சம்மேளனங்களும் சரி இவர்களுக்காக செய்யப்போவது ஒன்றுமில்லை. தோட்டத் தலைமைகள் அனைவரும் இவர்கள் விடயத்தில் மெத்தனப் போக்கை கடைப்பிடிப்பது தொழிலாளர்களைப் பார்க்கும்போது எமக்கு நன்றாகவே புரிந்தது.

இச்சந்தர்ப்பத்தில், தொழிலாளிகள் தான் தங்களுக்கான மாற்று ஏற்பாடுகளை செய்யவேண்டும். காலம் காலமாக அடிமட்ட சம்பளத்துக்கு அடிமையாக வாழ்ந்து பழக்கப்பட்ட இவர்கள் அதிலிருந்து வெளிவந்து தங்கள் வாழ்க்கை முறையை மாற்றியமைக்க வேண்டும். அன்றேல் அவர்களுக்கு விடிவில்லை

நேரடி ரிப்போர்ட்

# 'நாங்கள் உழைக்க வேண்டும் என்பதால் எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு இருக்கிறோம்'

## கொட்டாஞ்சேனை ஆட்டோ ஓட்டுநர்கள்



இன்று எமது அனைத்து அவசர தேவைக்கும் கை கொடுக்கும் போக்குவரத்து அயலவன் ஆட்டோ தான். இக்கட்டான சூழ்நிலைகளில் அதிக நேரம் பஸ்ஸுக்காக காத்திருக்க வேண்டிய அவசியமே இல்லை. வீதியில் வரும் ஆட்டோவை கையைக்காட்டி நிறுத்தி போகவேண்டிய இடத்தை மட்டும் கூறினால் போதும். சந்து பொந்துகளிலெல்லாம் புகுந்து எம்மைச் சேரவேண்டிய இடத்திற்கு கொண்டு சேர்த்துவிடுவார்கள். ஆட்டோக்களில் பயணம் செய்யும் பிரயாணிகளுக்கும் சரி ஆட்டோக்காரர்களுக்கும் சரி பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன. சில நேரம் ஆட்டோக்காரர்களுடன் மக்கள் முரண்படுவதும் உண்டு. அதேவேளை ஆட்டோக்காரர்களுக்கும் பொலிஸார் மற்றும் பிரயாணிகளால் பிரச்சினைகள் ஏற்படத்தான் செய்கின்றன. பொதுவாக ஆட்டோ ஓட்டுபவர்களின் முழுக்குடும்பமும் அந்த ஆட்டோ சவாரியின் வருமானத்தில்தான் தங்கியிருக்கும். சில நேரம் பயணிகள் கூட அதுபற்றி சிந்திப்பது கிடையாது. அதுமட்டுமல்ல வீதியோர பொலிஸாரால் அதிகம் கண்காணிக்கப்படும் ஒரு வாகனமும் ஆட்டோதான்.



தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின்ற கொட்டாஞ்சேனைக்கு காலை வேளையில் சென்றிருந்தோம். அன்று வெள்ளிக்கிழமையாதலால் அதிகமானோர் கோயிலுக்கும் ஏனைய தேவைகளுக்காகவும் ஆட்டோக்காரர்களை வழிமறிப்பதும் ஆட்டோ தரிப்பிடத்தில் பேரம் பேசுவதுமாக காணப்பட்டார்கள்.

'தம்பி பொரள்ள போகணும் எவ்வளவு ஆட்டோவுக்கு' என்றார் ஒரு பெண்மணி. 'ஆட்டோ ஆட்டோ... பஸ் ஸ்டான்டுக்குப் போகணும்' இது வெளியூரிலிருந்து வந்த ஒருவர். 'மிஸ் என்ட கொகேத யன்னே?' இது அப்பகுதி ஆட்டோ சாரதியொருவர்.

சற்று நேரம் அவர்களுடைய உரையாடல்களைக் கவனித்துக் கொண்டிருந்த நாம் அருகில் சென்று எம்மை அறிமுகப்படுத்திக்கொண்டோம். எல்லோரும் நாட்டு நடப்புகளை விளாசித் தள்ளிக்கொண்டிருந்தார்கள். நாமும் அவர்களுடைய பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொள்வதற்காக அவர்களுடன் சேர்ந்துகொண்டோம்.

க. மாலா

முதலில் எம்மிடம் கதைத்தவர் பரடைஸ் பிளேசில் வசிக்கும் 45 வயதான ஆறுமுகம் லோகநாதன் என்பவர். வேலை நிமித்தம் இவர் தற்போது கொட்டாஞ்சேனை கல்பொத்த வீதியில் அமைந்துள்ள ஆட்டோ தரிப்பிடத்தில் ஆட்டோவை தரித்து தொழில்செய்கின்றார். அவரிடம் அவரது தொழில் மற்றும் வருமானம் பற்றிக் கேட்டோம்.

'ஒரு வருசமாத்தான் இங்க ஆட்டோ ஓட்டுறன் தங்கச்சி. பினான்ஸ்லதான் ஆட்டோ எடுத்தனான். மாதாமாதம் 9,800 ரூபாய் கட்டுறன். நாலு பிள்ளைகள் இருக்கிறாங்க. இதால வாற வருமானம் போதாது. என்னதான் செய்யிறது. ஒரு நாளைக்கு 1200 ரூபா கிட்ட உழைப்பன். பெற்றோல் செலவு, அதுல வேற பொலிஸ்காராக்கள் பிடிச்சி எழுதிப் போடுவாங்கள். எல்லாம் போக எப்படியும் வீட்டுக்கு 1000 ரூபா கொடுக்கணும். பிள்ளைகளிண்ட செலவு, சாப்பாட்டுச் செலவெல்லாம் பார்த்தால் எடுக்கிற காசு கட்டாது' என்று வீதியை வெறித்துப் பார்த்துக்கூறிய லோகநாதன் முன்னர் ஒரு சிறந்த உதைபந்தாட்ட வீரராக இருந்தவராம். தனது உடம்பும் வயதும் தற்போது ஒத்துழைக்காமையால் ஆட்டோ ஓட்டி தன் குடும்ப சுமையைச் சுமப்பதாக கூறினார்.

'சிலர் கேட்காம ஏறிப்போட்டு நாங்க விலையைச் சொன்னால் காசை வீசிப்போட்டுப் போவாங்க. என்ன செய்யிற.. நாங்க உழைக்க வேணும். அதால எல்லாத்தையும் தாங்கிக் கொள்ளுறம்' என்று அவர் கூறும்போது எமக்கே கவலையாக இருந்தது.

அவரிடமிருந்து கனத்த வேதனையுடன் திரும்பும்போது, சவாரி இல்லாமல் அன்றைய தினசரியைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்த 40 வயது நிரம்பிய ஸாஹிரை அணுகினோம்.


லோகநாதன்


ஸாஹிர்


ரவீந்திர பெரேரா


பிரதீபன்

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் 19 வருடங்களாக ஆட்டோ ஓட்டும் தொழிலைச் செய்து வருகின்றார். 'நான் கூலிக்குத்தான் ஆட்டோ ஓட்டுறன். ஒரு நாளைக்கு வாடகை 250 ரூபா கொடுக்கணும். ஆட்டோ ஹயர் ஓடினாலும் ஓடாட்டியும் கூலி சல்லி கொடுத்தே ஆகணும். சில நேரம் நல்ல ஹயர் கிடைக்கும். சில நேரம் குறைவாகத்தான் கிடைக்கும். மழை நேரங்கள்ல எதுவும் கிடைக்காது. வாறவங்களும் வந்து ஹயர் பேசிப்போட்டு பிறகு வேணாம் எண்டு போவாங்க' என்றவர் தான் ஆட்டோ ஓட்டும் போது நிகழ்ந்த ஒரு மறக்க முடியாத சம்பவத்தை எம்மிடம் பகிர்ந்துகொண்டார்.

'15 வருசத்துக்குமுன் யாழ்ப்பாணத்தில இருந்து வந்திருந்த ரெண்டு பேர் எண்ட ஆட்டோவில ஏறினாங்க. அவங்க கொட்டிகாவத்தையில போய் இறங்கின பிறகு நான் எண்ட ஸ்டான்ட்டுக்கு வந்திட்டன். அப்ப அவங்கட பேக் ஆட்டோவில இருந்தது. அதுக்குள்ள ஒரு 15 பவுண் நகை, 66 ஆயிரம் ரூபா காசு, ஜேர்மன் போறதுக்கு பாஸ்போர்ட், வீசா எல்லாம் இருந்திச்சி. நான் திரும்பிப் போய் அவங்க இறங்கின இடத்தில அதெல்லாம் குடுத்து போட்டு வந்தன். எண்ட ஹயர் காசை மட்டும்தான் வாங்கினேன். எனக்கு அல்லாஹ் தாறதே போதும்' என்று நெஞ்சில் கையை வைத்தார். இப்படிப்பட்ட நல்லவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள் என்று நினைத்தபடியே, தன் ஆட்டோ முன்பாக நின்றுகொண்டு போவோர் வருவோரையெல்லாம் சவாரிக்காக கூவியழைத்துக்கொண்டிருந்த ஆட்டோ ஓட்டுநர் ரவீந்திர பெரேராவிடம் சென்று உரையாடினோம். 20 வருடங்களுக்கு மேல் இப்பகுதியில் வசிக்கும் இவர் பத்து வருடங்களாக ஆட்டோ ஓட்டுகின்றாராம். இவரும் வாடகைக்கே ஆட்டோ ஓட்டுகின்றார். இவரிடம் பிரச்சினைகள் பற்றி கேட்டபோது.

'பெற்றோல் அடிக்கடி கூட்டுவாங்க குறைப்பாங்க. ஆனால் ஆட்டோவில போறவங்ககிட்ட கொஞ்சம் காசைக்கூட்டிக் கேட்டால் தரமாட்டாங்க. ஒரு டயர் விலை 2250 ரூபாய் போகுது., முதல் 450 ரூபாய் வித்தவங்க். இப்ப எல்லாம் விலைதான். இப்ப முன்ன மாதிரி இல்ல. எங்க பாத்தாலும் ஆட்டோதான். சில ஆக்கள் ஸ்டான்டுக்கு கிட்ட வந்து றோட்டால போற ஆட்டோவை பிடிப்பாங்க. ஆனால் ஆட்டோ பிடிக்கிறாக்கள் ஸ்டான்ல பிடித்தால் தான் பாதுகாப்பா இருக்கும். பெறுமதியான பொருள ஆட்டோவில விட்டுப்போனாலும் எடுத்துக்கொள்ளலாம். கொஞ்ச நாளைக்கு முதல் பக்கத்திலிருக்கும் கீல்ஸ் சுப்பர் மாக்கட்டில் 8000 ரூபா பெறுமதியான சாமானை வாங்கி றோட்டில போன ஆட்டோவை பிடித்துபோயிருக்கிறார்கள் இரண்டு பெண்கள். அப்ப பாமசில கொஞ்சம் நிப்பாட்டி வைத்து விட்டு மருந்து வாங்க போய் வரும் போது ஆட்டோவும் இல்ல சாமானும் இல்ல எண்டு அழுது கொண்டு நின்றார்கள்' என்று அவர் கூறும்போது எனக்கும் சற்று உண்மை உறைத்தது.

அப்படியே அவர்களைக் கடந்து நடந்து செல்லும் போது கொட்டாஞ்சேனை சந்தியில் ஆட்டோவை நிறுத்தி வைத்துவிட்டு கன்னத்தில் கையைவைத்து சிந்தித்துக்கொண்டிருந்த பிரதீபனை அணுகினோம். அவரது முகத்தைப் பார்க்கும்போது ஏதோ ஒரு கவலை மனதில் இருப்பதை உணர்ந்தோம். திருமணம் முடித்து மனைவி கர்ப்பமாக இருக்கின்றாராம். தான் வாடகை வீட்டில் வசித்துக்கொண்டு வாடகை ஆட்டோவைத்தான் ஓட்டுகின்றாராம்.

'வீட்டு வாடகை மட்டும் மாதம் 2500 ரூபா கொடுக்கணும். ஆட்டோ கூலி ஒரு நாளைக்கு 300 ரூபாய். இதெல்லாம் கொடுத்து முடிய வீட்டு செலவுக்கே பத்தாது. அடிக்கடி பொலிஸாலையும் பிடித்து எழுதிடுவாங்க. இதால உழைக்கிற காசு போதவே போதாது. இந்த இடத்தைப் பொறுத்தவரையில நிறைய தமிழ்ச்சனங்கள்தான் வந்து ஏறுவாங்க. சிங்கள ஆக்களும் வருவாங்கதான். மழை வந்து வெள்ளம் நிண்டால் ஆட்டோவே ஓடமுடியாத நிலை. வீட்டில தான் இருக்கணும்' என்று அவர் மனவேதனைப்பட்டார். இப்படி எல்லாப்பக்கமும் பிரச்சினை மிகுந்த ஒரு வாழ்க்கையாகத்தான் ஆட்டோ ஓட்டுநர்களின் வாழ்க்கை ஓடுகின்றது. அதற்கிடையில் அதிகரித்து வரும் விலைவாசிகளும் எரிபொருள் விலையேற்றங்களும் அவர்களது கழுத்தை இறுக்குகின்றன.

ஆட்டோதானே என்று நாம் இலகுவாக நினைத்துவிடக் கூடாது. அவர்களுக்கும் ஆயிரம் பிரச்சினைகள். பயணி களும் அவர்களை மதித்து நடந்துகொள்ள வேண்டும். தெரியாத ஆட்டோவில் சென்று தங்களுடைய உடைமைகளைப் பறிகொடுத்த சம்பவங்கள் உங்களுக்கும் நடந்திருக்கலாம். தெரியாதவர்களிடம் எங்குபோய்க் கேட்பது? நாம் இலகுக்காக வழியில் செல்லும் ஆட்டோவையே மறித்து செல்வோம். பின்விளைவுகள் பற்றி யோசிப்பதில்லை. அதேபோல கொழும்புக்கு புதிதாக வருபவர்களை 'ஹயர்' என்ற பெயரில் கொழும்பைச் சுற்றிக்காட்டும் ஆட்டோக்காரர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

படங்கள்: ச. பார்தீபன்

எது எப்படியோ சரியானதைத் தேர்ந்தெடுக்கவேண்டியது எமது கையில்தான் இருக்கின்றது. அரசும் இவர்களுக்கு மானிய அடிப்படையில் ஆட்டோ வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முயற்சிக்கவேண்டும். எரிபொருள் விலையேற்றமும் அவ்வப்போது அதிகரித்து வருவதால் ஆட்டோ ஓட்டுநர்சங்கங்களினூடாக இவர்களுக்குகுறைந்தவிலையில் நிர்ணயிக்கப்பட்டஎரிபொருளைப்பெற்றுக்கொடுப்பதன்மூலம் ஒரளவாவது இவர்களுடைய பொருளாதார சுமைகளைக் குறைக்கலாம். காரணம்வாடகைஆட்டோஒட்டும்போது எப்பாடுபட்டேனும் அவர்கள் அன்றைய தினம் கூலி கட்ட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகின்றனர். அன்றைய தினம் சவாரியே இல்லாவிட்டாலும் அவர்கள் கட்டித்தான் ஆகவேண்டும். இங்குள்ள அனைவருமே அன்றைய வருமானத்தில்தான் தங்கள் காலத்தை ஓட்டுகின்றார்கள். ஆகவே இவர்களுக்கான நிரந்தர வருமானம் ஒன்றை பெற்றுக்கொடுக்கும் ஒரு வழியை உரியவர்கள் செய்துகொடுப்பார்களா?

# 6 மாதங்களுக்கென கொடுத்த அகதிமுகாமில் 7 வருடங்களாக வாழும் சாய்ந்தமருது மக்கள்




நேரடி ரிப்போர்ட்



நிரந்தர வீடுகளுக்காக தற்போது அடிக்கல் நாட்டப்பட்டுள்ள இடம்

இலங்கையில் 2004இல் இடம்பெற்ற சுனாமி பேரனர்த்தத்தில் அதிகமாகப் பாதிக்கப்பட்டது கிழக்கு மாகாணமே. அதிலும் குறிப்பாக மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலுள்ள மக்களே அதிகமாகப் பலியானார்கள். மேலும் பல்லாயிரக்கணக்கானோர் அகதிகளாகினர். அவர்களில் பலர் மீள்குடியேறிவிட்டனர். ஆனாலும், இன்னும் சில குடும்பங்கள் தற்காலிக கூடாரங்களிலேயே தமது காலத்தைக் கழித்து வருகின்றன.

சாய்ந்தமருதில் மட்டும் சுனாமி அனர்த்தத்தில் 2010 பேர் பலியாகினர். இன்னும் பல்லாயிரக்கணக்கானோர் அகதிகளாக்கப்பட்டனர். அண்மையில் சாய்ந்தமருதுக்கு விஜயம் செய்தபோது இவ்வாறானதொரு அகதிமுகாக்குச்சென்றிருந்தோம். சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளி வாசல் வளாகத்தின் பின்னால், கரைவாகுப்பற்று வயற்காணியருகில் ஆற்றுக்கு சமாந்தரமாக இந்த அகதிமுகாம் அமைக்கப்பட்டிருந்தது.



கரைவாகுப்பற்று காணியில் 'பொலிவேரியன் கிராமம்' என்றொரு மாதிரிக் கிராமம் உருவாக்கப்பட்டு, அங்கு சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர். ஆனாலும், இன்னும் சுமார் 30 குடும்பங்கள் மீள் குடியேற்றப்படாமல் அந்த அகதிமுகாமில் இருக்கின்றன.

தகரம், 'பிளைவூட்' பலகையினால் அந்த தற்காலிக கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. நாங்கள் அங்கு விஜயம் செய்தபோது அதிகமானோரை அங்கு காணமுடியவில்லை.

'இண்டைக்கு கரண்ட் போயிட்டு. இந்தக் கூடாரத்துக்குள்ள கடும் வெக்கயாக் கெடக்கு, அதான் பக்கத்துல காத்து வாங்கப் போனாம்' என்று கூறிக்கொண்டு எம்மிடம் வந்தார் அன்சார்.

அவர் மேலும் தனது ஆதங்கங்களை எம்மிடம் கொட்டித் தீர்த்தார். 'நான் நாளாந்தம் கூலித்தொழில் செய்றன். எனக்கு 35 வயசாகுது. எங்கட குடும்பத்துல மூணு ஆம்புளயல், ரெண்டு பொம்புளயல் இரிக்கோம். எங்கள ஆறு மாசத்துக்குத்தான் இங்க இரிக்கச் சொன்னாங்க. ஆனா, இப்ப ஆறு வரிசம் முடிஞ்சி, ஏழு வருசமாக இங்கதான் இரிக்கோம். இங்க ஆத்துக்குப் பக்கத்துல இரிக்கிறதால புழு, பூச்சிகள், பாம்பு, நொளம்புக் கடிக்குள்ளதான் நாங்க வாழுறம். புள்ளயளுக்கு ஒழுங்கான பாதுகாப்பு வசதிகளும் இல்ல.

◀ முஹம்மட் பிறவ்ஸ் ▶

ஆறு மாசத்துக்குள்ள வீடு தாறம் எண்டு சொன்னவங்க, கிட்டத்துலதான் மீன்பிடித்துறை அமைச்சால அடிக்கல் நாட்டிட்டுப் போனாங்க, ''இபார்ட்'' நிறுவனத்தால வீடு கட்டுறதாச் சொன்னாங்க. இப்ப அடிக்கல் நாட்டி ஒரு மாசமாகுது ஒண்டையும் காணல்ல' என்றார் ஏமாற்றமடைந்த தொணியில்...

தங்களுடைய கூடாரங்கள் கடந்த வெள்ள அனர்த்தத்தினால் இடிந்துபோய் விட்டதாகக்கூறி எம்மிடம் முறையிட்டார். அவரது தற்காலிக கூடாரத்தினுள் எம்மை அழைத்துச்சென்று காட்டினார். அங்கும் இங்குமாக பொத்தல்களுடன் கூடிய தரையும், பிய்ந்துபோன வேலிகளுக்கும் மத்தியில் இரு குழந்தைகள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தன. பார்த்த எங்களுக்கே கண்ணீர் எட்டிப்பார்த்தது. போதியளவு இடவசதி இல்லாமல் அன்சாரினுடைய மகள், வீட்டு முற்றத்தில் கல்லை அடுக்கிவைத்து அதில் சமைத்த காட்சியையும் எம் கண்கள் காண்பதற்கு தவறவில்லை.

'இப்ப அடிக்கல் நாட்டின இடத்துல அவசரமா எங்களுக்கு வீடு கட்டித் தந்தா நல்லம். எங்கட டீ.எஸ். சொல்லியிருக்கார், சீக்கிரமா வீடு கட்டித்தருவோம் எண்டு. நாங்க எல்லாரும் அவர்ர பேச்சத்தான் நம்பியிருக்கோம்' என்றார் அங்கு வசிக்கின்ற அப்துல் முனாபிர்.

'எனக்கு ரெண்டு பொம்புளப் புள்ளயல் இரிக்கி. அவங்க ரெண்டு பேரும் ஸ்கூல் போறாங்க. அவங்களுக்கு இங்க சரியான பாதுகாப்பு வசதிகள் இல்ல. இங்க இருந்து ஸ்கூல் போறது ரொம்ப கஷ்டம்' என்று முனாபிர் வேதனையுடன் தெரிவித்தார்.

தற்போது இவர்களுக்குத் தேவையான மின்சாரம் மற்றும் குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால், இங்கு நேரடியாகவே மின்சாரம் வழங்கப் படுகிறது. தகட்டுக் கூடாரத்திற்கென எந்தவிதமான பாதுகாப்பு வசதிகளும் இல்லை. தங்களது கூடாரத்தினை திருத்தியமைக்க தடிகள், தகரம், சீமெந்து என்பனவும் கொடுத்ததாக அங்கு வாழ்கின்ற ஒருவர் தெரிவித்தார்.

'போன வெள்ளத்தால கூடாரம் ஓட்டையும் ஓடசலுமா இரிக்கி. நாங்க அதயெல்லாம் பொத்தல்போட்டுக்கொண்டு வாழுறம். கறையான், கடியன், பூராண், பாம்பு, புழு, பூச்சியெல்லாம் இங்க வருது. அத எங்களால கட்டுப்படுத்த ஏலாது' என்று முனாபிர் சொல்லும்போது அவரது முகத்தில் சோகம் தழும்பியது.

அகதிமுகாமில் வாழும் இவர்கள் கடந்த வெள்ளத்தின்போது இரண்டாவது தடவையாக மீண்டும் அகதிகளாக இடம்பெயர்ந்து வாழ்ந்த கதையைக் கேட்டபோது அவர்களது சோகத்தை எம்மால் ஜீரணிக்கமுடியாமல் போனது.

'சுனாமி அடிச்சி 7 வரிசமாச்சி. ஆனா, எங்கள பகடக் காயாகக் காட்டி இங்க உள்ள அரசாங்கமும் உத்தியோகத்தர்களும் எமாத்துறாங்க. எலக்ஷன் வந்தா நாங்க சிறுநீர் கழிக்கிற இடத்தில வந்து, காக்கா... மச்சான்... நாங்க எம்.பி.யாகணும். நம்மட பிரச்சினய நாமதான் தீர்க்கணும் எண்டு வோட்டுக் கேட்டுப் போன எந்த எம்.பி.யும் மினிஸ்ட்டரும், வெண்டதுக்குபொறகு இந்தப்பக்கம் வந்து எட்டிப் பாக்குறதே இல்ல' என்று தனது மனக்குமுறலை எம்மிடம் கொட்டித் தீர்த்தார் அங்கு வசிக்கின்ற கூலித்தொழில் செய்யும் மன்சூர்.



அன்சார் | முனாபிர் | மன்சூர்

'இங்குவந்து அவர்களால் ஒருநாளைக்காவது இருக்க முடியுமா' என்று தனது தனிப்பட்ட கருத்தை அரசியல்வாதிகளிடம் முன்வைத்தார் அவர்.

'இங்க இண்டைக்கு இரவைக்கு எண்டாலும் வாழக்கூடிய கொமருகள் இருக்குது. ஆனா, கலியாணம் முடிக்க வீடு இல்ல. வீடு இல்லாம எங்க குடும்பம் நடத்துற...? நாங்க மக்கள்ர பிரச்சினய தீர்ப்பாங்க எண்டு வோட்டுப் போட்டா, அவங்க அங்க பலாக்கன்று நாட்டுறாங்க, இங்க மாங்கன்று நாட்டுறாங்க. லிபியாவுக்கு, ஜப்பானுக்கு, கனடாவுக்கு போறாங்க. நாங்க இவங்களுக்கு இதுக்கு வோட்டுப் போடல்ல. ஒரு வோட்டுட பெறுமதி எங்களுக்குத்தான் தெரியும்' என்றபோது அவரது கண்கள் கலங்கின.

'இங்குள்ள எந்த அரசியல்வாதியும் மக்களை நேரடியாகப் பார்த்து இவர்களது பிரச்சினைகளைத் தீர்க்க முன்வருகிறார்கள் இல்லை' என்பதே அங்குள்ள மக்களின் ஆதங்கமாக இருந்தது. தாங்கள் இருக்கின்ற ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாகம்கூட இவர்கள்மீது அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. அங்கு விஜயம்செய்த அமைச்சர் றிசாத் பதியுதீன் 'நீங்கள் சுனாமி அடித்து இப்போதும் அகதிமுகாமில் இருக்கிறீர்கள் என்பதைக் கேட்கும்போதே எனக்கு வெட்கமாக இருக்கின்றது. இங்குள்ளவர்கள் என்ன செய்கிறார்கள்' என்று கேட்டதாகவும் மேலும் தெரிவித்தார்கள்.

இவர்கள் தங்களது நிரந்தர வீட்டுக் கோரிக்கைகளை முன்வைக்க கால்நடையாக ஜனாதியிடம் செல்ல முயற்சித்தபோது, 'உங்களுக்கு வீடுகள் விரைவில் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படும்' என்ற சாய்ந்தமருது பிரதேச செயலாளரின் வேண்டுகோளை ஏற்று அமைதியாக இருப்பதாகவும் தெரிவித்தனர்.

இது சம்பந்தமாக பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸை தொடர்பு கொண்டு கேட்டபோது; 'ஆரம்பத்தில் வெனிசூலா நாட்டினால் G+3 தொடர்மாடி வீடுகளை அமைக்க 400 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், மக்களின் வேண்டுகோளுக்கிணங்க தனித்தனி வீடுகள் அமைக்க அதிகளவான காணிகள் தேவைப்பட்டதால், கரைவாகுப்பற்று வயல் காணியை நிரப்ப எதிர்பார்த்ததை விட அதிகளவான நிதி செலவாகியது. இதனால், 200 அளவிலான வீடுகளையே கட்ட முடிந்தது. அதன்பின்னர் மீன்பிடித்துறை அமைச்சுடன் இபார்ட் நிறுவனம் இணைந்து 90 வீடுகளைக் கட்டிக்கொடுத்தது.


இன்னும் 300 வீடுகள் அளவில் கட்ட வேண்டியிருக்கின்றது. 'இபார்ட்' நிறுவனத்தால் மீண்டும் 60 வீடுகளுக்கு தற்பொழுது அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. ஆனால், முகாம்களிலுள்ள மக்களின் வேண்டுகோளுக்கிணங்க தற்போது அவ்வீடுகள் 120ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள மக்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்க அல்லது அவர்களது இடங்களிலேயே வீடுகளைக் கட்டுவதற்கான நிதியைக் கொடுப்பதற்கு அரசாங்கம் உறுதியளித்துள்ளது' என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

படங்கள்: றிம்ஸான்

ஏழு வருடங்களாக 'அகதிகள்' என முத்திரை குத்தப்பட்ட இவர்களது இன்னல் வாழ்க்கை இன்னமும் தற்காலிக கூடாரங்களுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கின்றது. அடிக்கல் நாட்டுவதும், வாக்குறுதிகளை அள்ளி வீசுவதிலும் சம்பந்தப்பட்டவர்கள் குறியாக இருக்காமல் இம்மக்களது பிரச்சினைகளை தீர்க்க முன்வரவேண்டும். வீடுகளுக்கு அடிக்கல் நாட்டிய நிலையில் அங்குள்ள மக்கள் இன்று கட்டித்தருவார்கள், நாளை கட்டித்தருவார்களென காத்திருந்து ஏமாற்றத்தையே சந்தித்துள்ளனர். எனவே, அடிக்கல் நாட்டப்பட்ட வீடுகளை உடனே கட்டிக்கொடுக்க உரியவர்கள் முன்வரவேண்டும்.

ஊர் சுற்றி...

எஸ்.எம்.கோபாலரத்தினம் (கோபு)




# கல்வியும் விற்பனைப் பொருளாகிவிட்டது

பட்டிப்பளை பாடசாலையில் விடுமுறை நாட்களில் உயர்வகுப்பு பிள்ளைகளுக்கு வகுப்பு நடாத்துவதற்காக அதிபரும் தேவையான ஆசிரியர்களும் வந்து கல்வி கற்பிப்பதைப் பார்த்ததும் எனக்கு நான் கல்லூரியில் படித்த காலம் நினைவுக்கு வந்தது. அது மட்டுமல்ல இன்று அதிகாலையிலும் மாலையிலும் மட்டுமல்ல விடுமுறை நாட்களிலும் ஏன், பாடசாலை நாட்களிலும்கூட மாணவ மாணவிகள் 'டியூட்டரிகளை' நாடிச் செல்லும் காட்சி கண்முன்னே வந்தது.

பட்டிப்பளை பாடசாலை அதிபர், ஆசிரியர்களைப் போன்றுதான் நான் படித்த யாழ்ப்பாணம் இராமகிருஷ்ணமிஷன் வைத்தீஸ்வரா கல்லூரியிலும் சில பாடங்களுக்கு மாணவர்களை விடுமுறை நாட்களிலும் கல்லூரிக்கு வரச்சொல்வார்கள். அதற்குரிய ஆசிரியர்கள் வந்து பாடம் நடத்துவார்கள்.

எனக்கு கணக்குப் பாடம் வேப்பங்காய். எப்படித்தான் கணித ஆசிரியர் சொல்லித் தந்தாலும் மூளையில் ஏறவே மறுத்தது. இதனால் கணிதம் படிப்பித்த வைத்திலிங்கம் மாஸ்டர் காலையில் என்னை தனது வீட்டுக்கு வரச்சொல்லி, தேநீரும் தந்து கணக்குச் சொல்லிக் கொடுத்தார். இதேபோல, வேறு பாடங்களில் சங்கடப்படும் பிள்ளைகளுக்கு அக்காலத்திலேயே வேறுசில கல்லூரிகளிலும் அதிபர்களும் ஆசிரியர்களும் அக்கறையெடுத்து விடுமுறை நாட்களைத் தியாகம் செய்து மாணவ மாணவிகளுக்கு கல்வியூட்டினர். இதனால்தான் இன்றும் அந்தப் பாடசாலைகள், கல்லூரிகளில் படித்த மாணவ மாணவிகள் முதுமையடைந்த நிலையிலும் தாங்கள் படித்த கல்விக்கூடங்களையும் தங்களுக்கு படிப்பித்த ஆசிரியர், ஆசிரியைகளையும் சந்திக்கும் போதெல்லாம் நினைவுகூர்ந்து பேசிக்கொள்கிறார்கள்.

இன்றும் ஆசிரியர்கள் விடுமுறை நாட்களிலும் ஏன் மாலை வேளைகளில்கூட மாணவ மாணவிகளுக்கு கல்வி போதிக்கத்தான் செய்கிறார்கள். எப்படி...? மூளைக்கு மூளை முளைத்திருக்கும் 'டியூட்டரிகள்'



என சொல்லப்படும் தனியார் கல்வி மீட்டல் நிலையங்களில் இந்த ஆசிரியர்கள் சென்று கல்வி போதிக்கின்றார்கள். வெவ்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த பிள்ளைகள் வெவ்வேறு ஆசிரியர்களிடம் பயில்கின்றனர். சிறப்பாக போதிக்கும் ஆசிரியர்கள், பிள்ளைகள் மத்தியில் நல்ல பெயர் பெறுகின்றனர். இதனால் அவர்கள் பாடம் சொல்லிக்கொடுக்கும் டியூட்டரிக்குள் பிரசித்தி பெறுவதுடன் நல்ல வருமானமும் பெறுகின்றனர். இவைதவிர வாரமொரு நாள் பாடம் சொல்லிக்கொடுத்து மாதம் 500-600 ரூபா வருமானம்பெறும் ஆசிரியர், ஆசிரியைகளும் இருக்கின்றனர். படிப்பை முடித்துக் கொண்டவர்களும் வகுப்பெடுப்பதும் உண்டு. [எஸ்.எஸ்.சி.-முன்பு சிரேஷ்ட பாடசாலை சான்றிதழ் பரீட்சை என்று வழங்கப்பட்ட பரீட்சைதான் இன்று க.பொ.த [சா/த] என்று வழங்கப்படுகின்றது. எச்.எஸ்.சி. என்ற உயர்கல்வி சான்றிதழ் வகுப்பு க.பொ.த. [உ/த] என்று அழைக்கப்படுகின்றது. இந்தியாவில் இவ்வகுப்புகள் பிளஸ்-1, பிளஸ்-2 என அழைக்கப்படுகின்றன.]

டியூட்டரிகள் இப்போது எங்கும் பரவிவிட்டன. முன்பெல்லாம் கல்வி கற்பதற்குக்கூடபணம்தட்டுப்பாடாகஇருந்தது. யாழ்ப்பாணத்தில் 'அமெரிக்க மிஷனரிகள்' என்று கிறிஸ்தவ அமைப்புகள் கல்விக்கூடங்களை அமைத்தன. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கையில் பல பாகங்களிலும் கிறிஸ்த அமைப்புகள் கல்விக்கூடங்களைத் தொடங்கின. கல்விக்கூடங்கள் மட்டுமல்ல மருத்துவ நிலையங்கள் சிலவற்றையும்கூட இந்த அமைப்புகள் ஆரம்பித்தன. சேவை மனப்பான்மையுடன் கல்வி நிலையங்களும் மருத்துவ நிலையங்களும் தொடங்கப்பட்டாலும் மதமாற்றம் அடிப்படை நோக்கமாக இருந்தது. பலர் மதம் மாறினார்கள். சைவப் பெயர்களின் முன்னால் அல்லது பின்னால் கிறிஸ்தவப் பெயர்கள் ஒட்டிக்கொண்டன.

இந்நிலையில் சைவப் பிள்ளைகள் கல்விக்காக மதம் மாறுவதைத் தடுப்பதற்காக சைவப் பெரியார்கள் சிலர் கலந்தாலோசனை செய்து 'சைவ வித்யா விருத்திச்சபை' என்ற ஓர் அமைப்பை உருவாக்கினார்கள். சைவக் கோயில்களுக்கு அருகே வேதக் கோயில்கள் [கிறிஸ்தவ] அந்நியர் ஆட்சிக்காலத்தில் முளைத்ததுபோலவே சைவ வித்யா விருத்திச் சபையின்சைவப்பள்ளிக்கூடங்கள்அருகேயும் மிஷனரிப் பள்ளிக்கூடங்களும் அமைந்தன. சைவ வித்யா விருத்திச் சபையிடம் போதிய பணவசதி இருக்கவில்லை. ஓலையால் வேயப்பட்ட கொட்டில்களில் சைவப் பள்ளிக்கூடங்கள் ஆரம்பித்து நடத்தப்பட்டன. 'சோனியத்தெரு சன் மார்க்க துவிபோஷா போதனா பாடசாலை' என்ற பாடசாலையில்தான் நான் ஆரம்பக் கல்வியை கற்கத் தொடங்கினேன். இது அக்காலத்தில் சோனியத்தெரு சைவப் பள்ளி என்று வழங்கப்பட்டது. இதற்கும் அருகே இருந்த வேதப் பள்ளிக்கும் ஒரு வேலிதான் தடுப்பாக இருந்தது. இப்பொழுது சன்மார்க்க போதனா பாடசாலை மட்டுமே நன்கு வளர்ச்சி பெற்று பல கட்டிடங்களுடன் மிளிர்ந்து கொண்டிருக்கின்றது.

நான் ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்த காலத்தில் அது சைவ விருத்தி சபையினால் நிர்வகிக்கப்பட்டிருந்தது. ஆசிரியர்களுக்கு சம்பளம் குறைவு. நவராத்திரி, சரஸ்வதி பூஜை காலத்தில் பாடசாலையில் படிக்கும் பிள்ளைகளில் வசதியான பிள்ளைகளின் வீட்டுக்கு நாங்கள் 10-12 பிள்ளைகளாகப்போய் கலைவாணியைப் பற்றியும் எங்கள் பாடசாலையைப் பற்றிப் பாடல்கள் பாடுவோம். வீட்டுக்காரர்கள் கடலை, அவல் தந்து உபசரிப்பார்கள். பின்னர் எங்களது குழுவின் பெரிய மாணவரிடம் பாடசாலைக்கு நிதியும் தருவார்கள். அதை நாங்கள் கொண்டுவந்து தலைமை ஆசிரியரிடம் கொடுப்போம். அந்நிதியை மனேஜர் [இந்து போட் இராசரத்தினம் ஐயா] அவர்களிடம் சேர்ப்பிப்பார்கள்.

இப்படித்தான் யாழ்ப்பாணத்தில் சைவப் பள்ளிக்கூடங்கள் அக்காலத்தில் கல்வியை ஊட்டி வளர்த்தன, வளர்ந்தன. நான் 1951ஆம் ஆண்டில் சிறி இராமகிருஷ்ண மிஷன் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் எஸ்.எஸ்.சி. பரீட்சை எழுதும்வரை யாழ்ப்பாணத்தில் டியூட்டரிகள் முளைக்கவில்லை. மட்டக்களப்பில் சுவாமி விபுலானந்தா, சிவானந்த வித்தியாலயத்தைத் தொடங்கி ஆதரவற்ற பிள்ளைகளைப்பேணிப் பாதுகாத்து கல்வியூட்டிய காலத்திலும்கூட டியூட்டரிகள் வளரவில்லை. அப்பொழுது 'கல்வியே வித்தியாதாரம்' என்று ஆசிரியர்களும் நிர்வாகமும் பிள்ளைகளுக்கு அளித் தன.

அக்காலத்தில் கல்வியுடன் கலைகளையும் கல்விக்கூடங்கள் வளர்த்தன. யாழ்ப்பாணத்தில் 'நடனப் பள்ளி' என இராசநாயகம் என்பவர் தொடங்கி நடனக் கலையை வளர்க்கும்வரை பாடசாலைகளே நடனம், நாடகம் ஆகிய கலைகளை வளர்த்தன. இப்பாடசாலைகளில் உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் பின்னர் கிரிக்கெட் முதலிய விளையாட்டுக்களும் வளர்க்கப்பட்டன. பாடசாலைகளுக் கிடையில் இன்றும் உதைபந்தாட்டம், கிரிக்கெட் ஆகிய போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இன்று பெற்றோரின் உழைப்பில் டியூட்டரியில் படித்து பிள்ளை சிறப்புச் சித்திபெற்றதும் கல்லூரி ஆசிரியருக்கும் அதிபருக்கும் விருந்தும் விருதும் தரவேண்டுமாம்.

இன்று உலகநாடுகளிலும் நமது நாட்டிலும்கூட டியூட்டரிகள் என்ற பெயரில் கல்வியும் ஒரு விற்பனைப் பொருளாகிவிட்டது. விளையாட்டுப் போட்டிகள் பெரும் செல்வச்செழிப்புமிக்கவிற்பனைப்பொருளாகிவிட்டது. மொத்தத்தில் இன்று 'நாங்களும் ஆடுவதும் பாடுவதும் காசிக்கு... காசிக்கு....' என்ற திரைப்படப் பாடல்தான் நினைவுக்கு வருகின்றது.

## கிராமத்து கீறல்கள்

காத்துப்பட்டு கரைந்துபோன
கலந்தர் காக்காவின்
கிடுகு வேலி குடிசையின்
ஒட்டைக் கூரையை
ஓயாது எட்டிப் பார்க்கிறது காக்காக்
கூட்டங்கள்...

கடலுக்குப் போன மச்சான்
கண நேரமா கரை திரும்பலெண்டு
உதட்டை உலர்த்தி கச்சான் காற்றை
கடிந்து பேசும்
கனகமேரி அக்கா...

பழங்காலத்து ரேடியோப் பெட்டியை
கிட்ட வச்சிப் பாட்டுக் கேட்டு
தேத்தண்ணிக் கடை வாங்கில்
தேசியம் பேசும்
தேவாங்குப் பொடியன்...

வயலுக்குள் வேலை செஞ்சி வருந்துப்
போன வள்ளியக்கா
பதக்கட நெல்லை மட்டும்
அள்ளிக் கட்டும் பரிதாபம்...

தென்னந் தோப்பில் மல்லுக்கட்டி
கள்ளுப் பானையை
கக்கத்தில் வைத்து
கடைக்குட்டிப் பையனுக்கு
கள்ளத்தீன் வாங்க ஓடும்
கந்தசாமி அண்ணன்...
மழை காலம் வந்திட்டா மடிச்சிக்
கட்டிய சாரனோடு
மயர்க் கிழங்குக் கடையில்
மண்டியிடும் கூட்டம்...

கிழமையில் ஒரு நாள் மட்டும்
பொன்மாலைப் பொழுது பார்க்க
பொன்னம்பலம் வீட்டுக்கு
பொழிந்து வரும் சனம்...

பொரன்னம்பலம் கலர் டிவி
பட்டதோ பாடு
அதனால் பொன்னம்பலத்தார்
கண்களில் சரியான சூடு...

இன்றுகளில்
நகரத்துப் பம்மாத்து மருந்துக்கும்
தெரியாத
ரம்மியமான கிராமியத்தில்
வாழ்கிறது என் மனசு...

கிராமத்து வாழ்வியலில்
கீறல்கள் இருக்கலாம்- ஆயினும்
புது வாசம் வீசும் வாய்க்கால்
தண்ணீரைப் போல
கிராமத்து இதயங்களில்
கீறல்களேயில்லையடா..!

- எஸ்.ஜனூஸ்

# பிரகாசிக்கத் துடிக்கும் தீபம்

சிறுகதை

கருமை தோய்ந்த இரவு. மெல்ல விடியலை நோக்கி நகர்ந்த அதிகாலை, நான்கு மணியை பறைசாற்றி கடிகாரம் அலறியது. ஓசைகேட்டு அசதியோடு எழுந்தாள் திவ்யா. பரபரப்புடன் குளியலறைக்குச் சென்று காலைக்கடன்களை முடித்துக் கொண்டு சமையல் செய்வதற்கான ஆயத்தங்களில் இறங்கினாள். இரவு எல்லோரும் சாப்பிட்டுவிட்டு அப்படியே போட்டு விட்டிருந்த பாத்திரங்கள் பல்லிளித்துக் கொண்டிருந்தன. அதைப் பார்க்கவே எரிச்சலாக இருந்தது திவ்யாவுக்கு. வந்த அழுகையை அடக்கிக்கொண்டு வேகமாக எல்லா பாத்திரங்களையும் கழுவி முடித்து, சமையல் வேலைகள் முடிய ஆறு மணியாகிவிட்டது.

ஆறு மணி அலாரம் அடித்தவுடன் ஒவ்வொருவராக குளியலறைப் பக்கம் சென்று வந்தபின், திவ்யா தயாரித்து வைத்த தேநீரை பருகியவாறு அவளது குடும்பத்தினர் ஆயத்தமாகினர்.

திவ்யா, இராஜேஸ்வரிக்கும் சுந்தருக்கும் பிறந்த ஆசைமகள். இவர்களது குடும்பம் அமைதியான அருவியாக ஓடிக்கொண்டிருக்கும் வேளையில் திடீரென ஏற்பட்ட மாரடைப்பில் மடிந்து போனாள் இராஜேஸ்வரி. அப்போது திவ்யாவுக்கு வயது ஒன்பது. வேதனையில் துவண்டு போனார் சுந்தரம். தன் மகளை எண்ணி, அவளின் எதிர்காலம் குறித்து விக்கித்துப்போய் நின்றார். காலம் யாருடைய நிலைமையையும் பாராமல் அதன் வழியே பயணித்துக் கொண்டிருந்தது. வருடம் ஒன்றாகியது, ஆனாலும் சுந்தர் தன் மனைவியின் நினைவுகளை மறந்து நிகழ்காலத்துக்குள் பிரவேசிக்க மிகவும் சிரமப்பட்டார். இவரின் நிலைமை ஒருபுறமிருக்க, சிறியவளாகிய திவ்யாவின் எதிர்காலம் குறித்து சிந்தித்த குடும்பத்தினர் தம் உறவுப் பெண் சரோஜாவை, சுந்தருக்கு வற்புறுத்தி இரண்டாம் தாரமாக்கினர்.



திவ்யாவுக்கு பதினாறு வயது பூர்த்தியாகுமுன் சரோஜா தம்பதியினர் மூன்று குழந்தைகளையும் பெற்றுவிட்டனர். இந்நிலையில் குழந்தைகளை கவனிக்கும் பொறுப்பு மூத்தவளான திவ்யாவின் தலையையே அழுத்தியது. சுந்தர் நிறுவனமொன்றில் அதிகாரியாகவும் சரோஜா ஆசிரியராகவும் கடமையாற்றிக் கொண்டிருந்தனர். சரோஜாவின் அன்புக் கட்டளையால் திவ்யாவின் படிப்பு இடைநிறுத்தப்பட்டது.

'நல்ல இடத்தில் அவளை கல்யாணம் பண்ணிக் கொடுத்தால், மகாராணி மாதிரி இருப்பா, எதுக்கு மேல் படிப்பெல்லாம்?' என்ற அதிகாரக் குரல் சுந்தரை அடக்கியது. திவ்யா படும் வேதனையோ, அவள் கண்ணீரையோ அறியாத பெயரளவு குடும்பத்தலைவராகவே சுந்தர் காணப்பட்டார்.

அதிகாலையிலேயே நித்திரை விட்டெழுந்து பகல் உணவைத் தயாரித்து சுந்தர், சரோஜா இருவருக்கும் கொடுக்கவேண்டும். காலை உணவாக 'பாண்' கைகொடுப்பதால் திவ்யாவுக்கு இலகுவாக இருந்தது. ஏழு மணியளவில் சுந்தர் வேலைக்குப் போவார். அவர் போன சிறிதுநேரத்தில் சரோஜா, இரு பிள்ளைகளுடன் பாடசாலைக்குச் செல்வாள். கடைசிக் குழந்தை திவ்யாவுடன் இருப்பான். இப்படி இக்கட்டான நிலையில் திவ்யா பரிதவித்துக்கொண்டிருந்தாள்.

'வீள்... வீள்' என்ற அழுகுரல் கேட்ட திவ்யா வேகமாக படுக்கையறைக்குச் சென்றாள். அங்கு அவளின் கடைசித் தம்பி மலங்கழித்து, கையையும் காலையும் உதறிக்கொண்டு அழுது கொண்டிருந்தான். அதைப் பார்க்கவே அவளுக்கு அருவருப்பாக இருந்தது. விதியை நொந்தவாறு குழந்தையைக் கழுவி சுத்தப்படுத்தினாள். பிறகு வீட்டு வேலைகளில் மும்முரமானதால், பகல் உணவை உண்ண மறந்தே போயிருந்தாள். மணி இரண்டை தாண்டியதும் பசி அவள் வயிற்றைப் பதம் பார்க்க, சோற்றுத் தட்டோடு வந்து உட்கார்ந்தாள்.

பாடசாலை விடும்நேரம் நெருங்கியது. கேற் திறக்கும் சத்தம் கேட்டு, கதவைத் திறக்கச் சென்றாள் திவ்யா. 'எண்டி எரும மாடு மாதிரி உள்ளுக்குள்ளேயே இருக்கிற, மழை வாறது தெரியல, எல்லா உடுப்பும் நனையுது போய் எடு, ஒரு நாளைக்கு எத்தனை தரம்தான் திண்ணுவ செக்கு மாடு மாதிரி ஒரு வேலைக்கும் உதவ மாட்ட' என்று வந்ததும் வராததுமாய் புராணத்துடன் வீட்டுக்குள் நுழைந்தாள் சரோஜா. அழுகையையும் ஆத்திரத்தையும் அடக்கிக்கொண்டு உடுப்புகளை எடுக்கப் போனாள் திவ்யா.

இரவு எல்லோரும் படுத்துவிட்டார்கள். சாமமாகியும் திவ்யாவுக்கு நித்திரை வரவில்லை. அப்பாவிடம்கூட மனம் விட்டுப்பேச முடியவில்லை. சிறைக் கைதியைப்போல தன் இன்ப துன்பங்களை மனதுக்குள்ளேயே அடக்கிக்கொண்டு நடைபிணமாகவே வாழ்கின்றாள். துக்கம் தொண்டையை அடைக்க மெதுவாக எழுந்து முன்னறையில் உட்கார்ந்து கொண்டாள்.

எதேட்சையாக தண்ணீர் குடிக்க வந்த சுந்தர், 'ஏனம்மா திவ்யா இங்க உட்கார்ந்திருக்க. தூக்கம் வரலையா?' என வினவியவாறு அவள் பக்கம் வந்தார்.

'இல்லப்பா தூக்கம் வரல... என்றவளை அன்போடு பார்த்த சுந்தர், உனக்கு என்னம்மா இங்க குறை? கண்டதையும் நினைத்துக் குழம்பாம போய்த் தூங்கு' என்றவரின் கைகளை பிடித்துக் கொண்டு, 'அப்பா, என்னை எங்கயாவது வேலைக்கு அனுப்புங்கப்பா எனக்கு இங்க இருக்க பிடிக்கல நம்ம ராஜி அங்கிளின் மக வேலைக்கு போற கொம்பனிக்கு நானும் போறன்' என்று அழுதாள்.

'உனக்கு பைத்தியமா பிடிச்சிருக்கு, நீ கஷ்டப்படக் கூடாதுனு தான் நா ரெண்டாவது கல்யாணமே கட்டிக் கிட்டன். சரோ உங்க சித்தி உனக்கு என்ன குற வச்சா.. நல்லாத்தானே பாத்துக்குறா... எனக்கே தெரியாது அவ ஒரு பெரிய இடத்தில மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருக்கா. அதுவும் நேற்றுதான் எனக்கே தெரியும். இப்படி நம்ம குடும்பத்துக்கு உழைக்கிற சரோஜாவையும் என்னையும் விட்டிட்டு நீ போய் கஷ்டப்படப் போறியா. சும்மா வீணா அலட்டிக்காம போய் தூங்கு.. எல்லாம் சரியாயிடும்' என்றவாறு தன் அறைக்குள் நுழைந்தார் சுந்தர்.

◄ த. எலிசபெத் ►

தன்னைப்பற்றி இன்னும் கூறவே தொடங்கவில்லை. அதற்குள் தன் பாச மனைவி புகழ்பாடி சென்றுவிட்டாரே என்று நினைத்த திவ்யாவுக்கு அப்பா மீது வெறுப்பாக இருந்தது. வேதனையில் குளமாகிய அவளது விழிகள் கண்ணீரை உதிர்க்க மறுத்து கல்லாகின. திவ்யா வேதனையில் துடித்தாள்.

நாட்கள் அவளின் வேதனையை சுமந்தவாறு நகர்ந்து கொண்டிருந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை. எல்லோருக்கும் விடுமுறை என்பதால், சற்று தாமதமாகியே நித்திரையிலிருந்து எழுந்தார்கள். திவ்யா அன்று கொஞ்சம் உற்சாகமாகவே வேலைகளைச் செய்தாள்.

'என்னங்க... இன்று ரேகா ரீச்சரின் மகளோட பிறந்தநாள் தெரியுந்தானே பத்து மணிக்கு பார்ட்டி என்ன தெரியாத மாதிரி முழிக்கிறீங்க...' என சரோஜா முறைக்க, 'ஆமா ஆமா மறந்தே போச்சி' என்றவரை 'சீக்கிரமா புறப்படுங்க' என கட்டளை பிறப்பித்தவாறு 'திவ்யா தம்பி ரெண்டு பேரையும் உடுத்தி ரெடியாக்கு. நா சின்னவனுக்கு மேல் கழுவிட்டு வாரன்' என்றவள் குளியலறைக்குள் சென்றாள்.

பரபரப்பாக எல்லாரும் ஆயத்தமானார்கள். 'திவ்யா என்ன நீ இன்னம் உடுத்தலயா' என்றாள் சித்தி.

'இல்ல சித்தி எனக்கு சரியான தலைவலியா இருக்கு. நா வீட்டில இருக்கிறன், நீங்க போயிட்டு வாங்க' என்றவள், தான் வாசித்த விளம்பரத்தை ஒருமுறை மனதுக்குள் நினைத்துக் கொண்டாள்.

மாலை ஏழு மணிக்கு வீட்டுக்கு வந்தனர் திவ்யா குடும்பத்தினர். வீட்டில் லைட் போடாததைக் கண்ட அவர்கள் கேற்றைத் திறந்து கொண்டு உள்ளே சென்றனர். வீடு பூட்டியிருந்தது. அப்போது பக்கத்து வீட்டு வாணி ஓடிவந்தாள்.

'சரோஜா அக்கா. திவ்யா சாவியை கொடுக்கச் சொன்னாள்' என சாவியை அவள் கையில் திணித்துவிட்டுச் சென்றாள். ஒன்றும் புரியாத சுந்தரும் சரோஜாவும் வேகமாக வீட்டைத் திறந்து உள்ளே சென்று லைட்டைப் போட்டதுடன், மேசைமீது ஒரு காகிதம் தன் தலையைத் தூக்கி, காற்றினால் தன் இருப்பிடத்தை உணர்த்தியது. கலவரத்தோடு கடிதத்தை பிரித்தார் சுந்தர்.

'அன்புள்ள அப்பா, சித்தி இருவருக்கும், திவ்யா எழுதிக் கொள்வது. அம்மா என்னை விட்டிட்டுப் போன பிறகு பாசத்துக்காக ஏங்கின எனக்கு நீங்க ஆறுதலா இருப்பீங்கனு நினைச்சேன். ஆனால் சித்தியின் குறுகிய இதயத்துக்கு முன்னால் என் எண்ணம் தோற்றுப் போய்விட்டது. காலையிலிருந்து இரவு வரைக்கும் வேலைக்காரியைப்போல முடிவில்லாத வேலை செய்யணும். சித்தியின் திட்டுக்களையும் கேட்கணும், எத்தனை நாளைக்கு நான் இப்படி வாழ முடியும்?

மறைமுகமாக அப்பாவிடம் சொல்லிப் பார்த்தேன் பயனில்லை. அதனால் எனக்கு நானே ஒரு முடிவை ஏற்படுத்திக்கிட்டேன். பயப்படாதீங்க என் உயிருக்கு முடிவு கொடுக்கமாட்டேன். இந்த வீட்டில் எனக்குக் கிடைத்த தொல்லைகளுக்கு ஒரு முடிவை ஏற்படுத்திக்கொண்டு என் வாழ்க்கையை ஆரம்பிக்கப் போகிறேன். இந்தக் கடிதத்தை நீங்கள் வாசிக்கும்போது, நான் என் வாழ்க்கையின் அத்திவாரத்தில் கால் வைத்திருப்பேன் என் தோழியின் உதவியுடன். என்னைப்பற்றி கவலைப்பட வேண்டாம்'

இப்படிக்கு...

மகள் திவ்யா

கடிதத்தை வாசித்து முடித்த சுந்தர், கனத்த இதயத்தோடு நாற்காலியில் சரிந்தார்.

(யாவும் கற்பனை)

> ‘அப்பா குடிப்பதற்கு எதுவும் இல்லையா’ என்று மகன் கேட்டார். ‘இல்லை’ என்று சொல்லிக் கொண்டு மகனைப் பிடித்து ஓடையில் தள்ளிவிட்டேன். அவர் ஓடையில் விழும் சத்தம் எனக்குக் கேட்டது. ஆனாலும் நான் சத்தம் எதுவும் போடவில்லை.

# ‘எனது மகனை ஓடையில் தள்ளி கொலை செய்தேன்’

## உண்மைச் சம்பவம்

அண்மையில் சேனநாயக்க சமுத்திரத்தில் இனந்தெரியாத இளைஞன் ஒருவரது சடலத்தைக் கண்டெடுத்த பொலிஸார் சந்தேகத்தின் பேரில் அவரது தந்தையைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர் 75 வயதுடைய ஓய்வுபெற்ற ஆசிரியராவார். கொலை செய்யப்பட்ட 29 வயதுடைய நபர் நீண்ட நாட்களாக மனநோயால் பாதிக்கப்பட்டவராவார். மகனுக்கு ஆயுர்வேதவைத்தியம் செய்ய அழைத்துச் செல்வதாகக்கூறி ஓடையில் தள்ளிக் கொலை செய்திருக்கின்றார்.

‘நான் எப்போதுமே என் மகனுக்கு அடித்ததில்லை. எனது மகனுக்குத் துன்பத்தைக் கொடுக்க முடியாது சேர். அதனால் தான் துன்பமோ வேதனையோ தெரியாத விதத்தில் ஓடையில் அவனைத் தள்ளிக் கொலை செய்தேன்’ என்று அழுது கொண்டே கூறினார் இந்த ‘அற்புதமான அப்பாவி அப்பா’

அம்பாறைப் பகுதிக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி பிரேமலால் ரணகலவின் மேற்பார்வையில் உதவிப் பொலிஸ் அதிகாரி எஸ்.டி.விஜேசிங்கவின் ஆலோசனையின் பேரில் இங்கினியாகல பொலிஸ் அதிகாரி ஆர். ஜே. டயஸ், குற்றப்புலனாய்வுத்துறை அதிகாரி என். ஜே.டி. ஜெயபால ஆகியோர் இந்த விசாரணையில் ஈடுபட்டார்கள்.

பொலிஸார் மேற்கொண்ட தீவிர விசாரணையில் தந்தை கொடுத்த வாக்குமூலம் வருமாறு.



ரணகல டயஸ்

‘எனக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர். இரண்டுபேர் ஆண்கள் ஒரு பெண். எனது மகள் திருமணம் முடித்து சென்றுவிட்டாள். அதன் பிறகு வீட்டில் இருந்தது எனது இரண்டு ஆண் பிள்ளைகளும்தான். மூத்த மகன் வளர்ந்த பிறகு அவரது கழுத்தில் ஒரு கட்டி வளர்ந்தது. ஆயுர்வேத வைத்தியத்தின் மூலம் அதனைக் குணப்படுத்தினோம். அதன்பிறகு அவருக்கு தலைவலிவர ஆரம்பித்தது. அதனை கராப்பிட்டிய மருத்துவமனைக்குச்சென்று காட்டினோம். அவரைப் பரிசோதனை செய்த டொக்டர் அவரது மூளையில் ஒரு கட்டி இருப்பதாகக் கூறி மருந்து கொடுத்தார். கராப்பிட்டிய மருத்துவமனையிலேயே ஐந்து மாதங்களாக வைத்தியம் செய்தோம்.

மகனுக்கு மருந்து கொடுப்பது மிகவும் கஷ்டமான காரியம் சேர். சில சமயங்களில் ஏசி அடித்துத்தான் மருந்தைப் பருக்கினோம். சில சமயங்களில் மருந்து குடித்த பிறகு அவருக்கு நோய் அதிகமாகி வேதனையில் அலறுவார். இதனால் நாம் அவருக்கு மருந்து கொடுக்காமல் விட்டோம். நாட்கள் செல்லச் செல்ல அவரது முரட்டுத்தனம் அதிகமாகியது.



அம்மாவை ஏசத் தொடங்கினார். தம்பிக்கு அடிக்கத் தொடங்கினார். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களை கெட்ட வார்த்தைகளால் ஏசத் தொடங்கினார்.

இதனால் அடியும் பட்டார். மகனுக்கு இரவு நேரங்களில் தூக்கம் வராது. விடியும் வரையும் விழித்துக் கொண்டே இருப்பார். வீட்டிற்குள்ளே தனது உடையிலேயே சிறுநீர் கழித்துவிடுவார். அவரின் அம்மாதான் இவற்றை எல்லாம் சுத்தப்படுத்துவார். ஆனாலும் அவர் அம்மாவை ஏசுவார். இதனால் நான் எந்தநேரமும் மகனை ஏசத் தொடங்குவேன். நீ வீட்டைவிட்டு எங்கேயாவது போய்விடு என்றுகூட நான் கூறியிருக்கிறேன்.

◀ மிஸ்டர் உளவாளி ▶

இரண்டாவது மகனிடமும் தினமும் சண்டை பிடிப்பார். காலால் கையால் மட்டுமல்ல தடியாலும் அவருக்கு அடிப்பார். இதைப் பார்க்கும்போது எனக்குத் துன்பமாக இருந்தது. இதையெல்லாம் பார்த்துவிட்டு எனக்கு சும்மா இருக்க முடியாமல் போய்விட்டது. மகன் வீட்டில் இருப்பதனால் எந்தவிதமான பயனும் இல்லை என்று யோசிக்க ஆரம்பித்தேன். ஆனால், மகனைத் துன்புறுத்த என்னால் முடியாது. முடியாததொரு கட்டத்தில்தான் சேர் அவருக்குத் துன்பம் எதுவும் செய்யாத விதத்தில் தண்ணீருக்குள் தள்ளி கொலை செய்துவிட்டேன்’ என்று அழுதார்.

சந்தேக நபரான தந்தை தனது மகனைக் கொலைசெய்வதற்காக ஓடையொன்றைத் தேடியிருக்கின்றார். ‘நான் மகனையும் அழைத்துக்கொண்டு இங்கினியாகல என்னுமிடத்தில் பஸ் ஏறி விபுல்லையில் இறங்கி அந்தச் சந்தியைத் தாண்டி சிறிது தூரம் சென்றபோது பெரிய பாலத்தின் இடது பக்கமாகச் சென்றால், வருகின்ற பாலத்தின்மீது மகனை அழைத்துச்சென்று அங்கே தள்ளிவிடலாம் என்று நினைத்தேன். இதனால் இரண்டு தினங்களுக்கு முன்பே தனியாகவே இங்கினியாகல பஸ்ஸிலிருந்து நான் குறிப்பிட்ட அந்தப் பாலத்தை ஆராய்ந்து பார்த்தேன்.

தள்ளிவிடுவதற்கு அதுதான் சரியான இடம் என்று முடிவுசெய்தேன். மறுநாள் வீட்டிற்குச்சென்று மருந்தெடுக்கப்போவோம் என்று கூறியவேளை மகனும் அதற்குச் சம்மதித்தார். இந்தச் சமயத்தில் அவரது தாயாரும் வீட்டில்தான் இருந்தார். அவருக்கு வேறு உடை கொடுக்கும்படி என் மனைவியிடம் கூறினேன். ‘அவருக்கு வேறு உடைதேவையில்லை இது நல்லாத் தானே இருக்கின்றது’ என்று மனைவி கூற சாயந்தரம் மகனை அழைத்துக் கொண்டு பஸ் ஸ்டான்டுக்குச் சென்றேன்.

அங்கு இருந்த கடையொன்றில் அவனுக்கு கட்லட் ஒன்றையும் தேநீரும் வாங்கிக் கொடுத்தேன். அதன் பிறகு 6.45 க்கு செல்லும் பஸ்ஸில் ஏறிவந்து பெரிய பாலத்திற்குச் சற்றுத் தள்ளி உள்ள பஸ் தரிப்பிடத்தில் இறங்கிக்கொண்டோம். அப்போது இரவு 8 மணியிருக்கலாம்.

அதன்பிறகு மகனை பாலத்தடிக்கு அழைத்துச்சென்றேன். அப்போது ‘அப்பா குடிப்பதற்கு எதுவும் இல்லையா’ என்று மகன் கேட்டார். ‘இல்லை’ என்று சொல்லிக் கொண்டு மகனைப் பிடித்து ஓடையில் தள்ளிவிட்டேன். அவர் ஓடையில் விழும் சத்தம் எனக்குக் கேட்டது. ஆனாலும் நான் சத்தம் எதுவும் போடவில்லை. அந்தப் பக்கத்தைப் பார்க்க நான் விரும்பவில்லை. ஆகவே நான் மீண்டும் வீட்டிற்கு வந்துவிட்டேன் சேர்’ என்று பொலிஸாரிடம் தந்தை வாக்குமூலம் கொடுத்தார்.

மறுநாள் இவர் வீடு செல்லும்போது மகனுடன் சென்ற தன் கணவர் தனியே வருவதனைக் கண்டு ‘எங்கே மகன்’ என்று கேட்டுள்ளார். பெற்ற வயிறல்லவா? அதற்கு தந்தை தன் மகனுக்கு இயந்திரம் ஒன்று பொருத்த வேண்டியிருப்பதால் வைத்திய சாலையில் அனுமதித்துவிட்டு வந்ததாகத் தெரிவித்தார். இறந்த தன் மகனின் உடலை வீட்டுக்கு கொண்டுவரும்போது அங்கு தந்தை இருக்கவில்லை இதனாலேயே பொலிஸாருக்கு சந்தேகம் ஏற்பட்டது. தற்போது தந்தையை சிறையில் அடைத்துள்ளார்கள்.

மனித உயிர் என்பது விலைமதிக்க முடியாத ஒன்று. ஆனால், இன்று நடைபெறும் ஒவ்வொரு சம்பவங்களைப் பார்க்கும்போது மனித உயிர்களின் பெறுமதி எந்தளவு மலிந்துவிட்டது என்று விளங்குகின்றது. என்னதான் இருந்தாலும் பெற்ற மகனை கொலைசெய்ய எந்த மனம்தான் இடம்கொடுக்கும். அதுவும் புத்தி சுயாதீனம் அற்ற ஒரு இளைஞனை. இன்று அவ்வாறானவர்களை பராமரிப்பதற்கு எத்தனையோ பராமரிப்புநிலையங்கள் இருக்கின்றன. அங்கு கொண்டு சேர்த்திருக்கலாம். அதைவிடுத்து ஒரு மனிதனின் உயிரைப் பறிக்க எவருக்கும் உரிமையில்லை. இன்றே தாய் பெற்ற மகனை இழந்து துடிக்க, தந்தையோ கம்பியெண்ணிக் கொண்டிருக்கிறார்.

டைரவர்: பொஸ்! இப்போ பெட்றோல் முடிஞ்சி போச்சி... இனி லொறி ஒரு அடி கூட முன்னாடி நகராது...

பொஸ்: சரி, கவலைப்படாதே, அப்படியே பின்னாடி ‘ரிவேர்ஸ்ல’ எடு, வீட்டுக்குப் போவாம்....

நல்ல பொண்ணுங்களுக்கும் டைனோசருக்கும் ஒற்றுமை இருக்கு என்னவெண்டு தெரியுமா..? அது ரெண்டுமே இப்ப உலகத்துல இல்ல...!



வாசகர்களே...!
சட்டப் பிரச்சினைகளில் சிக்கி அவதியுறுகிறீர்களா? உங்கள் சட்டப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியவில்லையா? கவலையை விடுங்கள். ‘இருக்கிறம்’ சஞ்சிகையில் ‘சட்டம் பேசுகிறது’ பகுதிக்கு உங்கள் சட்டப் பிரச்சினைகளை எழுதியனுப்புங்கள். அனுபமிக்க சட்டத்தரணிகள் பதிலளிப்பார்கள்.



இருக்கிறம், 03, டொரிங்டன் அவனியூ, கொழும்பு-07


# அஷ்ரஃப் சிஹாப்தீன்

# 'சிலநேரம் சில விடயங்களை நேரடியாகப் பேசமுடியாது'

தமிழ் இலக்கிய உலகில் தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றவர் அஷ்ரஃப் சிஹாப்தீன். எந்தவொரு விடயத்தையும் தன் எழுத்தாற்றல் மூலம் மக்களை சிந்திக்க வைப்பதில் இவர் கைதேர்ந்தவர். ஓட்டமாவடியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஒரு இஸ்லாமிய மதத்தலைவரின் புதல்வராவார். இவருடைய பாட்டனார்கூட ஒரு தமிழ்ப்புலவர் என்பது குறிப்பிடத்தக்கது. அண்மையில் உள்ளத்தை உறைய வைக்கும் உண்மைக் கதைகளைக் கொண்டமைந்த 'ஒரு குடம் கண்ணீர்' என்ற நூலை வெளியிட்ட திருப்தியில் திளைத்திருந்த பல்துறை சார்ந்த, பல விருதுகளுக்குச் சொந்தக்காரரான இவரை எமது அலுவலகத்தில் சந்தித்தோம். அவருடைய தமிழ் மீதான ஆழ்ந்த ஈடுபாடு பற்றி அவரிடம் கேட்டோம்.

'சின்ன வயசில இருந்தே வாசிப்புப் பழக்கம் எனக்கு இருந்தது. இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் என் பாட்டனார் ஆர்வம் மிக்கவர். அவர்கூட நிறையப் புத்தகங்கள், இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள், ஏன் காவியங்கள் கூட எழுதியிருக்கின்றார். இதெல்லாம் படிச்சுக்காட்டினால் அவர் எனக்கு பரிசு தருவார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமை பின்னேரமும் நான் அவருக்கு அதைப் படிச்சுக்காட்டுவன். பிற்காலத்தில

> 'என் வெப்சைட்ல ஒரு கதையைப் போட்டன். இரண்டாவது கதையெழுதி அதையும் போட்டுவிட்டு நான் யோசிச்சன். வெப்சைட்ல கதையைப் போட்டால் சும்மா படிச்சுப்போட்டு விட்டிடுவார்கள். ஆனால் நூல் வடிவாக இருக்கும் போது பலருடைய கைகளுக்கு அது செல்லும். நூலகத்தில் பாதுகாக்கப்படும்.'




எனக்கு தமிழ் இலக்கியத்தின் மீதான காதலை வளர்த்ததற்கு அதுவும் ஒரு காரணம். அத்துடன் எனது தாயார் நல்லா தாலாட்டுப் பாடுவா. ஊஞ்சல்ல பிள்ளைகளை வைத்துக்கொண்டு தம்பி, தங்கைகளை நித்திரையாக்கிற நேரம் அவங்க அழகான தமிழ்த் தாலாட்டு பாடல்கள பாடுவாங்க. அவையும் கூட இரத்தத்தோட சேர்ந்த விசயம் இல்லையா? அப்படித்தான் தமிழ் மீதான காதல் இருந்தது' என்று சிரித்துக்கொண்டே கூறிய இவர் 80 வரையான காலப்பகுதிகளில் மரபுக் கவிதைகளையே எழுதி வந்தார். புதுக்கவிதையில் இலங்கையிலும் ஒரு எழுச்சி ஏற்பட்ட காலப்பகுதியில் இவரும் புதுக்கவிதை பகுதிக்குள் பிரவேசித்து இன்றும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறார்.

**கவிதை மொழியில் தமிழ் மொழியின் ஆளுமை இப்போது எந்தளவுக்கு இருக்கின்றது?**

'அதுக்கு ஒரு நல்ல உதாரணம் சொல்றன். என்னுடைய மடிக் கணனியைப் பழுதுபார்க்க ஒரு நண்பர் வந்திருந்தார். அப்போது தொலைக்காட்சியில் இரவு எட்டுமணிக்கு செய்தி வாசிக்கப்பட்டுக்கொண்டிருந்தது. அப்போது ஆபிரிக்கா வழியாக வந்த கப்பலில் கடற்கொள்ளைக்காரர்கள் பணயக்கைதிகளாகப் பிடித்துக்கொண்டு போனார்கள் என்று சொல்றத்துக்குப் பதிலாக பயணக்கைதிகளாக என்று சொல்ல 'இங்க பாருங்க பிழையாகச் சொல்றான்' என்று நான் சொன்னன். அதுக்கு என் நண்பர் சொன்னார் 'விசயம் விளங்குதுதானே, நமக்கு விசயம் விளங்கினால் சரிதானே..' என்றார். இந்த லெவல்லதான் தமிழ் இருக்குது. ஒரு காலத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒரு வானொலியிலோ அல்லது வேறு இலத்திரனியல் ஊடகங்களிலோ குரல் கொடுக்கவேண்டுமாக இருந்தால் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் குரல் பரீட்சையில் சித்தியடைந்தவராக இருக்க வேண்டும். அது விளம்பர நிகழ்ச்சியாக இருந்தாலும்கூட. இப்போதெல்லாம் யார் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் பேசலாம் என்கிற ஒரு நிலை உருவாகியிருக்கிறது. இதுதான் இன்றைய தமிழ் மொழியின் நிலை' என்று கூறி தமிழின் நிலை குறித்து வருந்தினார்.

வறுமை என்பது கவிஞர்களுக்கு இறைவனால் வழங்கப்பட்ட ஒன்றா என்று என்னை சிந்திக்க வைத்தது. காரணம் 83 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எல்லா கவிதைகளையும் தொகுத்து வைத்திருந்தும் பணபலம் ஒன்று இல்லாமல் 83 ஆம் ஆண்டு வெளிவர வேண்டிய இவரது கவிதைத் தொகுப்பு 99 ஆம் ஆண்டுதான் 'காணாமல் போனவர்கள்' என்ற தலைப்பில் வெளிவந்தது. அதற்குப் பிறகு பல படைப்புகளை வெளியிட்டிருந்தார்.

**இன்றைய சூழலில் வாசகர்களைவிட கவிஞர்கள் அதிகரித்துவிட்டனரே என்று கேட்டபோது...**

'கவிதை என்பது கவிதை மாதிரி இருக்குமென்றால் வாசிக்கலாம். புதுக் கவிதைக்கு வந்த பிறகு எப்படி வேணுமெண்டாலும் எழுதலாம். நீங்களோ நானோ ஒரு நாலு வசனத்தை எழுதிப் போட்டு இதுதான் கவிதை என்று அந்த வடிவமைப்பில் எழுதிப்போட்டு அனுப்பினால் ஏராளமான பத்திரிகைகள் இருக்கின்றன பிரசுரிப்பதற்கு. அந்தக்காலத்தில அப்படி வசதி இல்ல. மரபுக்கவிதையாக இருக்கவேணும். புதுக்கவிதையா இருந்தாலும் அதில் ஏதாவது ஒரு செய்தி இருக்கவேணும். சுள்ளெண்டு ஒரு ரெண்டு வசனம் இருக்கணும். அதெல்லாம் பார்த்துத்தான் போட்டாங்க. இப்ப நிறைய இடமிருக்கு. சில இடங்களில பத்திரிகையில இருக்கிற ஆக்களுக்கே ஒழுங்காத் தமிழ் தெரியாது. அப்படி ஒரு நிலை இருக்கு' என்றவர் ஒலிபரப்புத் துறையிலும் நீண்டகாலம் தனக்கென ஒரு இடத்தை உருவாக்கி நேயர்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற



அஷ்ஃரப் சிஹாப்தீன். மேடையில் பேசும்போது கேட்போரைக் கட்டிப்போடும் அளவுக்கு பேச்சுவன்மை கொண்டவர். கவிதை இலக்கியம்; சிறுவர் இலக்கியம், கட்டுரை, கவிதைத் தொகுப்பு என இதுவரை 9 தொகுப்புக்களை வெளியிட்டிருக்கிறார். யாத்ரா சஞ்சிகையின் ஆசிரியரான இவரது 'செய்த்தூண்' என்ற கவிதை சர்வதேச புகழ்பெற்று பலரால் விமர்சிக்கப்பட்டு அதனால் அவருக்கு அச்சுறுத்தலும் ஏற்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

◀ மலரவன் ▶

**உங்களுடைய கவிதைகள் மற்றும் ஏனைய படைப்புகள் எந்தவிதமான போக்கைக் கொண்டிருக்கின்றன?**

'நம்முடைய வாழ்வியலைத்தான் நாம் பேசவேண்டும். ஆகவே நான் அதைத்தான் பேசுகின்றேன். என்னுடைய கவிதைகளும் சரி எழுத்துக்களும் சரி அதைத்தான் பேசுகின்றன. மிக அண்மைக்காலமாக எனது கட்டுரைகளும் பார்வையும் சர்வதேச ரீதியான ஒரு பார்வைக்குள் வந்திருக்கிறது. அது சில வேளை எனது வயது முதிர்ச்சியின் காரணமாக ஏற்பட்டிருக்கலாம். இப்போது உலகம் சுருங்கி விட்டது. நாங்களெல்லாம் விரும்பியோ விரும்பாமலோ மேற்கத்தேய நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்குள் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்' என்று யதார்த்தத்தைக் கூறினார்.

**யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்களாகியிருக்கின்ற நிலையில் தமிழர்களின் வாழ்வியல் தொடர்பில் எழுத்தாளர்களின் பங்களிப்பு எவ்வாறு இருக்கின்றது என்று கேட்டேன்.**

'உங்களுக்குத் தெரியும் சில நேரங்களிலே நேரடியாக சில விசயங்களைப் பேச முடியாது. உங்களுடைய நிலைதான் இன்று எழுத்தாளர்களுக்கும் இருக்கின்றது. ஆகவே, அதை வேறு விதமாக சொல்லலாம். என்னுடைய அண்மைய வெளியீட்டில் முகவுரையில் சொல்லியிருக்கிறேன் இதன் மூலம் இலங்கையில் நடைபெறாத துன்பமும் துயரமும் சித்திர வதையையும் விட வேறு எங்கேயுமே நான் தேடிச் செல்லவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அவற்றை எம்மால் நேரடியாகப் பேச முடியாது என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். அப்படி நேரடியாகப் பேசினால் பிறகு என்னைப்பற்றிப் பேசுவதற்கு இன்னொருவர் தேவைப் படுவார். அதைப் பிரசுரித்தவரைப் பற்றி பேசுவதற்கு இன்னொருத்தர் தேவைப் படுவார்.' ஆகவே, இந்த நிலையை முன்னுரையில் சொல்லியிருக்கிறேன் என்று கூறும்போது எழுத்துச் சுதந்திரம் பத்திரிகைகளுக்கு மட்டுமல்ல ஒவ்வொரு எழுத்தாளனிடமிருந்தும் பறிக்கப்பட்டு விட்டது என்பது தெளிவாகியது.

**ஒவ்வொரு கவிஞனும் தன் வாழ்நாளில் பாதியை அர்ப்பணம் செய்து தன் படைப்புகளை வெளிக்கொண்டு வருகின்றான். அதை வெளியிடுவதற்கோ பதிப்பதற்கோ இன்றும் ஒரு நல்ல நிலை கிடைக்கவில்லை. இதற்கு என்ன காரணம்?**

'இந்த நிலைமைக்கு படைப்பாளிகள் தான் காரணம். இப்ப கணனி வசதி வந்த பிறகு எழுத்தாளர்களும் பத்திரிகையாளர்களும் குறைஞ்சு போயிட்டாங்க. முதற்காலத்தில ஒரு புத்தகத்தை ஒரு இளம் படைப்பாளி எழுதிக்கொண்டு வந்து அதை இரண்டு மூத்த எழுத்தாளர்களிட்ட

காட்டித் திருத்தச் சொல்லுவாங்க. அவர்கள் சொல்வதை நாங்களும் கேட்டுக்கொள் வம். இப்ப அப்படி இல்ல. அப்படியும் காட்டி எதுவும் சொன்னால் இவன் என்ன பெரியாளா? இவன் என்னத்தை எழுதிக் கிழிச்சிட்டான் என்ற மனநிலை. அப்படி இருக்கக் கூடாது. குப்பைகளை நாம் புத்தகமாகக் கட்டி வைக்கக் கூடாது. அப்படியொரு நிலை இப்ப வந்திட்டுது. இந்தியாவில வரக்கூடிய புத்தகங்களை இண்டைக் கும் வாங்கிப் படிக்கலாம். அந்த லெவலுக்கு எங்கட கடந்தகாலம் இல்லையே எண்ட சந்தேகம் எனக் கிருக்கு. அதாவது எங்கட கடந்த கால எழுத்துக்கள் அந்த லெவலுக்குப் போகல்லையோ என்ற சந்தேகம். அல்லது அதுக்குரிய மார்க்கட் கிடைக்கல்ல. நாங்க முழுக்க முழுக்க இந்தியாவிலே தங்கி இருந்திட்டம். சரியாக எழுத்தாளனை கையாளவில்லை. சரியான மொழிநடையைக் கொண்டு வரவில்லை. ஆனால், சினிமாவோடு சம்பந்தப்பட்டு வருகின்ற இந்திய சஞ்சிகைகளிலே கதைகள் படித்துப் பழக்கப்பட்டுப்போன நம்முடைய சனங் கள் எல்லாமே அப்படி இருக்க வேண்டு மென்று நினைக்கிறார்கள்' என்று கூறி ஆதங்கப்பட்டார்.




**இன்று எத்தனையோ திறமைசாலிகள் எமது நாட்டை விட்டு வெளியேறி சென்று விட்டார்கள். அவர்களுள் நல்ல கவிஞர் களும் அடக்கம். இது பற்றி அவரிடம் கேட்டபோது...**

'ஒரு மனிதனுக்கு எழுதுற ஆர்வமும் வேகமும் வயசு போகப் போக குறைந்து போகும். ஏனென்டால் வாழ்கையில் பிரச்சினைகளாலும் நெருக்கடிகளாலும் அவதிக்குள்ளாகிறான். ஆகவே, அந்த மாதிரியான பொது விசயங்களை இறங்கிச்செய்வதற்கு அவனுக்கு வாய்ப்பு இருப்பதில்லை. உண்மைக்குண்மையாக உழைக்க நினைப்பவனுக்கு ஆதரவு கிடைப்ப தில்லை. சிலர் சுயநலத்திற்காக செயற்பட முயற்சிக்கிறார்கள். அவர்களை சனங்கள் விளங்கிக்கொண்டு ஆதரவு வழங்கு வதே இல்லை. எல்லாமே கிடப்பில் கிடக்கின்றன. இது தான் காரணம்'



**இணையத்தின் வளர்ச்சிவாசிப்பின்மீதான ஆர்வத்தை குறைத்து விட்டதே...**

'என் வெப்சைட்ல ஒரு கதையைப் போட்டன். இரண்டாவது கதையெழுதி அதையும் போட்டுவிட்டு நான் யோசிச்சன். வெப்சைட்ல கதை யைப் போட்டால் சும்மா படிச்சுப்போட்டு விட்டிடுவார்கள். ஆனால், நூல் வடிவாக இருக்கும்போது பலருடைய கைகளுக்கு அது செல்லும் நூலகத்தில் பாதுகாக்கப் படும். இதனால் நான் இரண்டு கதை களையும் போட்டுவிட்டு நிறுத்திக் கொண்டேன். நான் பன்னிரெண்டு கதைகளையும் போட்டேன் என்றால் அது நூல் வடிவமாக வரும்போது நான் இதை நெட்டில் படித்துவிட்டேன் என்று வாங்க மாட்டார்கள். சில சொல்ல முடியாத விசயங்களை தைரியமாக இணையத் திலே நாங்கள் சொல்லலாம்தான். ஒரு பதிவை போட்டால் ஆயிரக்கணக்கானோர் உலகம் முழுக்கவும் இருந்து படிக்கிறார்கள்.

**படங்கள்: சாகித்யா**

இன்று வாசகர்கள் நல்லஎழுத்துக்களை அடையாளம் காணுகிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக எனக்குத் தெரிகிறது. தமிழிலே இப்போது பல்கலைக்கழகங் களிலே நிறைய இளைஞர்களும் யுவதி களும் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, எதிர்காலத்தில முன்பிருந்த நிலை மீண்டும் வரக்கூடிய சாத்தியக்கூறுகள் விரைவில் ஏற்படும் என்று நினைக்கி றேன்' என்றவர் எந்த ஒரு இலக்கியமும் எழுத்தில் இருப்பதைப்போல வேறு எதிலும் நிரந்தரமாக இருக்கமுடியாது என்றார் பெருமையுடன்.

**அண்மையில் மலேசியாவில் நடை பெற்ற முஸ்லிம் இலக்கிய மாநாட்டைப் பற்றி பல்வேறு விமர்சனங்களும் சர்ச்சை களும் எழுந்தன. இதுபற்றி அவரிடம் கேட்டோம்.**

'இலக்கியத்தில பெரிசா அங்க ஒண்டும் நடந்ததா எனக்குத் தெரியல்ல. இவ்வளவு தான் பேசப்போகின்றோம் என்று ஒரு சட்ட கத்திற்குள் நின்று கொண்டார்கள். இந்த சட்டகத்தைப்போடலாம், ஆனால்அதனால் வரும் பின்விளைவுகள், பின்னூட்டம் அல்லது பிரதிலாபம் பெறுமதியானதாக இருக்க வேண்டும். ஆனால், அவர்கள் அவர்களுடைய நாட்டை பேஸ் பண்ணித் தான் எல்லாமே செய்தார்கள். இலங் கைக்கு இரண்டு கட்டுரைதான். அதை நான் மறுத்தேன். மற்றபடி அதை ஒரு அரசியல் மயமானதாக்கி விட்டார்கள்.

ஒரு இலக்கிய குழு அதைச் செய்திருக்க வேண்டும். மாறாக ஒரு கட்சியிடம் அது ஒப்படைக்கப்பட்டு அதன் மூலம் நிறையப் பிரச்சினைகள் நடந்திருக்கின்றன. காலத்திற்கேற்ற மாதிரி பழைய வடிவங் களிலிருந்து புதுவகையான சிந்தனை களினூடாக போகவேணும். அதிலிருந்து பெற்றுக்கொள்கின்ற விசயம் அதிகமாக இருக்க வேண்டும். தவிர ஒரு அரசியல் வாதியைத் திருப்திப்படுத்துவதற்காக அல் லது எனக்கொரு முன்னிலை கிடைக்க வேண்டும் என்பதற்காக நான் திட்டம் தீட்டி லட்சக்கணக்கில் காசைச் செலவழித்து மூன்று நாளைக்கு உட்கார்ந்து சாப்பிட்டுப் போட்டு வாறதால எந்தப் பிரயோசனமும் கிடையாது' என்று கூறினார்.


'அரசியல்வாதிகளாக இருந்தாலும் சரி ஒரு சில கலைஞர்களாக இருந்தாலும் சரி இதை எப்படி பணமாக மாற்றலாம் என்றுதான் யோசிக்கிறார்கள்' என்றவர் இன்று பல்கலைக்கழகங்களிலும் சரி ஊடகங்களிலும் சரி எழுத்தாளர்கள் மத்தி யிலும் சரி ஒருவருடைய கருத்தை இன் னொருவர் ஏற்றுக்கொள்ளாத நிலை கா ணப்படுவதையும் இங்கு சுட்டிக்காட்டினார்.

**அண்மையில் வெளியாகிய உங்களது 'ஒரு குடம் கண்ணீர்' நூலைப் பற்றிக் கூறுங்களேன்.**



'குறஸ் பயர்' என்று ஆங்கிலத்திலே ஒரு உண்மைக்கதையைப் படித்தேன். அதை நான் தமிழுக்கு கொண்டு வந்தேன். தமிழுக்கு கொண்டு வந்த பிறகு இதே மாதிரி ஒரு சம்பவம் பாகிஸ்தானில் நடந்திருந்தது. ஒரு பிரிவினரைச் சார்ந்த ஒரு பெண்ணை மற் றொரு இனத்தைச் சார்ந்த ஒரு பையன் விரும்பினான் என் பதற்காக அந்தப் பையனுடைய சகோ தரியை பட்டப்பகலில் நான்கு பேர் கதறக் கதற பாலியல் வன் புணர்வுக்குள்ளாக்கினார்கள்.

அதனால் அந்த சம்பவத்தை தொடர்ந்து நான் தேடத் தொடங்கி நிறைய தகவல் களைச் சேகரித்துக்கொண்ட பிறகு ஒரு கதையாக எழுதலாம் என்று நினைத்தேன். அந்தப் பெண் வாழ்ந்த பிரதேசத்தில் படிப்பதற்கு பாடசாலை கிடையாது. இன்று மேற்கத்தேய ஊடகங்களின் வெளிச்சம் காரணமாக பிரபல்யம் அடைந்து சர்வதேச செய்தியில் கவனம் பெற்று இன்றைக்கு



அவர் ஒரு தன்னார்வத் தொண்டர் நிறுவனமொன்றை நிறுவி இரண்டு பாடசாலைகளை நிறுவி அந்தப்பிரதே சங்களுக்கு மின்சாரம் பெற்றுக்கொடுத்து ஒரு சர்வதேச நிலையில் வாழ்கிறார். இவ்வாறான சம்பவங்களை நான் தேடத் தொடங்கினேன். சில நாடுகளில் இனங் களுக்கிடையிலான சண்டைகள் நடை பெறுகின்றபோது நிறைய பாலியல் வன் புணர்புகள், அநியாயங்கள், கொலைகள், சித்திரவதைகள் என்று நிறையத் தகவல் கள் எனக்குக் கிடைத்தன. ஆகவே நாற்ப துக்கு மேற்பட்ட கதைகளை நான் தேடி யெடுத்து அதிலிருந்த இருபத்தைந்து கதைகளை எடுத்து தகவல்களை ஆங்கி லத்திலிருந்து உள்வாங்கிக் கொண்டு அதைத் தமிழிலே எழுதியிருக்கிறேன். மேலதிகமான வார்த்தைகளை சேர்க்க வில்லை. கற்பனை சேர்க்கவும் இல்லை. எமக்குள் எவ்வாறெல்லாம் பிரிவை ஏற் படுத்த முயற்சிக்கின்றார்கள் என்ற விசயத் தை அறிந்துகொள்ள எனது நூல் ஓரள விற்கு உதவுமென்று நினைக்கிறேன்'

**ஒரு அனுபவம் மிக்க எழுத்தாளர் என்ற வகையில் ஆரம்ப நிலையிலிருக்கும் ஒரு எழுத்தாளனோ கவிஞனோ தங்கள் திறமையை எவ்வாறு வளர்த்துக் கொள்ளலாம்?**

'நிறைய வாசிக்கத் தெரிந்திருக்க வேண்டும். வாசிப்பவனாக இருந்தால் தான் நல்லா எழுதுபவனாக இருக்க முடியும். வாசித்தால் தான் நிறைய அறிவு வளரும், மொழிவளம் வரும், மனதில பதியும். மொழி வளம் வரல்ல எண்டு சொன்னா அந்த எழுத்துல எந்தப் பிரயோசனமும் இருக்காது. அடுத்தது நாம எதைச் சொல்றம், யாருக்குச் சொல்றம், எப்படிச்சொல்றம் என்பதுதான் இப்ப உள்ள பிரச்சினை. மிகப்பழைய படைப்பாளிகளால்கூட அந்த நிலையை அடைய முடிய வில்லை. ஆகவே சொல்லு கின்ற விசயத்தை தெளிவா கவும் இரசனையா கவும் சொல்லத் தெரிந்தால் நிச்ச யமாக அந்த எழுத்து வெற்றி பெறும்'


ஒரு நல்ல விடயத்தை ஏற்றுக்கொள்கிற பக்குவம் இன்னும் எம் இளம் சமுதா யத்தினரிடையே இல்லை என்றுதான் கூறவேண்டும. அஷ்ரப் சிஹாப்தீன் போன்ற எழுத்தாளர்களின் எழுத் துக்கள் பலவகையான பரிமாணங்களில் பல்வேறு விடயங்களை தரக்கூடியவை. அத்தோடு வளர்ந்துவரும் எழுத்தாளர்கள் எவ்வாறு இரசனையு டனும் ஆழமாகவும் ஒரு விடயத்தை கையாளலாம் என்பதற்கு இவரது எழுத் துக்கள் நல்ல உதாரணங்கள்.

# Antivirus உடன் சேர்ந்து கணனியைப் பாதுகாக்கும் IOBit Malware Fighter



**பொது**வாக வைரஸ்களிடமிருந்து கணனியைப் பாதுகாக்க நாங்கள் Antivirus மென்பொருள்களைத்தான் பயன்படுத்துவோம். இருந்தும் அவை சிலநேரம் மெதுவாகத்தான் இயங்கும்.

Antivirusகளாலேயே சிலநேரம் பிரச்சினைகளை கண்டறிய முடிவதில்லை. இனி அந்தக் கவலை வேண்டாம். கணனியின் பாதுகாப்பை மேலும் அதிகரிக்க உருவாக்கப்பட்ட மென்பொருள்தான் IoBit Malware Fighter.




**இதன் பயன்கள்.**


1. Antivirusகளால் செய்யமுடியாத மால்வேர்கள் மற்றும் ஸ்பைவேர்கள் (Malwares, spywares) எங்கிருந்தாலும் கண்டுபிடித்து அழிக்கிறது. புதிதாகவும் வரவிடாமல் தடுத்து பரவாமல் பார்த்துக் கொள்கிறது. மால்வேர்கள் மற்றும் ஸ்பைவேர்களும் வைரஸைப் போன்று கணனியைப் பாதிக்கச் செய்யக் கூடியவை.

2. பலவகையான ஸ்பைவேர்கள், ஹாட்வேர்கள் (Hardwares), மோசமான ட்ரோஜன் வைரஸ்கள் (Trojans) Keyloggers, bots, worms, hijackers போன்றவற்றிலிருந்து கணனியைப் பாதுகாக்கிறது.

3. இதன் DualCore நிரல் எஞ்சின் சிக்கலான மால்வேர்கள், ஒளிந்திருக்கும் ஸ்பைவேர்களை விரைவான நேரத்தில் கண்டறிந்து அழிக்கின்றது.

4. Startup guard, Process guard, Network guard, File guard, Cookie guard, Browser guard, USB guard, Malicious Action guard. இதுபோன்று கணனிக்கு வைரஸ்கள், மால்வேர்கள் போன்றவை உள்ளே வரும் இடங்கள், பரவும் இடங்களில் உட்கார்ந்து கொண்டு அவற்றைக் கவனித்து அழிக்கிறது.

5. இந்த மென்பொருள் கணனியின் டிரைவர் கோப்புகளையும் சரியாக சோதித்து பாதுகாப்பாக வைத்துக் கொள்கிறது. இதனைப் பரிசோதிக்க மூன்று வசதிகள் தரப்பட்டுள்ளன. Smart Scan, Full Scan, Custom Scan.





Antivirus கணனியில் நிறுவப் பட்டிருந்தாலும் இந்த மென்பொருளைப் பயன்படுத்தலாம். இது ஏற்கனவே இருக்கும் Antivirus மென்பொருளோடு இணைந்து செயற்படக் கூடியது.

மென்பொருள் தரவிறக்கச்சுட்டி: http://www.iobit.com/malware-fighter.html

## பயனுள்ள அறிவு தேடுபொறி


**கூ**கிளின் மூலம் இன்று நாம் எத்தனையோ பயனுள்ள தகவல்களைப் பெற்றுக் கொண்டிருக்கின்றோம். இதுவரை ஒவ்வொரு தகவலுக்கும் வெவ்வேறு தளங்களுக்குச் சென்று எமக்குத் தேவையான பதிலினைப் பெற்றுக்கொண்டிருப்போம். ஆனால், இனி ஒரே இடத்தில் அனைத்து விடயங் களுக்கும் பதில் கொடுப்பதற்கு ஒரு தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

இணையத்தள முகவரி : http://www.wolframalpha.com




இத்தளத்திற்குச் சென்று படத்தில் காட்டியபடி இருக்கும் கட்டத்திற்குள் ஒரு கணக்கு கொடுத்தால் உடனடியாக அதற்கான விடையும் ஒரு நாட்டைப் பற்றி கேட்டால் அந்த நாட்டின் மக்கள் தொகை என்ன? எந்த மொழி பேசு பவர்கள் அதிகமாக வசிக்கின்றனர் என்பதையும் செட்டிலைட்பற்றி கேட்டால் அதற்கான புள்ளி விபரங்களுடனும் ஒரு மருந்து மாத்திரையைப்பற்றி கேட்டால் அதற்கான முழுவிபரமும் குறிப்பிட்ட ஊரைப்பற்றி கேட்டால் அந்த ஊரின் படமும் பிரபலமானவர் களைப்பற்றி கேட்டால் அவர்கள் படம், பிறந்த இடம் மற்றும் பல தக வல்கள் என இப்படி பல சேவைகளை சத்தமே இல்லாமல் செய்கிறது இத்தளம்.

அதிகமான தகவல் களை ஒரே தளத்தில் இருந்துபெற்றுக்கொள்ள விரும்பும் அனைவருக் கும் இத்தளம் பயனுள்ள தாக இருக்கும்.







**ந**மக்குத் தேவையான தகவல்களை உடனுக்குடன் கொடுப்ப தற்காக உள்ள விக்கிப் பீடியாவில் வீடியோக்களை நாம் காணமுடியாது. இந்தக் குறையைப் போக்கிகண்களுக்கு இனிய வீடியோவைக் கொடுக்க புதிய பரிமாணத்தில் வந்திருக்கும் தளம்தான் Qwiki.

இணையத்தள முகவரி : http://www.qwiki.com

இத்தளத்திற்குச் சென்று Enter Topic என்ற கட்டத்திற்குள் எதைப்பற்றிய தகவல் வேண்டுமோ அதைத் தட்டச்சு செய்து Enter பொத்தானை சொடுக்க வேண்டும். அடுத்து வரும் திரையில் நாம் கொடுத்துள்ள தலைப்பிற்கு தகுந்தபடி உள்ள பல வீடியோக்களில் ஒவ்வொன்றாக சொடுக்கிப் பார்க்கலாம். இந்த Qwikiயில் மில்லியன் கணக்கில் பல வீடியோக்கள் உள்ளன. இனி நாம் தேடும் பல தகவல்களை வீடியோவுடனேயே பார்க்கலாம்.




**பே**ஸ்புக்கில் இருக்கும் நம் உறவினர்கள், நண்பர்களின் முகவரியை குரோம் நீட்சி மூலம் சேமித்து வைக்கலாம். கீழுள்ள தளத்திற்குச் செல்லுங்கள்.

முகவரி: https://chrome.google.com/webstore/detail/ficlcidpkaiepnnboobemaf-nnfoomga

குரோம் உலாவியில் மேலே கொடுக்கப்பட்டுள்ள இணையத் தள முகவரியை சொடுக்கியதும் வரும் திரையில் Install என்ற பொத்தானை சொடுக்கி நம் உலாவியில் எளிதாக நிறுவலாம்.

அடுத்து நம் பேஸ்புக் கணக்கை திறந்தால் அருகில் உள்ளபடத்தில்காட்டியபடிExport என்ற பொத்தான் ஒன்று புதிதாக இருக்கும். இதை சொடுக்கி நம் பேஸ்புக் நண்பர்களை CSV கோப்புகளாக நம் கணனியில் சேமித்து வைக்கலாம்.

சில நேரங்களில் நம் பேஸ்புக் கணக்கு திருடப்பட்டால் உடனடியாக நம் நண்பர் களுக்கு தெரிவிப்பதற்கு இது போன்ற முன்னெச்சரிக்கைநடவடிக்கைதேவையான ஒன்றாகும்.

# கோவிலாக்கண்டியில் மணற்கொள்ளை

## நேரடி ரிப்போர்ட்



கூறையாடப்படும் எமது நிலங்கள் பற்றிய கதைகள் மிகப்பயங்கரமானவை. யுத்தத்தின் கோரத்திலிருந்து மக்கள் வெளியேறி மீளக்குடியமர்ந்த பின்பும் நிலச்சுரண்டல்களும் கொள்ளைகளும் தினம் புதுப்புது வடிவில் பெருகிக் கொண்டுதானிருக்கின்றன. அதில் ஒன்றுதான் கோவிலாக்கண்டி கிராமத்தின் மணல்கொள்ளை.

தென்மராட்சி பிரதேசத்தின் தச்சன் தோப்பு கிராமத்திற்கும் மறவன்புலவு கிராமத்திற்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள கிராமமே கோவிலாக்கண்டி கிராமம். இந்தக் கிராமத்தில் சுமார் 260 குடும்பங்கள் வசிக்கின்றன. அதில் 178 குடும்பங்கள் கடற்தொழிலை நம்பியே வாழ்கின்றன. ஏனையவர்கள் வயல், விவசாயம் உள்ளிட்ட பிற தொழில்களைச் செய்து வருகின்றார்கள். இந்தக்கிராமம் வடக்கே வயல் பிரதேசங்களையும் தெற்கே கடலையும் கொண்ட எழில்மிகு பிரதேசமாகும்.

இங்கு நிலங்களை யாரும் ஆக்கிரமிக்கவில்லை. நிலங்களை பாதுகாப்பு வலயமாக்கவுமில்லை. ஆனால், நிலங்கள் சூறையாடப் படுகின்றன. 'மணல் கொள்ளை' என்ற பெயரில் மணல் வியாபாரங்களுக்குப் பின்னால் அரசியல் இருக்கின்றபோது கோவிலாக்கண்டி கிராம மணல்கொள்ளை பற்றிய கதை, அரசியல்வாதிகளின் மறுமுகம்.



அயல்கிராமங்களைச் சேர்ந்த மணல் வியாபாரிகளால் குறிப்பிட்ட அரசியல் கட்சியொன்றின் அமோக ஆதரவில் நடத்தப்படுவதாகக் கூறப்படுகின்ற இரவுத் திருட்டே இந்த மணல் கொள்ளை.

நான் கோவிலாக்கண்டி கிராமத்திற்கு கடந்த பத்து மாதங்களுக்கு முன்பும் ஒரு தடவை சென்றிருந்தேன். அப்போது நடந்து வந்த மணற் கொள்ளை இன்றும் அதேவேகத்தில் நடந்து வருவதாகவே அம் மக்கள் கூறுகின்றனர். மணல் திட்டுக்களில் பதிந்திருந்த டக்டர் வாகனங்களின் ரயர் அடையாளங்களே, அண்மையில் நடந்த மணல் கொள்ளை பற்றிய கதைகளை உறுதிப்படுத்த போதுமாயிருந்தது. பத்துமாத இடைவெளியில் ஏதாவது மாற்றம் நிகழ்ந்திருக்கும் என்ற எனது ஆவலை தூக்கிச் சாப்பிட்டுவிட்டது போலத்தான் கோவிலாக்கண்டி கிராம மணல் திட்டுக்கள் காணப்பட்டன.

அங்கு வந்திருந்த சிறுவன் ஒருவனை துணைக்கு அழைத்துக் கொண்டு கடற்கரையோரமாக மணல்திட்டுக்களை ஊடறுத்தவாறு நடக்கலானேன். ஆங்காங்கே பாரிய குழிகளாக மணல்கள் தோண்டப்பட்டு காணப்பட்டன. பூமித்தாயின் மார்பைப் பிளந்து இரத்தத்தைக் காட்டேரிகள் உறிஞ்சியதுபோல இருந்தது அந்தக் காட்சிகள். அங்குள்ள பயன்தரு மரங்களைக்கூடப் பார்க்காது நிலங்கள் தோண்டப்பட்டிருந்தன.

இதனால் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கடல் நீர் உட்புக ஆரம்பித்திருந்தது. அக்கிராம மக்களின் பயமும் அது பற்றியதாகவே இருந்தது. இவ்வாறு மணலை அள்ளிச்செல்வதால் செயற்கையாகத் தோற்றுவிக்கும் கடல் அரிப்புக்களால் தங்கள் கிராமம் கூடிய விரைவில் நீரோடு மூழ்கிவிடும் என்பதுதான் அந்த கிராமமக்களின் ஏக்கம்.


**◄ எஸ்.ஏ.யசீக் ►**

என்னுடன் வந்த சிறுவன் 'அண்ணா ஒரு டக்டர் வண்டியில ஏழு எட்டுப்பேர் வருவாங்கள். ஒவ்வொரு சந்தியிலயும் ஆக்கள இறக்கி நிப்பாட்டிப்போட்டு வந்து மணல் அள்ளிச் செல்லுவாங்கள். பொலிஸ் வந்தா தப்பித்து ஓடிவிடுவாங்க. சிலவேள டக்டர்கள் மாட்டுப்பட்டு நிக்கும். அத பொலிஸ் எடுத்துக்கொண்டு போகும். ஆனா, திரும்பவும் அந்தாக்கள் வந்து அள்ளுவாங்க' என்றான்.

இது குறித்து அங்கு சில பெரியவர்களிடம் கேட்டேன்.

'என்னத்த தம்பியவ சொல்லுறது. அவங்கள பொலிஸில பிடிச்சுக் குடுத்தாலும் திரும்பி வந்து மணல் அள்ளுறாங்க. இதால அயல் கிராமங்களோட வீண் சோலியள்தான் நடக்குது. சில ஆக்கள் பிஸ்னசுக்கு அள்ளுறாங்கள். சில ஆக்கள் மீள் குடியேறி வீடுகட்ட அள்ளுறாங்கள். சாராயத்துக்கு அஞ்ச பத்த வாங்கிக்கொண்டு எங்கட ஊர் ஆக்கள் சிலரே அவங்களுக்கு உதவேக்க எங்களால என்னத்த செய்ய முடியும். அவங்கள் மணல் அள்ள வரேக்க கத்தியள், பொல்லுகளோடதான் வாறாங்கள்.

எல்லாம் பெலிஸ்காரர்களின்ர கையிலதான் இருக்கு. ஆமிக்காரங் களும் அடிக்கடி கூட்டங்கள் வைச்சு கதைச்சுப்பாத்திட்டான். ஆனா எதுவும் நடக்கேல்ல. சிலதுகள எங்களால சொல்லேலாது தம்பி. சிலவேள ஏதாவது வாங்கிட்டு கண்டும் காணாம இருக்கிற மாதிரியும் தெரியுது' என்றார்.



இந்தக் கிராமத்தைப் பொறுத்தவரை பொலிஸ் நிலையம் அருகில் இல்லை. பொலிஸாருக்கு தகவல்கொடுத்து அவர்கள் வருவதற்குள் மணல் அள்ள வந்தவர்கள் வேலையை முடித்து வெளியேறிவிடுகிறார்கள்.

மணல் அள்ளப்படுவதால் அங்கு நின்ற பல தென்னை மற்றும் பனை மரங்கள் வேரோடு சாய்ந்துவிட்டன. பல மரங்கள் மரணித்துவிட்டன. கடல் நீர் கிராமத்துக்குள் புக ஆரம்பித்து விட்டது. இந்த மணல் கொள்ளை களைத் தடுத்து நிறுத்தாத பட்சத்தில் கோவிலாக்கண்டி மக்களுக்கு மீண்டும் ஒரு நிரந்த இடப்பெயர்வு காத்திருக்கிறது என்பது மட்டும் உண்மை ●

---

**◄ சிலோன் சின்னத்தம்பி ►**



*வணக்கம் பாருங்கோ! எப்பிடிச் சுகமா இருக்கிறியளே...?*

*குடாநாட்டில கடந்த ஐஞ்சி மாதங்களில சட்ட விரோதமாய் சாராயம் வித்த 71 பேரைப் புடிச்சு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில நிறுத்தியிருக்கினமாம் மோன. அனுமதியில்லாம சாராயம் வித்தவயள், வீடுகளில வைத்து சாராயக்கடை நடத்தினவயளும் இதில அடங்கினமாம். நீதிபதி 79 ஆயிரத்து 400 ரூபா அபராதம் விதிச்சு தீர்ப்பளிச்சிருக்கிறாராம். என்னதான் அவர் தீர்ப்பளிச்சாலும் எங்கட சனங்கள் திருந்தாது பாருங்கோ. சந்துக்குள்ளயும் பொந்துக்குள்ளயும் வைச்ச அதுகள் வித்துடுங்கள். இப்ப யாழ்ப்பாணத்தில சாராயக்கடைகளும் தவறணைகளும்தான் எங்கட 'குடிமக்களுக்கு' பார்ளிமெண்ட் பாருங்கோ. அரசியல் சும்மா தூள்பறக்குதாம் மோன. அதுவும் ஒரு 'பெக்' உள்ள போனதும் புள்ளிவிபரங்களோட புட்டுப் புட்டு வைக்கினமாம். பொன்சேகாவிலயிருந்து கடாபிவரைக்கும் கன கச்சிதமாய் அரசியலில எங்கட ஆக்கள் வெளுத்து வாங்கினமாம். எங்கட ஆக்கள் அரசியல் ஆய்வாளர்களாகமாறி செய்யிற அட்டகாசத்தில கேஸ் கணக்கில அடுக்கி வைச்சிருந்த போத்தலுகள் எல்லாம் றோட்டில ஆளையாள் முட்டிமோதி உருண்டோடுதாம் பாருங்கோ. புள் ஒண்டு அடிச்சிட்டு நமிதா ஸ்டைலில றோட்டால வந்த ஒருத்தரிட்ட கேட்டன் 'ஏனண்ணே இப்படிக் குடிக்கிறியள்?' எண்டு, அதுக்கு அந்த குடிமகன் 'நாட்டில விலைவாசியெல்லாம் கூடிட்டுதாம் தாங்க முடியாத கவலையில குடிக்கிறாராம்' இதுக்கெல்லாம் பச்சை மட்டை அடிதான் பாருங்கோ சாரி. பச்சை மட்டை அடிகள மறந்திருக்க மாட்டியள் எண்டு நினைக்கிறன்.*

*அப்ப நான் போட்டு வரட்டே...!*

# நாடும் நடப்பும்

## யாழ்ப்பாணத்திற்கு வந்த புத்தபெருமான்!

யாழ்ப்பாணத்தில பௌத்த சங்க திறப்பு விழாவுக்கு கனக்க பிக்குமார் வர, அதப்பாத்துட்டு வந்து என்ர பேரன் புத்த பொருமான் யாழ்ப்பாணம் வந்தவர் எண்டு சொல்ல நான் பதறிப் போட்டனுங்கோ. எனக்கு கையும் ஓடல! காலும் ஓடல! ஏதோ வில்லங்கம் நடக்குது எண்டு விளங்கிச்சு. எங்கயடா வந்தவர் எண்டு கேக்க 'அவர் கந்தர்மடம் சந்திக்குப் பக்கத்தில பழம் றோட்டில நிக்கிறார், அவரோட கனக்க சாமிமாரும் வந்தவ... ஆமிகாறரும் நிக்கீனம் தாத்தா' எண்டு சென்னான். எனக்கு ஒண்டும் புரியேல்ல. எதுக்கும் ஒரு மிதி மிதிச்சுப் போய்ப்பாப்பம் எண்டு என்ர பழைய சைக்கில எடுத்துக்கொண்டு போனனுங்கோ. என்ன கெற்றப்போல் சந்தியில் ஆமிக்காரங்கள் மறிச்சுப்போட்டாங்கள் 'கொய்த யன்னே' எண்டு கேட்க நானும் அவசரத்தில 'புத்தரப் பாக்க' எண்டு சொல்லிட்டன். அவன் சிரிச்சுப்போட்டு 'ஓப்பனிங்கோ' எண்டு கேட்டவன் எனக்கு சங்கதி தெரியாது எண்டாலும் சமாளிச்சு ஓமெண்டு சொல்லிட்டு வண்டிய எட்டி மிதிச்சன்.

அங்கபோய் பாத்தா ஆமிக்கார தம்பி சொன்னது போல ஏதோ திறப்பு விழாத்தான். என்ன திறப்புவிழா எண்டு அங்க நிண்ட பேப்பர் ரிப்போட்டர் பரமசிவத்த கேட்டன். 'அது அண்ண பௌத்த சங்கம் துறக்கிறாங்கள் அதுதான் படம் எடுக்க வந்தனான்' எண்டு டிஜிட்டல் கமராவ தூக்கிப்பிடிச்சார் பரமசிவத்தார். அங்க பாத்தா ஆமிக்காரரும் கனக்க பிக்குமாரும் நிண்டிச்சினம். துறப்புவிழாவுக்கு எங்கட ஆக்களும் கனக்க பேர் வந்திருந்திச்சினம். நானும் நிண்டு பாத்திட்டு கிளம்பிட்டன். போன கிழமதான் யாழ்ப்பாணத்திற்கு 28 புத்தர் சிலையள் வந்ததா கேள்விப்பட்டனுங்கோ. அதுக்குள்ள யாழ்ப்பாண கம்பசில பௌத்த ஒன்றியம் தொடங்கினவங்களாம். போற போக்குப்பாத்தா ஏன்ர பேரன் சொன்ன மாதிரி யாழ்ப்பாணத்துக்கு புத்த பெருமான் வரப்போறார் போலத்தானுங்கோ கிடக்கு.


ஆனா பாருங்கோ என்ன நடந்தும் எதுக்கும் கவலப்படாம எங்கட சமயத்தில பெரியாக்கள் எண்டு சொல்லுற ஆக்கள் சிலபேர் தங்களின்ர பிறந்தநாள் விழாவ பெருசாக் கொண்டாடினவயாம். அதுவும் இந்து மாமன்றத்தின்ர சிவதொண்டர் மாநாடெண்டு நோட்டிஸ் எல்லாம் அடிச்சு ஆக்களக் கூப்பிட்டு அங்க ஒருத்தர் தன்ர பிறந்தநாள் கொண்டாடினவராம். அவரை வெளிநாட்டில நிக்கிற சில சாமியாக்கள் அந்த முகம்பாத்துக் கதைக்கிற மிசினால பிறந்தநாள் வாழ்த்துச் சொன்னவையாம். இதக் கேள்விப்பட்ட எனக்கு நெஞ்சு வெடிச்சுடும்போல இருந்ததுங்கோ.

எல்லாக் கவலயோடயும் வெள்ளிகிழம பின்னேரம் நல்லூர் கோயிலுக்குப் போனனுங்கோ. அங்க 6 மணிக்குப் பிறகு நிக்கேலாதெண்டு ஆமிப்பெடியள் கலச்சுப்போட்டாங்கள். ஏன் தம்பியவ எண்டு கேட்டன். 'ஐயா நல்லூர் கோவில் வீதியில உங்கட ஆக்கள் அசிங்கம் பண்ணுறது. அதுதான் நாங்க யாரையும் விட்றதில்ல. 6 மணிக்கு அப்புறம் இங்கு யாரும் நிக்க இல்ல இது பெரியதுரை ஓடர்' எண்டு தனக்கு தெரிஞ்ச தமிழில் சொன்னாங்கள். எனக்கு அந்த ஆமிக்காரனிட்ட 'தென்னிலங்கையில இருந்து வாற உங்கட ஆக்கள் இங்க நல்லூர் வீதியிலயும் முன்னியப்பர் வீதியிலயும் என்ன அசிங்கம் பண்ணுறவ எண்டு எனக்கல்லோ தெரியும்' எண்டு கேட்க வேண்டும் போல இருந்தது. நான் பேசாம அங்க இருந்து வெளியேறிட்டன்.

புருசன் இல்லாம கஸ்ரப்பர்ற என்ர பிள்ளையையும் என்ர பேராண்டியையும் என்ர பெஞ்சன் சீவியம் தான் காப்பாத்துது. நான் ஏதும் வில்லண்டத்துக்கு கதைக்க போய் அது வினையில முடிஞ்சிடக் கூடாதெண்டு நடையக் கட்டிட்டனுங்கோ. யுத்தம் முடிஞ்சு ரண்டு வருசம் போனாலும் எங்கட சனம் ஆமிக்கு பயந்து தானுங்கோ வாழுதுகள். பின்னப் பாருங்கோ இப்பவும் ஆமிப்பதிவு, பொலிஸ் பதிவு எண்டு அலையவேண்டியதாக் கிடக்கு. ஆமிப்பதிவு நடக்குதெண்டு எங்கட கூட்டமைப்புக்காரர் கோட்டில வழக்குப் போட்டவயலெல்லோ இப்ப இஞ்ச விதானமார் மூலமா பொலிசுக்காரர் சனத்தின்ர விபரங்கள் பதியினமாம்.

ஆனா, ஒரு சனத்துக்கும் இது என்ன பதிவெண்டு தெரியாதாம். ஏதோ நிவாரணப் பதிவெண்டல்லோ எங்கட சனங்களும் பாஞ்சடிச்சு பதியுதுகள். இதக்கேக்கப்போய் எங்கட விதானயோட நான் நேற்று கொழுவுப்பட்டுட்டனுங்கோ, எங்கட விதானமாரும் இப்ப சண்டித் தனம் பாருங்கோ. அந்த பொலிசு பதிவு பற்றியும் விதானயோட சண்ட பிடிச்ச சங்கதியையும் நான் வாற கிழம சொல்லுறனுங்கோ. எனக்கு அலுவல் கிடக்கு. அப்ப நான் போட்டு வறனுங்கோ.

**- வண்டில்கார வைரவி அப்பு**




**நூல் : இஸ்ரேலின் உருவாக்கம்**
**ஆசிரியர் : ஞா.சிறிமனோகரன்**
**வெளியீடு : புதியபூமி வெளியீட்டகம்**
**விலை : ரூ. 200**

உலகத்திலுள்ள பல நாடுகளின் உருவாக்கம் பற்றி தெளிவான ஒரு அறிவு எமக்கு கிடையாது. ஏதோ உருவாகியிருக்கிறது என மேலோட்டமாக சொல்லிக் கொள்வோம். அப்படி உருவான நாடுகளில் பலரும் தெரிந்து கொள்ள விரும்பும் ஒரு நாட்டின் உருவாக்கம் பற்றிய ஆய்வு நூல்தான் 'இஸ்ரேலின் உருவாக்கம்'

முஸ்லிம்களை பெரும்பான்மையாக கொண்ட பலஸ்தீன நாடு எப்படி யூதர்களின் இஸ்ரேலாக மாறியது என்பதற்கு தெளிவான விளக்கத்தை சுருக்கமாகத் தந்திருக்கிறார் ஆசிரியர்.

ஆரம்பத்திலேயே யூத மதமும் – யூத மக்களும்' என்ற கட்டுரையில் யூத மதம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியது என்ற கருத்து பொய்யானது என்பதை தெளிவுபடுத்துகிறார். மேலும் யூத மக்களின் போராட்டம், ஆங்காங்கே இருந்த யூத மக்கள் எப்படி ஒன்று சேர்ந்தார்கள் என்ற பல கேள்விகளுக்கு சரியான பதிலை தக்க சான்றுகளோடு முன்வைக்கிறார். இது ஆசிரியரின் தேடலினதும் வரலாற்று உண்மைகளை வாசகனுக்கு சரியாகத்தர வேண்டும் என்ற உயரிய எண்ணத்தினதும் வெளிப்பாடாகும்.

அரபு தேசத்தின் பொருளாதார பலமே கனிய வளம்தான். அதனை தன் வசப்படுத்திக் கொள்ள மேலைத்தேய வல்லரசுகள் எவ்வாறு முயன்றன, இஸ்ரேலின் உருவாக்கத்தில் அந் நாடுகளின் பங்களிப்பு என பல விடயங்களை அறிந்து கொள்ள இப் புத்தகம் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

இஸ்ரேல் பற்றிய வரலாற்று உண்மைகளின் பதிவே – இஸ்ரேலின் உருவாக்கம்.

**- மாயா**




எழுத்தாளர்களே...!
நீங்களும் நூல்களை வெளியிட்டிருந்தால், உங்களுடைய நூலின் இரண்டு பிரதிகளை எமக்கு அனுப்பிவையுங்கள். நிச்சயமாக அவை 'இருக்கிறம்' சஞ்சிகையின் றாக்கை பகுதியில் பிரசுரிக்கப்படும்.

'இருக்கிறம்' வார இதழ்,
இல.03, டொரிங்டன் அவனியூ, கொழும்பு-07
தொலைபேசி: 011 3150836.
மின்னஞ்சல்: irukiram@gmail.com

## தந்தி அறுபட்ட வீணைகளாய்...

என்னவென்று புரியாமலும்
ஏதென்று தெரியாமலும்
உருப்பெறாத சில உணர்வுகள்
மீட்சிபெற்று இதயத்தினுள்
தொற்றியதாய்
ஒரு உணர்வு உற்பவிப்புக்
கொள்கின்றது
வார்த்தைகளை முழுமையாக
பிரசவிப்பதற்கு – என்
எழுது கோல் எழுந்து கொள்கின்றது.
இருப்பினும் விரல்களினிடுக்கே
இடப்பட்டிருக்கும்–சில
கடிவாளங்கள் இறுக்கம் கொள்கின்றது.
குரூரங்கள் நிறைந்துவிட்ட இவ்
அண்டவெளியில் வாழ்வு
மீதான நிலையாமை கருத்தியல்கள்
இன்னும் இன்னுமாய் அகலப்படுத்தப்
படுகின்றது.
மனச்சிறைகளினுள்ளே ஆயுட்கால
நினைவுகளாய்
அடைபட்டுக்கிடக்கும் சில உணர்ச்சி
மிகு உணர்வுகளை
விலக்கிக்கொண்டுவிட சில
வரன்முறை மீறிய காரணிகள்
எழுச்சி கொள்கின்றன இங்கு.
விலக்கமுடியாத நினைவுகளின்
மீட்சிக்காக கண்முன்னே
சில சம்பாஷனைகள் சம்பவித்துக்
கொள்கின்றன.
அவை ஆழப்பொதிந்திருக்கும் சில
உணர்வுக் கொப்பளங்களை முட்டிக்
கொள்கின்றன.
அடங்கிக்கொள்ளல் என்னும்
அறிவின் வனாந்தரம்
கடந்துவிட்ட எம் யதார்த்த வாழ்தலில்
ஆண்டாண்டு காலமாய்
அனைத்தையுமே
அடக்கி வாழவும் நாம்
பழகிக்கொண்டோம்.
என்ன செய்து விட வன்மங்கள்
எங்குமே நிலையாக சூழ்ந்திருக்கும்
இவ்வாழ்வு குறுகிய ஒரு வட்டத்தினுள்
குறுகிக்கொள்கின்றது.
மனந்திறந்து அழுவதற்குக்கூட
கண்களிடம்
அனுமதி பெறவேண்டிய துர்ப்பாக்கிய
சாலிகளாகிப்போனோம்.
இல் வாழ்க்கை எமக்கு
இதுவரை இனித்ததில்லை
நம் ஆயுளின் அந்திவரை
உணர்வுகள் உடைபட்டு
எல்லாவற்றையும் மனச்
செடிகளினுள்ளே பொசிக்கிய படி
ஆகிப்போனோம்.
இப்போது தந்தி அறுபட்ட
வீணைகளாய்....

**- வெற்றிவேல் துஷியந்தன்**

# வவுனியாவில் முன்னாள் போராளிகள் விடுதலை



## மனதை உலுக்கிய உறவுகளின் அழுகுரல்கள்




**◄ யாத்ரா ►**

வவுனியாவில் உள்ள புனர் வாழ்வுப் பயிற்சி நிலையங்களில் புனர்வாழ்வுப் பயிற்சியை முடித்துக் கொண்டவர்களில் ஒரு தொகுதியினரை விடுதலை செய்யும் நிகழ்வொன்று அண்மையில் வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றிருந்தது. புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் 900 பேரை விடுதலை செய்வதாகக் கூறிய அரசாங்கம் இறுதி நேரத்தில் 350 பேரை மட்டுமே விடுதலை செய்திருந்ததை நீங்கள் செய்திகள் வாயிலாக அறிந்திருப்பீர்கள்.

ஏற்கனவே 900 முன்னாள் போராளிகளின் விடுதலை பற்றி அவர்களின் உறவினர்களுக்கு அரசாங்க அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு தரப்பினர் ஊடாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதனால் தமது உறவினர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்ற முழு நம்பிக்கையுடன் தூர இடங்களில் இருந்தெல்லாம் மக்கள் கடந்த 3 ஆம் திகதி முதல் வவுனியாவில் குவிந்தார்கள்.

மறுநாள் காலை விடிந்தது. தமது உறவுகளைப் பார்க்கப்போகின்றோமே என்று நீண்ட தூரங்களிலிருந்து பலத்த சிரமங்களுக்கும் மத்தியில் கைக்குழந்தைகளுடன் வந்திருந்தவர்களுக்கு நடந்ததோ வேறு. விடுதலை செய்யப்படவுள்ளதாக கூறப்பட்ட 900 பேரில் 350பேர் மட்டுமே விடுதலையானார்கள். மிகுதிப்பேர் விடுவிக்கப்படவில்லை. ஆற்றாமையால் மக்கள் அழுதார்கள். ஓவென்று அலறினார்கள். கடுமையான விரக்தியில் கோசம் எழுப்பினார்கள். அவர்களின் க்ண்களிலிருந்து கண்ணீர் சொரிந்தது. எனினும் இது குறித்த செய்திகளை வெளியிட எந்த ஊடகவியலாளராலும் முடியவில்லை. அவர்கள் செய்திகளை வெளியிட முடியாதவாறு கட்டுப்படுத்தப் பட்டார்கள்.

உறவுகளில் சிலர் எமது அலுவலகத்துக்கு தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு நடந்தவற்றைக் கூறி அழுது குளறி சத்தமிட்டனர். பாதுகாப்புக் கருதி அவர்களுடைய பெயர் விபரங்களை வெளிப்படுத்துவதை தவிர்க்கின்றோம். எம்முடன் தொடர்புகொண்ட முன்னாள் போராளியொருவரின் மனைவி இவ்வாறு தனது ஆற்றாமையை வெளிப்படுத்தினார்.

'நேற்று முதல் நாளிலிருந்து யூசி கிரவுன்ஸில போய் நிக்கிறம். 900 பேரையும் விடுவம் எண்டு எங்களை வரச்சொல்லி நாங்கள் வந்து நேற்று முழுக்க லொட்ஜில தங்கி இரவு படுக்கக் கூட இடமில்லாமல் விடிய வந்து நிக்கி றம் குழந்தை குட்டியோட. எங்களுக்கு இண்டைக்குக்கூட ஒரு முடிவும் தர்றாங்கள் இல்லை. எங்கட கணவர்மாரை கெதியில விடுதலை செய்து தரச்சொல்லிச் சொல்லுங்கோ, எங்கட கையில கூட்டிக் கொண்டுவந்து தரச்சொல் லுங்க அண்ணா. நாங்கள் யாழ்ப்பாணத் திலயிருந்து வந்திருக்கிறம். ஒரு முடிவும் இல்லாமல் இருக்கிறம். 350 பேரைத்தான் கொண்டந்து வைத்திருக் கிறாங்கள். விடுறம் எடு எங்களுக்கு ஒரு முடிவும் சொல்லயில்லை. எங்கட கணவர் மாரை தரச்சொல்லிச் சொல்லுங்கோ' மேலும் பேச முடியாமல் அவரது நா தழுதழுத்தது.

இன்னுமொரு முன்னாள் போராளியின் உடன்பிறப்பு தொடர்பு கொண்டு 'இப்புடிஎல்லாம்செய்யினம். நேற்று விடுறம் எண்டு சொல்லி 900 பேரையும் கொண்டந்தவையள் கொன்னந்திட்டு இப்படிச்சொல்லிட்டு விட்டிட்டீனம். பிள்ளையோட வந்து நாலு நாள் வவுனியாவில லொச்சில படுக்க இடமில்லாமல் எவ்வளவு நாள் நிண்டனாங்கள். உப்புடி விடாம விட்டால் எப்படி இருக்கும். நான் பளையில இருக்கின்றேன். இண்டைக்கு நாலு நாள் வந்து விடவில்லவிடுறது எப்ப என்று சொன்னால் தன்னும் ஆறுதலா இருக்கும். ஒண்டுமே சொல்லினம் இல்லை. கேட்க ஓராள் ஒரு மாதிரிச் சொல்லுகினம்' என்றார்.

மற்றுமொரு முன்னாள் போராளியின் சகோதரி எம்முடன் உரையாடும்போது, 'யாழ்ப்பாணத்திலிருந்துவாறம்அண்ணா. எங்களுக்குச் சரியான கஸ்ரமான நிலையிலும் தோட்டை வித்துட்டுத்தான் வந்தனாங்கள். விடுறம் எண்டு சொல்லி பெயர் விபரம் எல்லாம் வந்தது. இப்ப அவையளை விடல்ல. விடுறன் எண்டுட்டு விடாமல் இருக்கினம். நாங்கள் எங்கட பிள்ளையளோட வந்து நிக்கிறம். இப்ப கேட்கச் சொல்லினம் 'நாங்க நாளைக்கு விடுறம்' எண்டு சொல்லி, அதுண்ட முடிவு என்னண்டு தெரியல. எங்களை நிக்கச்சொல்லிட்டு நாங்கள் இரவிலிருந்து உடுத்த உடுப்போட நிக்கிறம். இங்க வந்து மூண்டு நாள்' தொடர்ந்து பேசமுடியாமல் விம்மி அழுதார்.

முன்னாள் போராளியொருவரின் ஒரு தகப்பன், 'பிள்ளையள விடுறம் எண்டு சொல்லி நேற்று வந்தனாங்கள். விடேல இதுவரையும் ஒரு கொஞ்சப் பேரைத்தான் விடுறாங்கள். அவங்கள விடுறன் எண்டு சொல்லி முடிவு எதுவும் சொல்லல. எங்களைநிக்கச்சொல்லி இருக்கிறாங்கள். விடுற அளவுக்கு இன்னும் சாத்தியக்கூறு இல்லை. இன்னும் விடுறதா ஒன்றும் சொல்லல' என்றார்.


நிகழ்வுக்கு வந்திருந்த ஒருவர் '900 பேரையும் விடுதலை செய்யப்போவதாக அறிவித்து குறிப்பிட்ட நிகழ்வுக்கு அவர்களையும் கொண்டுவந்து விட்ட பிறகு 350 பேரை மட்டுமே விடுதலை செய்திட்டு மீதிப் பேரை திரும்பவும் புனர்வாழ்வு முகாம்களுக்கு ஏத்திட்டாங்கள். 350 பேர்தான் இங்க நிக்கிறாங்கள். சனம் அழுது புலம்பி சரியான கஷ்டப்பட்டுக்கொண்டு நிக்கீனம். அதிகாரிகள் அந்தச் சனத்தை வந்து சமாளிக்கின்ற செயற்பாடுகளில் இருக்கின்றீனம். மோசமாக நிண்டாக்களை கூப்பிட்டுச் சமாளிக்கிறாங்கள். இவ்வளவு நேரமும் நகரசபை வாசலை சனங்கள் எல்லாம் அடைத்து வைத்திருந்தாங்கள். பெரிய பாவமாய் கிடக்குது எல்லாரும் குழந்தைப் பிள்ளைகளோட வந்து நிண்டு அழுகுதுகள்' என்று மனவேதனைப் பட்டார்.

இவை மக்களின் குரல்கள். அழுவதையும் ஆற்றாமையால் புலம்புவதையும் தவிர அவர்களால் வேறு என்ன செய்ய முடியும். அரச அதிகாரிகள், காவற்துறை அதிகாரிகள், ஜனாதிபதியின் இணைப்பாளர் என அனைவருடனும் இம்மக்கள் பேசினர். ஆனால் அவர்களிடமிருந்து கிடைத்த பதிலோ விடுதலை செய்வதற்கான பத்திரங்கள் பதியப்படும் வேலைகள் முடியவில்லை. முடிந்தவுடன் விடுதலை செய்யப்படுவர் என்பதாக அமைந்தது. 2 வருடங்களாகியும் முடியவில்லையா என மக்கள் அழுது புலம்பினார்கள். இவற்றையெல்லாம் அவதானித்துக் கொண்டிருந்த ஒரு சில பாதுகாப்பு அதிகாரிகளும் மற்றும் பெரும்பான்மையின அரச அதிகாரிகள் சிலரும் மக்களுடைய நிலையைப்பார்த்து வேதனைப் பட்டதைக் காணக்கூடியதாக இருந்ததாக எமது நிருபர் தெரிவித்தார்.

இது தொடர்பில் புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் சுசந்த ரணசிங்கவிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது;

'கூறினால் கூறியதுபோல புனர்வாழ்வளிக்கப்பட்ட அனைவரையும் ஒரே தடவையில் விடுதலை செய்யமுடியாது. அவர்கள் தொடர்பான விபரங்களை பதிவு செய்ய வேண்டும், அவர்களுக்கான சான்றிதழ்களை வழங்க வேண்டும். இப்படி பல நடைமுறைகள் இருக்கின்றன. எல்லோரையும் ஒரே தடவையில் விடுதலை செய்வதென்பது முடியாத காரியம்' என்று கூறினார்.

இது இவ்வாறிருக்க அன்றைய தினம் நடாத்தப்பட்ட களியாட்ட நிகழ்விலும் இதனோடு நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியிலும் வருகை தந்திருந்த அமைச்சர்களும் அதிகாரிகளும் பங்குபற்றி தமது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டபின் வாகனங்களிலேறி கொழும்புக்குச் சென்றுவிட்டனர்.



உறவினர்களை அழைத்துச் செல்வதற்காக காதில் போட்டிருந்த தோட்டை அடகுவைத்து வவுனியா வந்த முன்னாள் போராளிகளின் மனைவிமார், கழுத்தில் போட்டிருந்த சங்கிலிகளை விற்று தமது பிள்ளைகளை அழைத்துச் செல்ல வந்த தாய்மார் எல்லோரும், அமைச்சர்களும் அதிகாரிகளும் வாகனங்களிலேறிப் போவதை கொடும் வெயிலில் வெறித்தபடி பார்த்து நின்றார்கள். அவர்களின் கண்களிலிருந்து கன்னங்களில் வழிந்த கண்ணீர் காய்ந்துபோய் இருந்தது.





**மூலம்: ரங்கா சந்திரரத்தினே**

**தமிழில்: எஸ்.சற்கு**

# 'பம்பர வலள்ல' Bambara Walalla

அத்துல லியனகேயின் கன்னி இயக்கத்திலமைந்த புதிய திரைப்படமே 'பம்பர வலள்ல' அதாவது 'சுழற்காற்று' என்று தமிழில் பொருள்படும். இத்திரைப்படமானது சமகாலத்தின் இருள் படர்ந்த சமுதாயச் சூழலை வெளிச்சத்துக்குக் கொண்டுவரும் ஒரு முயற்சி என்றும் சொல்லலாம். இத்திரைப்படத்தை ஒருபக்கம் சமுதாயச்சூழலின் இருண்ட பகுதிக்கும் மறுபக்கம் மனித உள்ளத்தின் இருண்ட பகுதிக்கும் செல்லும் சினிமாப் பயணமாக மிக யதார்த்தமாக படைத்திருக்கிறார் இயக்குநர் அத்துல லியனகே.

திரைப்படத்தின் முக்கிய பாத்திரங்கள் உள்ளடங்கலாக சந்தோசமற்ற சந்ததியினர் அனைவரும் தப்பிக்க முடியாதவாறு உறவுச்சிக்கல்களைக் கொண்ட சுழற் காற்றிலடக்கப்பட்ட சாதாரண போராளிகளாகவே சித்தரிக்கப்பட்டுள்ளார்கள். வாழ்வில் மிகச்சிறியளவு அல்லது ஒன்றுமற்ற தெரிவுகளைக்கொண்ட சமூக, பொருளாதார நிலையினையும் அத்துடன் இழப்புகளின் மேலாதிக்கத்தினையும் கொண்ட சமூகச்சூழலில் இவர்கள் பிறந்திருக்கிறார்கள். பார்வையாளருக்குகாட்டுவதற்குஎவற்றைவைத்திருக்கிறார் என்பதனைப் புலப்படுத்துவதற்கு ஒரு தொகைக் குறியீடுகளை முதலாவது காட்சியிலிருந்து படத்தயாரிப்பாளர் உபயோகிக்கின்றார். இருண்ட காட்சியானது இறைச்சிக்காக வெட்டுமிடத்திற்கு மாடுகளைக் கொண்டு செல்லும் லொறியின் இருளுக்குள் மெதுவாக நகர்ந்துசெல்கிறது.




அத்துல லியனகே

பின்னர் படத்தின் கதாநாயகனான 'பொடி எக்க' [சச்சின் சத்துரங்க] தனது மாமனின் சேனைப்பயிர்ச்செய்கைக்கு பிளாஸ்டிக் டப்பாவில் நீர் கொண்டு செல்லும் காட்சி. படம் மெதுவாக நகர்ந்தாலும் கொடூரமான வாழ்வு நிலைகளைச் சித்தரிக்கும் காத்திரமான காட்சிகளைக் கொண்டுள்ளது. கொடிய வறுமை காரணமாக கல்வி கற்கமுடியாத நிலையில் வாழ்நாள் முழுவதுமே கல்வியறிவற்றவனாக இருக்கிறான் பொடி எக்க. அவனது இளமைப்பருவமானது இவனது பைத்தியமான தாயார், இவனது சகோதரி மாமனால் வன்புணர்ச்சிக்குள்ளாக்கப்பட்டு தற்கொலை செய்துகொண்டமை, இதன் காரணமாக மாமனைக் கொலை செய்தமை ஆகிய அவல நிகழ்வுகளால் சீரழிக்கப்பட்டிருக்கிறது. கம்புகளும் களிமண்ணும் கொண்ட சுவர்களில் தனது குடும்பத்திலுள்ளோரின் எண்ணிக்கையைக் குறிக்க சிலுவை வடிவில் குறியீடுகளை வரைகிறான். அறியாமையின் குறியீடுகளாக இவை அமைந்தாலும் இயக்குநர் வேறொரு காரணத்திற்காக அதாவது ஹிஸ்டீரியா மனநோயால் தாயார் பாதிக்கப்பட்ட நிலை மற்றும் அவலமான கடந்தகாலம் ஆகியவற்றிற்காக இவற்றைப் பயன்படுத்துகின்றார்.

தனது பிள்ளைப் பருவத்தினை சிறையில் கழித்துவிட்டு, வளர்ந்த மனிதனாக பொடி எக்க மீண்டும் கிராமத்திற்கு வருவதுடன் வன்செயல்கள் கொண்ட கட்டத்தினை படம் நெருங்குகிறது. சமூகவியல் மாற்றத்திற்கு உள்ளாகாததால் இவன் பக்குவமற்ற உணர்ச்சிகளை வெளிக்காட்டுகிறான். உதாரணமாக மச்சாளிடம் காதலை விகாரமாகச் சொல்ல, அவள் அதை நிராகரிக்க, இவன் அவளது முடியினை வெட்டுகிறான். உயிருக்குப் பயந்த மாமன் இவனது தாயாரின் குடிசைக்குத் தீவைத்து தனது குடும்பத்துடன் ஊரை விட்டோடுகிறான். பின் இனங்காணாத குழுவினால் பொடி எக்க தாக்கப்படுகிறான். பிரேதசாலை நடாத்தும் மால் என்பவன் வீதியில் காயமுற்றுக் கிடந்த பொடி எக்கவினை வைத்தியசாலையில் சேர்க்கிறான். மால் ஆரம்பத்தில் நல்லவனைப்போன்று தோன்றினாலும் மறைமுகமான நோக்கத்துடன் பொடி எக்கவினைத் தனது பிரேதசாலையில் நம்பிக்கைக்குரிய பாதுகாப்பாளனாக அமர்த்துகிறான். மால் மக்களைச் சுரண்டுகிறவனாகக் காண்பிக்கப்பட்டாலும் [மகேந்திர பெரேராவின் கச்சிதமான நடிப்பு] இவனது பாத்திரம் மிகமோசமான செயல்களில் ஈடுபடுவோரைப் பிரதிபலிக்காதிருக்குமாறு இயக்குநர் கவனம் செலுத்தியுள்ளார்.

வெறுங்கையுடன் பிரேதசாலைக்குவரும் மக்களுக்கு மால் எப்போதும் உதவிபுரிவான். ஆனால், அதேநேரத்தில் தனது தொழிலுக்காக மக்களை இரக்கமில்லாது சுரண்டுவான். அவனது பழைய வேலைக்காரர்களை தொழில் ரீதியில் தனது எதிரிகளிடம் பகடைக்காய்களாக வைத்திருப்பான். வாட்டசாட்டமான பொடி எக்க, மாலின் அதிகாரத்தின் கீழ் அவனது தொழில் எதிரிகளைச் சுட்டுத்தள்ளும் வலுப் பெற்றிருந்தான். முடிவில் மாலினைக் கொன்று பொடி எக்க தொழிலுக்கு முழு உரிமையாளனாகிறான். தனக்கெதிராக மாலினால் செய்யப்பட்ட சதியினை முறியடித்து அவனைக் கொன்று அவனது உடலுக்குத் தீ வைக்கிறான்.

இத்திரைப்படத்தில் இரண்டு கதாபாத்திரங்களை அத்துல லியனகே உருவாக்கியுள்ளார். பொடி எக்க படத்தின் கதாநாயகன், மால் வில்லன். எஞ்சிய பாத்திரங்கள அனைத்தும் இவ்விரண்டு பாத்திரங்களின் நிலைகளை அல்லது சூழல்களைச் சித்தரிக்கவே பெரிதும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. உதாரணமாக பொடி எக்கவின் தாயாரும் கிராமமும் பொடி எக்க வளர்ந்த மோசமான கடந்த காலத்தைக் காட்டுகின்றன. உண்ண உணவிற்கே திண்டாடுகின்ற



மோசமான சமூக, பொருளாதார நிலையில் வாழும் ஒதுக்கப்பட்ட சமூகத்தினரை ஒருபுறமும் மனித வாழ்வின் இருண்ட அவலத்தினை மறுபுறமும் பொடி எக்கவின் பாத்திரம் பிரதிபலிக்கின்றது. இவன் கல்வியறிவற்றவனாகையால் இவனது உணர்வுகளும் பக்குவமற்றவையாகவும் நாகரீகத்தின் கட்டுக்குள் அடங்காதவையாகவுமுள்ளன.

மற்றையோரின் இறப்பில் சீவியம் நடத்தும் மால் ஒரு சிக்கலான பாத்திரம். தனது பிரேதசாலையை நடத்துவதற்கு மக்களையும் அவர்களது கையாலாகாத நிலையினையும் சுரண்டுவதற்குச்சாதகமாகப்பயன்படுத்துகிறான். இக்கட்டான நிலையிலுள்ளோருக்கும் வெறுங்கையுடன் வருவோருக்கும் உதவுகிறான். இறுதியில் அவனது தாராள மனத்தினாலும் அத்துடன் வங்கிக்கடன் சரியாகச் செலுத்தப்படாத நிர்வாகச் சீர்கேட்டினாலும் ஒட்டாண்டியாகும் நிலைக்கு வந்துவிடுகிறான். மாலின் தொழிற் பதவியினைக் கைப்பற்ற எத்தனிக்கும் ஜினேயின் பாத்திரமும் முக்கியமானதாகும். மாலின் நம்பிக்கைக்குரிய பழைய சேவகனாகவும் பொடி எக்க போன்ற புதியவர்கள்மேல் பொறாமை உடையவனாகவும் ஜினே திகழ்கிறான். ஆயினும் மாலின் பிரேதத்துடன் பொடி எக்க வந்ததும் அவனுக்கு மரியாதையளித்து அவனையே பிரேதசாலையின் புதிய எஜமானாக ஏற்றுக்கொள்கிறான்.

பொடி எக்கவின் தாயாரது பாத்திரம் [நீட்டா பெர்னாந்து] அவனது வாழ்வின் முக்கியமான கட்டத்தினை வலியுறுத்தக்கூடிய சந்தர்ப்பத்தினைத் தவறவிட்டுள்ளது. வெறுமனே ஒரு சாதாரண தாயாக நீட்டா நடித்துள்ளதுடன் சில கட்டங்களில் அவரது நடிப்பு பாத்திரத்தின் தன்மையுடன் ஒன்றவில்லை. சில கட்டங்களில் பொடி எக்கவின் நடிப்பு மிகைப்படுத்தப்பட்டதாகவும் தெரிகிறது. உதாரணமாக அவனது செல்லப்பிராணியான மாடு கொல்லப்பட்டபோது சிறுபிள்ளைபோன்று அழுகிறான். இயக்குநரும் சிலவேளைகளில் அடிதடிகாட்சிகளில் மூழ்கிவிடுகிறார். இவைகள் இயன்றளவு குறைக்கப்பட்டிருக்கலாம்.

தமிந்த அபேரத்தின, ஜயலத் மனோரத்தின, மற்றும் நீட்டா பெர்னாந்து ஆகியோர் இயல்பாக தமது நடிப்பினைக் காட்டியுள்ள போதிலும் இப்படத்திற்கு அவர்களது பங்களிப்பு போதாது என்றுதான் சொல்ல வேண்டும்.

திரிசுல தீப தம்பவித்தவின் கமரா காட்சியமைப்பு யதார்த்தத்தையும் வேதனைகளையும் கண்முன்னே கொண்டு வருகிறது. கமரா கோணமும் அமைதியான பின்னணி இசையும் ஆர்ப்பாட்டமில்லாத காட்சியமைப்பும் இப்படத்திற்கு வலு சேர்த்திருக்கின்றன எனலாம்.

மொத்தத்தில் சொல்லப்போனால் 'பம்பர வள்ளல' சமகாலத்தின் இருள்படர்ந்த சமுதாயச்சூழலின் ஒரு பார்வையேயாகும். அதிகளவு சமூகச் சிக்கல்களை வெளிக்கொணர முயற்சித்ததால் பல கோணங்களில் நாம் இதனை ஆராயலாம். மனநோய் மருத்துவர் ஒருவரின் நோக்கில் பார்க்குமிடத்து இருளடர்ந்த ஆழத்திற்கான பயணமாக இருக்கலாம். படப்பிடிப்பு எனும் நிலையில், இளநிலை இயக்குநராக உள்ள போதிலும் தனது அபாரத்திறமையைக் காட்டியுள்ளார் அத்துல லியனகே.

இன்று சமூகத்தில் நடக்கும் அநியாயங்கள், சமூகத்தின் மீதான கோபம், வறுமை, இவைகளால் ஏற்படும் மனநிலை பாதிப்பு என அத்தனை அம்சங்களையும் உள்ளடக்கி திரைப்படமாக வெளியிட்டிருக்கும் இயக்குநருடைய முயற்சி பாராட்டத்தக்கது. 'பம்பர வள்ளல' சமூகத்தின் மீதான காட்டமான கோபத்தை சமுதாயப் பார்வையுடன் வெளிப்படுத்தி நிற்கின்றது என்பதில் ஐயமில்லை.

**தயாரிப்பு, நிர்வாகம் :** ரஞ்சன் பிரசன்னா, சுமேத ஹேவவிதாரண
**படப்பிடிப்பு :** திரிசுல தீப தம்பவித்த
**ஒப்பனை :** இமால் ஷானக பீரிஸ்
**கலை இயக்குநர் :** மஞ்சுள அயகம
**உதவி இயக்குநர் :** தமிந்த த. மடவல
**இயக்கம் :** அத்துல லியனகே




# புனரமைக்கப்படாத வீதிகளும் அதிகாரிகளின் அசமந்தப்போக்கும்

வீதி விபத்துக்கள் பற்றிய செய்திகள் இல்லாமல் ஊடகங்களில் செய்திகளே இல்லை, என்ற அளவுக்கு விபத்துக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளன. பாவனைக்கு உதவாத வீதிகள், சாரதிகளின் பொருப்பற்ற தன்மை, பொது மக்களின் கவனயீனம் என நீள்கிறது விபத்துக்களுக்கான காரணங்கள்.

நாட்டின் தலைநகரில் கூட அனைத்து வீதிகளும் பொது மக்களின் பாவனைக்கு உகந்ததாக காணப்படுகிறதா? என்பது கேள்விக் குறிதான். இந் நிலையில் நாட்டின் ஏனைய பிரதேசங்களின் வீதிகள் பற்றி சொல்லித்தெரிய வேண்டியதில்லை.

திருகோணமலை ஹொரவப் பொத்தானை வீதியில் போக்குவரத்து செய்யும் பொதுமக்கள் போக்குவரத்தில் பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்துவதாக உண்மையின் பதிவுக்கு செய்தியொன்று கிடைத்தது. இது தொடர்பாக ஹொரவப்பொத்தானை பிரதேசவாசி ஒருவரைத் தொடர்பு கொண்டோம்.

**◀ நா. ராஜா ▶**

'எங்கட ஸ்கூல் பிள்ளைகளுக்கெல்லாம் றோட்டுல சரியான முறையில போக்குவரத்து செய்ய ஏலாது. எல்லாப் புள்ளைகளுக்கும் தொய்வுகள் வந்து ஹொஸ்பிட்டலும் அதுவும் இதுவுமா இருக்கு. சரியான கஷ்டமாக இருக்குது. இந்த றோட் பக்கத்தில உள்ள கடையில சாப்பிட ஏலாது. கடைவழிய தூசியும் அதுவும் இதுவும் றோட்ல போக ஏலாது. மக்களுக்கு சரியான இடைஞ்சலாக இருக்குது. இந்த றோட்டை செஞ்சு தாறத்துக்கு நீங்கதான் முயற்சி செய்யணும்.

ஹொரவப்பொத்தானையில் இருந்து திருகோணமலைக்குப் போற றோட்டுக்கு வந்து பார்த்தால்தான் தெரியும், வாகனங்கள் போக ஏலாது. எல்லாருக்கும் நோய், சரியான புழுதி. எல்லாருக்கும் தடிமல் பிடிச்சிட்டு. போறவாற பிரயாணிகளுக்கெல்லாம் சரியான கஷ்டம். திருத்தித் தாங்க எண்டு கேட்டால், பொய் சொல்றாங்க' என்றார்.

திருகோணமலை அநுராதபுர சந்தியிலிருந்து செல்லுகின்ற பாதையிலே இடப்பட்டிருக்கின்ற கிறவல் சம்பந்தமாக பொதுமக்கள் எம்மிடம் தெரிவித்த முறைப்பாடு பற்றி வீதி அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்டபோது;

'வரலாற்று ரீதியான பிரதான வீதிகளெல்லாம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் அரசாங்கத்தினால் மாகாண சபைகளினூடாகவும் மத்திய அரசினூடாகவும் கிழக்கு மாகாணம் முழுவதும் சீரான, திறமையான, அழகான வீதிகளாக அமைக்கப்பட்டிருப்பதை நீங்கள் கண்டிருப்பீர்கள். இருந்தபோதிலும் திருகோணமலை மாவட்டத்தில் இருந்து ஹபரணை – திருமலை கந்தளாய் வரை இருக்கின்ற வீதி புனரமைக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து, கந்தளாயிலிருந்து திருகோணமலை வருகின்ற வீதிக்குரிய வேலைகள் தற்போது ஆரம்பமாகி, பாதைகளை அகலமாக்கி அதற்குரிய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. ஜனாதிபதி திருகோணமலை மாவட்டத்திற்கு வந்தபோது அநுராதபுரம்–ஹொரவப்பொத்தானை வீதி வேலைகள் விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென கேட்டுக்கொண்டார். வீதி அபிவிருத்தி அதிகாரசபைதான் அதற்குப் பொறுப்பாக இருக்கிறது. நானும் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமைச்சர் என்ற வகையில் மத்திய அரசாங்கத்தினுடைய வீதி அதிகார சபையுடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு எண்ணுகின்றேன்' என்றார்.

இதுபோல் அவிசாவளை யட்டியாந்தோட்டை, பணாவத்தை 1ஆம் பிரிவு வீதியும் உடைந்து பயணிகள் அசௌகரியத்துக்குள்ளாவதாக அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

'றோட் வந்து மிச்ச நாளா உடைந்து கிடக்கு. சாமான் கொண்டுவந்து போட்டிருக்கிறாங்க செய்யமாட்டேங்கிறாங்க. நாங்க சொல்லிப் பார்த்தோம், செய்யிற மாதிரி இல்லை. றோட்ல ஸ்கூல் பிள்ளைங்களுக்குப் போக ஏலாது. 'பபா' கிடைக்க இருக்கிறாக்கள் எல்லாம் போக ஏலாது. சரியான மோசமாக இருக்கிறது. திரிவீல்ல போற எண்டாலும் 250, இல்லண்ணா 400 கேட்கிறாங்க. றோட் அந்த மாதிரி உடஞ்சி இருக்குது. ஒரு மூண்டரைக் கிலோ மீற்றர்தான் இருக்கு செய்யிறத்துக்கு. செய்யாம அப்படியே வெச்சிருக்காங்க.

எங்களுக்கு றோட் வசதிதான் குறைவு. பஸ் ஒன்றும் வாறல்ல. றோட்டையும் சரிக்கட்டிக் குடுக்கயும் மாட்டேங்கிறாங்க. அதான் எங்களுக்கு பிரச்சினையா இருக்கு. இந்த றோட்ல தார் போடல. கொங்கிரீற்கூட போட்டுக் கொடுக்க மாட்டேங்கிறாங்க. பஸ்காராக்களே சொல்றாங்க எங்களுக்கு வர ஏலாம இருக்கு எண்டு. இந்தப் பகுதிக்கு கொங்கிரீற் றோட் செஞ்சி குடுத்தா புண்ணியமாப் போகும். 150 குடும்பம் இருக்குது. எல்லா வீட்ல இருந்தும் பிள்ளைகள் ஸ்கூல் போகுது. சின்னப் பிள்ளைகள், பெரியாக்கள் போறத்துக்கு வசதியில்ல. நிம்மதியா ஒரு வாழ்க்கை ஒண்டு இல்லை' என்று அப்பிரதேசவாசிகள் குமுறுகின்றனர்.

இது தொடர்பாக அப்பிரதேச அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது; அவ்வீதி, பகுதி பகுதியாக பிரிக்கப்பட்டிருப்பதாகவும் விரைவில் செய்து முடிப்பதாக தனக்கு தெரிவதாகவும் குறிப்பிட்டார்.

அதிகாரிகள் என்னதான் குறிப்பிட்டாலும் மக்கள் இதனால் பல பாதிப்புக்குள்ளாகின்றனர். பாடசாலைப் பிள்ளைகள், கர்ப்பிணித் தாய்மார்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். பஸ் வரமுடியாமல் இருப்பதால் இவர்கள் மேலதிக பணம் கொடுத்து ஆட்டோவில் செல்லவேண்டிய நிலைமையே காணப்படுகின்றது. எல்லோருக்கும் அந்த வசதி இல்லை. அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுக்கே முகம் கொடுக்க முடியாமல் திண்டாடும் மக்கள் எங்ஙனம் போக்குவரத்துக்கும் இவ்வாறு பணம் செலவழிப்பார்கள்...?

தலைநகரில் மட்டும் 'ஜெட்' வேகத்தில் முடிவடையும் வீதி புனரமைப்புகள் பின்தங்கிய பிரதேசங்களில் ஆமை வேகத்தில் நகர்வதுதான் ஏன் என்று தெரியவில்லை. வீதிகளைப் புனரமைப்பதற்கு தேவையான பொருட்களைக் கொண்டுவந்து போட்டும் அப் பணியைத் தொடர்ந்து முன்னெடுக்காமையானது சம்பந்தப்பட்டவர்களின் அலட்சியப் போக்கையே காட்டுகின்றது. இது தொடர்பாக மக்களும் தமக்கு தெரிந்தவர்களிடம் முறையிட்டும் எவ்விதமான பலனும் இல்லை.

ஆகவே, இப்பிரதேசங்களின் இந் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு உரியவர்கள் விரைந்து நடவடிக்கையெடுக்க வேண்டும் என்று உண்மையின் பதிவினூடாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

# பூனைத் தூக்கம்

*மாலையென்றும்
காலையென்றும் பாராது
படமெடுத்தபடி - வீட்டு
மூலையிலுள்ள பாம்பைப்
போலிருக்கும்
தொலைக்காட்சிப் பெட்டியின்
செய்திகளை தொடர்ந்தும்
உற்றுப் பார்க்கிறேன்.*

*கண்டபடிக் கத்தும் - வானொலிக்
கழுதையின் காதினைப் பிடித்துத்
திருகித்திருகிக் கேட்கிறேன்.
வாராவாரம் வீட்டுக்கு வரும் -
செய்தித் தாராவின் இறக்கைகளைப்
பிரித்துப்பிரித்துத் தேடுகின்றேன்.*

*அதுமட்டுமா?
தேர்தல் காலத்துக் கிளையில்
துள்ளித்திரியும் துண்டுப்பிரசுர
அணில்கள் ஒவ்வொன்றினதும்
முதுகின் வரிகளை
மெதுவாகத் தேடித்தேடி
வாசித்துத் தோற்றுப்போகின்றேன்.
இருந்தும்,*

*இரு மூக்குக் கண்ணாடிகள்,
இரு செவிட்டு மெஷின்கள்,
இரு ஊன்றுப் பொல்லுகள்,
ஒருவாறு வாங்கிப்
பத்திரப்படுத்துகின்றேன்.*

*ஒருதசாப்தத்திற்கும் மேலாக
இரும்புக்கம்பிகளுக்குள்
குற்றமின்றி
சிறைப்பட்டிருக்கும் - தமிழ்
அரசியல் கைதி உனக்காகவும்
அடிக்கடித் தூங்கும்
பூனையாய் - உன்
விடுதலைபற்றி...*

*தூங்கும் செய்திகள்
விழித்துக்கொள்ளும்
ஒருநாள் வரும்
என்பதற்காகவும் - அவ்வேளை
எனக்கும் உனக்குமான
கிழக்குகள் கொஞ்சம் கொஞ்சமாகக்
கிழடுதட்டிப் போயிருக்கும்
என்பதற்காகவும்தான்!*

**- ஆரையூர் தாமரை**

*ஒருமுறை பெந்தோட்டைக் கடற்கரையில் அமெரிக்கர் ஒருவருடனும் ஜப்பானியர் ஒருவருடனும் நம்முடைய 'சிலோன் சின்னத்தம்பி' மும்முரமான ஒரு விவாதத்தில் ஈடுபட்டிருந்தார். அப்போது திடீரென ஒரு 'பீப்...பீப்...' என ஒலியெழும்பியது. உடனே அந்த அமெரிக்கர் தன் மணிக்கட்டை அழுத்தியதும் அந்த ஒலி நின்றது. அவர் 'என்னுடைய ஹோட்டல் அறையிலுள்ள அலாரத்தின் ஓசைதான் அது. என் மணிக்கட்டின் தோலுக்குக் கீழே ஒரு மைக்ரோ சிப் பதிக்கப்பட்டுள்ளது' என்று பெருமிதப்பட்டார்.*

*பின்னர் ஒரு தொலைபேசி மணியொலி கேட்டது. உடனே அந்த ஜப்பானியர் தன் வெறும் உள்ளங்கையை காதுக்கு அருகே வைத்துப் பேசிவிட்டு பின்னர் பெருமை பொங்க 'அது எனது செல்போன். அதற்காக என் உள்ளங்கையில் ஒரு மைக்ரோ சிப் பொருத்தப்பட்டுள்ளது' என்று கூறியவுடன் நமது சிலோன் சின்னத்தம்பிக்கு அவர்களது தொழில்நுட்பம் குறித்து மிகவும் மனவருத்தம் ஏற்பட்டது.*

*திடீரென சின்னத்தம்பிக்கு கழிவறை செல்ல வேண்டியிருந்ததால் அவ்விடத்திலிருந்து அகன்றார். திரும்பியவுடன் அவரது பின்புறத்தில் கழிவறைக் காகிதம் தொங்கிக் கொண்டிருப்பதை அவர் கவனிக்கவில்லை. மற்ற இருவரும் 'என்ன இது...?' என்று நக்கலாகக் கேட்டனர்.*

*உடனே நமது புத்திசாலி சின்னத்தம்பி சமயோசிதமாக 'ஓ...! அதுவா ? எனக்கு பக்ஸில் (FAX) தகவல் வந்திருக்கிறது' என்று ஒரு போடு போட்டாரே பார்க்கலாம்!*




# திகிலோடு மர்மம் நிறைந்த தொடர்!




ஜனரஞ்சக எழுத்தாளர் **மொழிவாணன்**

''இதோ பார்த்தீர்களா? இதை பத்து நிமிடங்களில் வெடிக்கக்கூடிய விதத்தில் செட் பண்ணமுடியும். நாங்கள் அப்படிச் செய்து விட்டுப் போனால் நீங்கள் கெய்ரோவிற்குப் போக மாட்டீர்கள். கைலாசத்திற்குத்தான் போவீர்கள். விரைவில் ஒரு முடிவிற்கு வாருங்கள்''

இந்த கொள்ளைக்காரர்கள் சொல்லியதை அப்படியே செய்து விடுவார்கள், என்பதை விமான ஓட்டிகள் புரிந்துகொண்டார்கள்.

இப்போது,

அவர்களின் முன்னால் இரண்டு கேள்விகள் கோல் பிடித்துக் கொண்டு நின்றன.

ஒன்று..,

விமானத்தை அவர்களிடம் ஒப்படைக்காமல் எல்லோரையும் அழைத்துக் கொண்டு கெய்ரோவிற்குப் போகாமல்,

## விமானத்தில் இருந்தது வெடிகுண்டு பயணிகள் நடுங்கினார்கள் அதைக்கண்டு



கைலாசத்திற்குப் போவதா?

இரண்டு,

அவர்கள் சொல்லுகிறபடியே விமானத்தை இலங்கைக்குத் திருப்பி விட்டு,

எல்லோரையும் அழைத்துக் கொண்டு மீண்டும் தாய்நாட்டிற்கே போய்ச்சேருவதா?

யுத்த ஆயுதங்கள் போனால் எத்தனை ஆயுதங்களை வேண்டுமானாலும் தயாரித்து விடலாம்.

ஆனால்,

இத்தனை மனித உயிர்களையும் இழந்துவிட்டால் எத்தனை விஞ்ஞானிகள் சேர்ந்தாலும் திரும்பப்பெற முடியாதே.

இரண்டாவது கேள்விக்கு விடை காண்பதற்கு விமானிகள் முடிவு செய்தார்கள்.

''சரி நீங்கள் சொல்லுகிறபடியே விமானத்தை இலங்கைக்கு ஓட்டிச் செல்லுகிறோம், என்று வைத்துக் கொள்வோம். அதன் பிறகு நாங்கள் உயிருடன் திரும்பிப்போக முடியும் என்பதற்கு என்ன உத்தரவாதம்?''

இரண்டாவது கேள்விக்கு விடை கிடைத்தால்,

அதன் பலனை அறிய அந்த விமானி விரும்பினான்.

''சகல வல்லமை பொருந்திய கறுப்பு செப்டெம்பர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தாங்கள் கொடுக்கும் வாக்குறுதிகளைக் கண்டிப்பாக காப்பாற்றுவார்கள்'' என அந்த இளைஞன் சிரித்துக்கொண்டே பதில் சொன்னான்.

''சரி, இந்த விமானத்தை ஏன் இலங்கைக்கு கொண்டு போகிறீர்கள்?'' இதுவரை அமைதியாக இருந்த விமானி கேட்டான்.

''இதில் இருக்கும் யுத்த ஆயுதங்களை எடுப்பதற்கு. அவை எங்களுக்குத் தேவைப்படுகின்றன. அந்த ஆயுதங்களை நாம் எடுத்த பிறகு நீங் கள் எல்லோரும் எங்கும் போகலாம். அதில் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை''

''நீங்கள் கொடுக்கும் வாக்குறுதியை நம்பலாமா?''

''கறுப்பு செப்டெம்பர் இயக்கம் கொடுக்கும் வாக்குறுதிகள் கண்டிப்பாக நிறைவேறும்'' மகிழ்ச்சி பொங்க அவன் சொன்னான்.

விமானம் பாதை மாறியது.

மேகக் கூட்டங்களைக் கிழித்துக் கொண்டு பறந்துசென்ற அந்த விமானம்,

இலங்கையின் எல்லைக்குள் நுழைந்தபோது,

இரவு மணி,

9.34.

அப்போது,

விமானியின் முன்னால் இருந்த மூன்று சிவப்பு விளக்குகள் எரிந்தன.

விமானிகள்,

பரபரப்புடன் பின்னால் இருந்த அந்த பயங்கர இளைஞர்களைப் பார்த்தார்கள்.

''இலங்கை விமான சேவை நிலையம் எங்களை எச்சரிக்கின்றது. அதனால்தான் இந்த சிவப்பு விளக்குகள் எரிகின்றன. இந்த விமானத்தை உடனே இரத்மலானை விமான நிலையத்தில் இறக்க வேண்டுமென்று அவர்கள் ஆணையிடுகிறார்கள்'' முகத்தில் வடிந்த வியர்வைத் துளிகளை துடைத்தபடியே விமானி சொன்னான்.

''நாங்கள் இறங்கவேண்டிய இடம் இரத்மலானை விமான நிலையம் அல்ல'' இளைஞன் கர்ஜித்தான்.

''இல்லையென்றால்..''

''கொக்கலையில் இருக்கும் பழைய விமான நிலையத்தில்தான் நீங்கள் இந்த விமானத்தை இறக்கவேண்டும்!''

வினாடிகள் விழுந்தடித்துக் கொண்டு ஓடின.

கொக்கலையில்,

பாழடைந்து போயிருந்த அந்தப் பகுதியில் விமானத்தை இறக்குவதற்கு விமானி மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது.

இப்போது,

விமானம் தரையில் இறங்கியது.

விமானத்தில் இருந்த அத்தனை பேரும்,

துப்பாக்கி முனையில் கீழே இறக்கப்பட்டார்கள்.

''பைரூஸ், சீக்கிரமாக சிக்னலைக் காட்டு'' தன் அருகில் நின்ற இளைஞனைப் பார்த்து லைலா சொன்னாள்.

பைரூஸ் என்ற அந்த இளைஞன்,

கையில் இருந்த டோர்ச் லைட்டை எடுத்து அப்படியும் இப்படியும் அசைத்தான்.


டோர்ச் லைட்டில் இருந்து பச்சை ஒளி பரவியது.

சில வினாடிகள் சிதறின.

ட்ரக் வண்டி ஒன்று இருளைக் கிழித்துக் கொண்டு விமானத்தின் அருகில் வந்து நின்றது.

அந்த ட்ரக் வண்டியில் இருந்த விளக்குகள் அத்தனையும் அணைக்கப்பட்டிருந்தன.

ட்ரக் வண்டி விமானத்தின் அருகே வந்து நின்றதும்,



விமானத்திற்குள் தூங்கிக் கொண்டிருந்த யுத்த ஆயுதங்கள் எல்லாம் அந்த வண்டிக்கு மாற்றப்பட்டன.

எல்லாம் முடிந்ததும்,

லைலா கவர்ச்சியாக சிரித்தபடியே விமானிகளின் அருகில் வந்தாள்.

''கப்டன் எங்கள் வேலை முடிந்தது. இனி நீங்கள் எல்லோரும் விமானத்தை எடுத்துக் கொண்டு எங்கு வேண்டுமானாலும் போகலாம்!''

தரையில் இருந்தவர்கள் எல்லோரும் நிம்மதியாக பெருமூச்சு விட்டபடியே மீண்டும் விமானத்திற்குள் ஏறி அமர்ந்து கொண்டார்கள்.

விமானம்,

காற்றைக் கிழித்துக்கொண்டு பறந்தது.

பயங்கரவாதிகள் எல்லோரும் ட்ரக் வண்டிக்குள் ஏறி அமர்ந்து கொண்டார்கள்.

ட்ரக் வண்டி,

கொழும்பை நோக்கி,

ஊர்ந்து,

நகர்ந்து,

விரைந்தது.

(தொடரும்...)

# எப்ப வருவாங்க...? என்ன செய்வாங்க...? எங்க கொண்டு போவாங்க...?




## பூநகரியில் தாய், பூசாவில் மகன்

ஒருநாள் மதியநேரம் வன்னியின் புழுதி பறக்கும் தெருவில் 53 வயதான நாகராசா மகேஸ்வரியைச் சந்தித்தேன். தன் பிள்ளையைப் பார்க்க பூஸாவுக்குப் போய்விட்டு வருவதாக குறிப்பிட்ட அந்த தாய் பூநகரியிலுள்ள தன் வீட்டுக்குச் செல்வதற்காக காத்துக்கொண்டிருந்தார்.

என்னைக் கண்டதும் தன் சோகக் கதையைச்சொல்லி அழத் தொடங்கிவிட்டார். ‘முந்தநாள் என் பிள்ளய பார்க்க போனன் தம்பி. இண்டைக்குத்தான் திரும்பி வாறன். சண்டை முடிஞ்ச பிறகு (2009 மேயில்) நாங்கள் வன்னிக்கு வெளியில வந்திட்டம். ஆனால் எங்கட பிள்ளையைக் காணேல்ல. இதைப் போய் ஆரிட்டக் கேட்க ஏலும்? அவன் கடைசிப் பிள்ளை. அஞ்சாவது. அவனைப் பற்றி எந்தத் தொடர்புமில்லை. தெரிஞ்ச ஆக்களிட்ட எல்லாம் அவனைப் பற்றிக் கேட்டம். ஒருத்தருக்கும் அவனைப் பற்றித் தெரியேல்ல.

எங்களையெல்லாம் பஸ்ஸில ஏத்திக் கொண்டுபோய் வவுனியாவில இருக்கிற செட்டிகுளம் மெனிக்பாமில் விட்டிட்டாங்கள். அங்கயும் தேடிப்பாத்தம். எங்களைப்போல பலபேர் இப்படிப் பிள்ளையளைத் தேடிக்கொண்டிருந்திச்சினம். கனபேர் தங்கட புருசன்மாரை தேடிக் கொண்டிருந்திச்சினம். நாங்களும் ஆனமட்டும் தேடிக் களைச்சுப்போனம். ஒரு தகவலும் தெரியாது.

இவ்வளவுக்கும் அவன் 2007இல் தான் இயக்கத்தில சேர்ந்தவன். அப்ப இயக்கம் ஊரில வீட்டுக்கு ஒருத்தர் எண்டு எல்லாரையும் சேர்த்துக் கொண்டிருந்தது. இவன்தான் கலியாணம் கட்டாமல் இருந்தான். அதால இவன்தான் போக வேண்டியிருந்திது.

அப்ப போனவனைப் பிறகு நாலைஞ்சு தடவைதான் பார்த்திருக்கிறம். இடம் பெயர்ந்து போனதுக்குப்பிறகு ரெண்டு தடவை மட்டுந்தான் கண்டம். நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்காதையுங்கோ எண்டு சொல்லுவான். ஆனா, நாங்கள் யோசிக்காமல் இருக்க ஏலுமே!

அப்ப, ஆளைக் காணேல்ல. என்ன நடந்துதோ எண்டு தெரியாமல் இருந்தம். எங்களைப் போலத்தான் அவனும் இருந்திருக்கிறான். எங்களைத் தேடிக் கொண்டு. நாங்கள் எங்க இருக்கிறம், எப்படி இருக்கிறம், என்ன செய்யிறம் எண்டு தெரியாத நிலையில அவனிருந்திருக்கிறான்.

கடைசியா அவனும் சண்டை முடிஞ்ச கையோட எல்லாரைப் போலயும் ஆமியிட்ட சரணடைஞ்சிருக்கிறான். அவங்கள் முதல்ல வவுனியா, ஓமந்தையில வைச்சிருந்திருக்கிறாங்கள். பிறகு வெலிக்கந்தவுக்குக் கொண்டுபோய், அங்க ஒரு ஆறு மாதம் வைச்சிருக்கிறாங்கள். அப்பதான் எங்கட ஊர்ப்பிள்ளையொண்டு தன்ரை புருசனைப் பாக்கப் போகேக்க இவனைப் பற்றி அறிஞ்சு போட்டு வந்து எங்களுக்குச் சொல்லிச்சு. அப்பதான் எங்களைப் பற்றி அவனுக்கும்அவனைப்பற்றிஎங்களுக்கும் தெரிஞ் சுது. அதுக்குப் பிறகுதான் நாங்கள் அங்க போய்ப் பிள்ளையைப் பார்த்தம்.

அவன் அங்கு இருந்த நிலைய நான் எப்படி சொல்வேன். படு கேவலமாக இருந்தான். பிள்ளைக்கு கடுமையான யோசினை. எங்களைப் பற்றி ஒருபக்கம். தன்னைப் பற்றி ஒருபக்கம். எப்ப விடுவாங்கள், அதுக்கிடையில என்ன செய்வாங்கள், இனி எங்க கொண்டு போவாங்கள் எண்டு ஏராளமான கவலை.

ஒரு இடத்தில கன நாளைக்கு ஆக்களை வைச்சிருக்க மாட்டினமாம். அடிக்கடி இடம் மாத்திக் கொண்டிருப்பினமாம். சில இடங்களில வசதிகளில்ல. சில இடங்களில வசதிஇருந்தாலும்கடுமையானவிசாரணை, அது இதெண்டு ஒரே கரைச்சலாம். அதை விட நல்ல சாப்பாடில்ல. மனசில நிம்மதியில்லையெண்டால் என்னதான் செய்யேலும்?

எங்களைக் கண்டிட்டு அவன் பட்ட பாடு. அழுத அழுகை. என்ன குற்றம் செய்தம் கடவுளே! இப்படிக் கண்ணீரும் கம்பலையுமாக இருக்க என்ன பாவம் செய்தம்?’ அந்தத்தாயின் கண்களிலிருந்து கண்ணீர் சொரிந்தது. மேலும் சொல்லத் தொடங்கினார்.

‘வெலிக்கந்தயில இருக்கேக்கை நானும் தகப்பனும் போய்ப் பாத்தம். சகோதரங்களும் போய்ப் பாத்துதுகள். அப்ப நாங்கள் முகாமில இருந்தபோது ஆகப் பெரிய கஸ்ரம். கையில காசும் இல்லை. கண்டபடி வெளியில போகவும் ஏலாது. பிள்ளையைப் போய்ப் பாக்கிற தெண்டால், முதல்ல பதியவேணும். பிறகு கார்ட் எடுத்துக் கொண்டுபோய்ப் பாத்திட்டுச் சொன்ன தவணைக்கு வந்திடவேணும். எங்களுக்கு அந்த இடம் பழக்கமில்ல. பாசையும் தெரியாது. ஆக்களையும் தெரியாது. அதால பெரிய கஸ்ரப்பட்டம். ஆனா, அங்க இருக்கிற முஸ்லிம் ஆக்கள் நல்ல மனுசர். அதுகள் எங்களைத் தங்கவிட்டுதுகள். சாப்பாட்டுக்கு மட்டும் காசெடுத்துதுகள்.

வெலிக்கந்தவில ஒரு அஞ்சாறு தடவை போய்ப்பாத்தம். அதுக்குப் பிறகு ஒருநாள் திடீரெண்டு பூஸாவுக்கு மாத்திப் போட்டாங்கள். பூசாவுக்கு மாத்தினாப் பிறகு எங்களுக்கு அறிவித்தல் வர பதினைஞ்சு நாள் ஆகீட்டுது. அதுமட்டும் அவன் வெலிக்கந்தவிலதான் இருக்கிறான் எண்டு நினைச்சுக்கொண்டிருந்தம்.

பூசாவுக்கு மாத்தினாப்பிறகு, அங்க எப்படிப் போறதெண்டு தெரியாது. தகப்பனுக்கும் கால் ஏலாது. அவரால அவ்வளவு தூரம் பிரயாணம் செய்யேலாது. மற்றப் பிள்ளையளும் அடிக்கடி போய்ப்பாக்கிற நிலைமையில இல்ல. எல்லாருக்கும் வசதியும் வேணுமே. அதுகளும் பிள்ளை குட்டிகாரர். எல்லாரும் தோட்டம்தான் செய்யிறவையள். நாங்கள் விவசாயக் குடும்பம். இவன்தான் கொஞ்சம் படிச்சவன். ஏதாவது உத்தியோகம் பார்ப்பான் எண்டு இவனைத் தான் நம்பியிருந்தம்.

இப்ப நான்தான் பூசாவுக்குப் போறனான். நான் மட்டும் தனியாகப் போய்வாறதெண்டாலும் எப்படியும் ஒரு எட்டுப் பத்தாயிரமாவது வேணும். போகேக்க வெறும் கையோட போகேலுமே! பிள்ளையோட இருக்கிற மற்றப் பெடியளுக்கும் ஏதாவது பலகாரம் செய்து கொண்டு போகவேணும். அதுக்குக் காசு வேணும். குறைஞ்சது ஒரு நாலாயிரமாவது தேவை. பிறகு இவனுக்கு உடுப்பு, செருப்பு, சவுக்காரம், சேவ் எடுக்கிற சாமான்கள் எண்டு அதுகளுக்கும் காசு வேணும். பூஸாவுக்குப் போறது மூண்டு நாள் பயணம். முதல்நாள் வீட்டை இருந்து காலமை ஆறு மணிக்கு வெளிக்கிட்டால் அண்டைக்கு இரவாகும் நாங்கள் கொழும்புக்குப் போய்ச்சேர. அங்க இரவு தங்கி, விடிய மூண்டு அல்லது நாலு மணிக்கு கொழும்பில இருந்து வெளிக்கிட்டால் காலிக்குப் போக விடிஞ்சு எட்டு ஒன்பது மணியாகும். பிறகு பூசாவுக்குத் தனி பஸ்.

அங்க போய்த் துண்டெடுத்துப் பதிஞ்சு, காவலிருந்து, பிறகு ஆள்வரப் பார்த்துக் கதைச்சுப் போட்டுத் திரும்பவேணும். இவ்வளவு கஸ்ரப்பட்டு, இவ்வளவு தூரம் பிரயாணம் செய்து அங்க போனால், ஒரு பத்துப் பதினைஞ்சு நிமிசம்தான் கதைக்க விடுவாங்கள். நாங்கள் என்ன செய்ய முடியும்? ஏதோ பிள்ளையின்ரை முகத்தைப் பாக்கிறதே போதும் எண்டு நினைச்சுக் கொண்டு திரும்ப வேண்டியதுதான்.

இந்தத் தடவை போகேக்க அவன் நல்லாக் கலங்கியிருக்கிறான். கெதியில அங்கயிருந்தும் மாத்தப் போறாங்கள் போல கிடக்கு எண்டு. அதுக்கிடையில தன்னை எப்படியும் வெளியில எடுக்கச் சொல்லிக் கெஞ்சிறான். நாங்கள் என்ன செய்யிறது? இஞ்ச வாற எம்பிமாரிட்டக் கடிதம் குடுத்திருக்கிறம். அதுக்கு மேல எங்களால என்ன செய்ய ஏலும்? வாறமாதம் மூத்த மகளின்ர பிள்ளைக்குச் சாமத்தியச் சடங்கு வருகுது. அதுக்கு எப்படியும் ஒருக்கா வீட்ட எடுக்கச்சொல்லி நிக்கிறான்.

ஆனால், அதுக்கு எப்படியும் ஒரு இருவது ஆயிரம் ரூபாய் தேவை. இஞ்சயிருந்து ஜீ.எஸ். சக் (கிராம அலுவலர்) கூட்டிக்கொண்டுபோய், அவர் கையெழுத்துப் போட்டுப் பிணை எடுத்துக் கொண்டு வரவேணும். அதுக்குத் தனியாக வாகனம் பிடிக்கவேணும். இல்லையெண்டால், எங்களைப்போல அவரையும் பஸ்ஸிலை கூட்டிக் கொண்டுபோய் வந்து போறதெண்டால் போய் வரத்தான் நாள் சரியாக இருக்கும்.’

பிள்ளைக்குக் குடுக்கிற லீவு அதோட முடிஞ்சு போகும். அதால எப்படியும் தனியாக ஒரு வான் பிடிக்கத்தான் வேணும். அதுக்கு காசுக்கு எங்க போறது. ஆனால், அவன் அழுகிறான். என்ன செய்யிறது எண்டு தெரியாமல் இருக்கிறம். இதுக்கிடையில பூசாவுக்குப் போய், சிலவேளை ஒரு நாள் அங்க நிக்க வேண்டியுமிருக்கும். அப்படி நிக்கிறதெண்டால், அதுக்குத் தனியாகக் காசு வேணும்.

தாயாக இருந்து பிள்ளைக்காக அழும் இந்தத் தாயின் கண்ணீரைத் துடைக்க யார் முன்வருவார்கள்? பசிக்களைப்பு பிரயாணக் களைப்போடு சேர்ந்து இவரை வாட்ட அதனையும் பொருட்படுத்தாது தன் பிள்ளைக்காக தனக்கு தெரிந்தவர்களிடமெல்லாம் வாயோயாமல் இந்தத் தாய் புலம்புகிறார். இவர் ஒரு உதாரணம் மட்டுமே. இன்று வன்னியில் எத்தனையோ தாய்மார்கள் தன் பிள்ளைகளுக்காக இப்படித்தான் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு காலமாவது பதில் சொல்லுமா?

**மூலம்: விதுல் சிவராஜா**
**நன்றி: பொங்குதமிழ்**

### ◄ நக்கல் நையாண்டிப் போடியார் ►

*எப்புடி சுகமா இருக்கீங்களா...?*

*மட்டக்கெளப்புல இரிக்கிற ‘விபுலானந்தா இசை நடனக் கல்லூரிய’ உங்களுக்குத் தெரியுமா? ஈஸ்டன் யூனிவர்சிட்டிட ஒரு பிரிவுதான் அது. படிப்பு என்கிறது எல்லோருக்கும் பொதுவானதுதானே. முஸ்லிம் புள்ளயலும் அங்க சேந்து கலைகள படிச்சி வராங்க. ஆம்புளப் புள்ளயலும், பொம்புளப் புள்ளயலும் சேந்துட்டு படிக்கிறாங்க. யார் எங்க இரிந்தாலும் அவங்க சமயத்துக்கு மதிப்புக்கொடுக்கணும்..!*

*முஸ்லிம் பொம்புளப் புள்ளயலுக்கு தொழுறதுக்கு இடவசதி இல்ல. அங்கத்து ஆக்களுக்கு அத இந்தப் புள்ளயல் செல்லி இருக்காங்க. அத ‘காதுல’ வாங்காம ‘காத்துல’ ஊதிட்டாங்களாம். இப்ப புதுசா ஜூனியர் புள்ளயலும் வந்திருக்கிறதால, ஹொஸ்டலுக்குப்போய் தொழ விடுறாங்க இல்லியாம். அங்கதான் ‘ரௌடிப் பெட்டயள்’ ராங்கிங் பண்ணிடுவாங்களே!*

*இப்ப அந்தப் புள்ளயல் மார்க்கத்த ஒழுங்காப் பின்பத்தவே ஏலாமக் கெடக்கு எண்டு புளம்புறாங்க. ஒரு அரச மரத்தக் கண்டாலே அங்க ‘புத்தர் பிரானை’ குடியேத்துறவங்க, கொஞ்சம் பள்ளிவாசலயும் நெனச்சாத்தான் என்னவாம்? யார்ர உரிமையையும் பறிக்காதீங்கோ. அந்தப் புள்ளயல் தொழுறதுக்கு ஒழுங்கு வசதிகள செஞ்சி குடுங்கோ பெரிசுகளே...! இதுக்கு அங்க ஒரு ‘ரௌடிப் பொம்புள’ தடயா இரிக்கிறதாகவும் தகவல் கசிஞ்சி இரிக்கி. பொழுப்ப எழ்க்காம, சுருக்காச் செஞ்சா நல்லா இரிக்கும். புண்ணியமாவும் போகும்!!!*

*மறுகாவும் வருவன்...!*



சமுதாயத்தின் மறுபக்கம்

# இப்படியும் நடக்கிறது...

## பயிற்சிக்கு சென்ற மாணவிக்கு கால் முறிவு

தற்போது இராணுவ முகாம்களில் நடத்தப்படும் பயிற்சிகளில் மதிலுக்கு மேல் பாயுமாறு மாதுருஓயா இராணுவ முகாமில் பயிற்சி பெற்றுவரும் மாணவிகளுக்கு கட்டளை பிறப்பிக்கப்படுவதாகவும் அவ்வாறு 5 அடி உயரமான மதிலொன்றிலிருந்து பாய முற்பட்ட மாணவி ஒருவரின் கால் முறிந்துள்ளதாகவும் அம்மாணவியின் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

அநுராதபுரம் தேவனம்பியதிஸ்ஸபுர, திஸாவெவவைச் சேர்ந்த 22 வயதுடைய கே.எஸ்.செவ்வந்தி என்ற மாணவியின் இடது காலிலே முறிவு ஏற்பட்டுள்ளது. இம் மாணவி சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு, 3 மாதங்கள் நடக்கக் கூடாதாம்.

(இதுவும் ஒருவகையான 'ராங்கிங்')

## நாயினால் சிறையில் வாடும் உரிமையாளர்

வல்வெட்டித்துறையில் வீட்டு உரிமையாளரினால் வளர்க்கப்பட்ட நாய் தெருவில் செல்வோருக்கு வாய்மூலமான தாக்குதல் நடத்திச் சண்டித்தனம் புரிந்துள்ளது.

அந்நாயினால் காயமடைந்த சிலர் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்ததை யடுத்து வீட்டு உரிமையாளரையும் நாயையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

பருத்தித்துறை நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கின் பிரகாரம் நீதிபதியால் நாயின் உரிமையாளருக்கு2வருடசிறைத் தண்டனையும் 3 மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டது. அந்நாய் நகரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(நாய் எப்பவுமே நன்றியுள்ள மிருகம்தான்)

## சவாரிபோகும் 'சமுர்த்தி உத்தியோகத்தர்'

அன்று நேரடியாக அரசியலில் ஈடுபட்டவர்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட ஒரு சந்தோசமான தொழிலே சமுர்த்தி உத்தியோகம். அட்டாளைச்சேனையில் சமுர்த்தி ஊக்குவிப்பாளர் ஒருவர் தினமும் தனது ஆட்டோ மூலம் பொதுமக்களையும் மாணவர்களையும் சுமந்துகொண்டு செல்கிறாராம்.

சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தினமும் தங்களது காரியாலயத்திலிருந்து கடமையாற்றவேண்டும் என்கிற கட்டாயத்திற்கு உட்பட்டவர்கள். அப்படியிருந்தும் தினமும் பிரதான வீதியில் ஆட்டோவில் மக்களின் தரிசனத்துக்காக காத்து நிற்கின்றாராம்.

ஒருநாள் சவாரியின்போது வழமை போல வசதியான மாணவி ஒருவரிடமிருந்து தேநீர் செலவுக்காக அதிக பணத்தை கறந்துவிட்டார். பின்னர் மாணவியின் பெற்றோர் சமுர்த்தி ஊக்குவிப்பாளரை நன்றாக ஊக்குவித்து அனுப்பிவிட்டார்களாம்.

(வாழ்க!!! வறுமை ஒழிப்புத் திட்டம்)

## அடைகாக்கப்பட்ட விண்ணப்பப் படிவம்

புலோலியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சேதமடைந்த தனது தேசிய அடையாள அட்டையை புதிதாக எடுப்பதற்கான 2009ஆம் ஆண்டு விண்ணப்பத்தைக் பருத்தித்துறை கிராமசேவகர் ஒருவரிடம் ஒப்படைத்திருக்கிறார்.

அதனைப் பெற்றுக்கொண்ட கிராம சேவகர் விண்ணப்பத்தை 2 வருடங்களாக அடைகாத்து குஞ்சாக வராததைத் தொடர்ந்து பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்.

தேசிய அடையாள அட்டைவருமெனக் காத்திருந்த விண்ணப்பதாரர் நீண்ட நாட்களாக வராததையடுத்து கொழும்பு ஆட்பதிவுத் திணைக்களத்தில் தனது அடையாள அட்டை இலக்கத்தை காட்டிக் கேட்டபோதுதான் விண்ணப்பம் இன்னும் கிடைக்கவில்லையெனத் தெரியவந்தது.

('காவல் தெய்வத்துக்கு' வந்த சோதனை)

## எட்டு உடல் வியாபாரிகள் யாழில் கைது

யாழ்.பருத்தித்துறையில்கைவிடப்பட்ட வீடொன்றில் சதை வியாபாரம் நடைபெறுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அதிரடி வேட்டையில் இறங்கிய பொலிஸாருக்கு 4 சிங்கங்களும், 4 பெண் சிங்கங்களும் சிக்கின.

தற்பொழுது இந்த சிங்கங்கள் கூண்டுக்குள் கம்பி எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள். யாழில் விபசாரம் என்பது தற்போது சர்வசாதரணமானதொரு விடயமாக மாறிவருவதாக மக்கள் கவலைப் படுகின்றார்கள்.

(கடும் 'பசி' போல...)

## 'மிஸ் கோல்' போடும் ரீலோட் கடைக்காரர்

கை கறுத்துப்போய்விடும் அல்லது சில்லறைஇல்லையென்றுஇளைஞர்களும் யுவதிகளும் 'ரீலோட்'யே நாடுகின்றனர்.

எந்நேரமும் செல்போனில் தொங்கும் சில 'ரீலோட்' கடைக்காரர்கள், அழகான யுவதி கடைக்கு வந்து 'ரீலோட்' போட்டால், அந்த மிஸ்ஸின் செல்போனுக்கு புதுப்புது இலக்கங்களிலிருந்து 'மிஸ் கோல்' வருவதாக பலர் விசனப்படுகின்றனர்.

பின்னர், தான் கடையில் வேலை செய்வோர் என எஸ்.எம்.எஸ். அனுப்புகின்றனராம். யுவதிகளே நீங்கள் அழகாக இருந்தால் 'ரீலோட்' பண்ணபோகாதீர்கள். மீள்நிரப்பு அட்டைகளையே எப்போதும் பயன்படுத்துங்கள்.

(செல்போனில் குடும்பமும் நடக்கும்)

---

## மீண்டும் எதற்காக இதயவீணை?

விடுதலைப்புலிகளால் ஆயுதப்போராட்டம் முன்னெடுக்கப்பட்ட காலத்தில் தமிழ் மக்களை காப்பாற்றமுன்னர்யுத்தகாலத்தில்ஈ.பி.டி.பியினரால் 'இதயவீணை' என்ற வானொலி நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. ஆனால், அன்று அவர்கள் தமது புகழையே பாடியதுடன் புலிகளையும் வசைபாடி வந்தனர். போராட்டம் முடிந்ததும் சில காலங்களில் இதயவீணையும் கைவிடப்பட்டது.

ஆனால் கடந்த சில நாட்களுக்கு முன்னர் மீண்டும் இதயவீணை ஆரம்பிக்கப்பட்டிருப்பது எதற்காகவென மக்கள் கேள்வி கேட்கின்றனர். வானொலி பொறுப்பாளர்களோ பதில் தருவார்களா?

இதயவீணையின் அறிவிப்பாளர் மதிவண்ணன், தான் ஏதோ அரசியலில் கற்றுத்தேர்ந்தவர் போல அரசியல் கதைப்பது நகைச்சுவையாக இருக்கிறது. மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட இதயவீணை இனிவரும் காலங்களிலாவது ஈ.பி.டி.பியினரின் புகழைப் பாடாமல் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் உரிமைக்காக பாடட்டும்.

- நித்யா, யாழ்ப்பாணம்.

## வெளிநாட்டு தொலைக்காட்சி மோகம்

இன்று எந்த ஒரு வீட்டுக்கு சென்றாலும் வெளிநாட்டு தொலைக்காட்சி சேவைகள்தான் எம்மை வரவேற்கின்றன. இலங்கையின் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை உப்பளவும் பார்க்க முடியாது. இந்நிலைமை சரியா? நல்ல பல நிகழ்ச்சிகளை எமது தொலைக்காட்சிகள் தந்தாலும் அதனை நாம் பார்ப்பதை தவிர்க்கிறோம். அவ்வளவு ஏன், செய்திகளைக் கூட பார்ப்பதில்லை. வெளிநாட்டு நிகழ்ச்சிகளைப் பார்ப்பது பிழை என்றில்லை. ஆனால், நம்நாட்டில் என்ன நடக்கிறது என்பதைக்கூட தெரிந்து கொள்ளாமல் இருப்பதுதான் தவறு.

- ரகு, யாழ்ப்பாணம்.

## பூத்தூவுகிறேன்...

வசந்தம் ரீ.வி.யானது பொதுமக்களுக்கு ஓர் சிறந்த வரப்பிரதாசம். பல வகையான அம்சங்களைக் கொண்டு விளங்கும் இதில் முக்கியமாக 'தூவானம்' இலக்கிய ஆர்வலர்களுக்காய் அமைந்திருக்கிறது. 'அடையாளம்' என்ற தூவானத்தின் பிரிவில் ஒன்றான பகுதியில் கிண்ணியா சபருல்லாவின் செவ்வியை அண்மையில் பார்த்தேன். வெளியுலகை எத்தனிக்க ஊன்று கோளாய் இது அமைகின்றது. இவ்வாறான பல புதுமையான அம்சங்களைக் கொண்டுவர வசந்தம் ரீ.வி. கருத்தரிக்க வேண்டுமென வேண்டுவதோடு தற்போதைய முயற்சிகளுக்கு என் போனாக் குருதிகளால் பூத்தூவுகிறேன்.

- ருஸார் இஜாஸ், கிண்ணியா - 05.

## ராஜநடை ராஜாங்கம்

சக்தி எப். எம். இன் ராஜாங்கம் நிகழ்ச்சியை வழமையாக கேட்டுவருபவள் நான். இசைஞானி இளையராஜாவின் இன்னிசையில் வெளிவந்த இதமான இடைக்கால பாடல்களை தொகுத்து தரும் அந்த நிகழ்ச்சி உண்மையிலேயே அற்புதமானது. கடந்த 04.06.2011 ராஜாங்கம் கேட்டேன். இசைஞானி இளையராஜா, எஸ்.பி.பாலசுப்ரமணியம் ஆகிய இருவரினதும் பிறந்த தினம் ஒரே வாரத்தில் வந்தது. அதனை முன்னிட்டு அன்றைய ராஜாங்கம் அவர்களை கௌரவிக்குமுகமாக இரவு 8 மணி முதல் நள்ளிரவு 12 மணிவரை இடைக்கால பாடல்களின் கோர்வையில் அமைந்த சிறப்பு இசை நிகழ்ச்சி ஒன்றை நடாத்தியது. அதில் நம்நாட்டு கலைஞர்கள், குறிப்பாக மூத்த கலைஞர்களுடன் இணைந்து வளர்ந்துவரும் கலைஞர்களும் தங்கள் திறமையை வெளிப்படுத்தியிருந்தார்கள். 4 மணித்தியாலங்கள் இடம்பெற்ற இந்நிகழ்ச்சியில் முழுக்க முழுக்க மின்னிணைப்பு இல்லாத வாத்திய கருவிகள் மட்டுமே இசை வழங்கின என்பது குறிப்பிடத்தக்கது. வாழ்த்துக்கள்.

- க. தேவிகா, மருதங்கேணி.

# ஊடக மயக்கம்



## என்னைப் புறக்கணித்த 'ரீங்காரம்'

சூரியனின் ரீங்காரம் என்னை மிகவும் கவர்ந்த நிகழ்ச்சி. ஒருசில தடவைகள் கவிதை வாசித்திருக்கிறேன். ஒருதடவை தொலைபேசியில் தொடர்புகொண்டபோது, பெயரைச் சொல்லி அறிமுகப்படுத்தவே நேரமாயிற்று. என்ன தலைப்பு? என்ன வரிகள்? இன்னும் சுருக்க முடியுமா? என்று கேள்விக்குமேல் கேள்வி கேட்கப்பட்டது. நான்முடிந்தவரைசுருக்கினேன். 'தொடர்பில் காத்திருங்கள்' என்று கூறிய அறிவிப்பாளர், அடுத்த பாடலும் முடிந்து எனது தொடர்பும் துண்டிக்கப்பட்டுவிட்டது. அதன்பிறகு நான் ரீங்காரம் கேட்பதில்லை. நான் புதுமை அல்லது எனது கவிதை காத்திரமானதாக இல்லை என்பதனால் நிராகரிக்கப்பட்டேனா? எதுவாக இருந்திருந்தாலும் வெளிப்படையாகக் கூறியிருக்கலாமே. நிறைய கவிஞர்களை உருவாக்கிய ரீங்காரம் என்னைப் போன்றவர்களை நிராகரித்திருக்கின்றது. பொறுப்பான அறிவிப்பாளர் இனிமேலாவது பொறுப்பாக நடந்து கொள்வாரா?


- மடுல்சீமை மைந்தன், ஆர்.லிங்கேஸ்வரன்.

'ஊடக மயக்கம்' என்ற இப்பகுதிக்கு இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் நீங்கள் கேட்ட, பார்த்த மற்றும் வாசித்தவற்றின் மீதான காத்திரமான விமர்சனங்களை எழுதி அனுப்பலாம். கருத்துச் சுதந்திரத்திற்கு மதிப்பளிப்போம்.

'ஊடக மயக்கம்', 'இருக்கிறம்'
3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 07.
மின்னஞ்சல்: irukiram@gmail.com

# வாசகர் கடிதம்





'இருக்கிறம்' ஆசிரியருக்கு...,

சிறிது இடைவெளிக்குப்பின் கடந்த திங்கட்கிழமை உங்கள் 'இருக்கிறம்' சஞ்சிகையில் 'சட்டம் பேசுகிறது' பகுதி பிரசுரமாகியிருந்தது. நம் நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டங்கள் பற்றி மக்கள் அறிந்திருப்பதில்லை. இதுதான் நாட்டில் பலர் பாதிக்கப்படுவதற்கு மிக முக்கிய காரணம் என நான் கருதுகின்றேன். இன்றைய ஊடகங்களில் சட்டங்கள் பற்றி மக்களுக்கான விழிப்புணர்வு வழங்குவது குறைவாகவே உள்ளது. உங்கள் சஞ்சிகையிலும் அதற்காக நீங்கள் பெரிதாக நேரம் ஒதுக்குவதாக தெரியவில்லை. எனினும் ஆரம்பத்தில் நிறைய தகவல்களை வழங்கியிருந்தீர்கள். பின் திடீரென 'சட்டம் பேசுகிறது' பகுதியை நிறுத்திவிட்டீர்கள்.

இனிவரும் காலங்களில் அவ்வாறு நடக்காது என எண்ணுகின்றேன். தொடர்ந்தும் உங்கள் சஞ்சிகை வளர வாழ்த்துக்கள்.

**- விக்னேஸ்வரன், வவுனியா.**

இருக்கிறமின் பத்தாவது இதழை படித்த கையோடு ஒரு கடிதம். வாராவாரம் புதுப்புது அம்சங்களை சுவையாகவும் சுருக்கமாகவும்தருகிறாய். அதிலும் இந்த வாரம் தத்துவ விசாரம் என்னை மிகவும் கவர்ந்திருந்தது. வாழ்க்கையின் மறு பக்கத்தை புரிந்துகொள்ள ஒரு வழி கிடைத்தது. மேலும் நேரடி ரிப்போர்ட்டில் மிதிவெடி அகற்றும் பெண்கள் பற்றிய ஆக்கம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. தொடர்ந்து இதுபோன்ற தரமான படைப்புகளை உன்னிடமிருந்து எதிர்பார்க்கிறேன். மீண்டும் சந்திக்கிறேன்...!

**- ஸ்வேதா, நுவரெலியா**

'இருக்கிறம்' குடும்பத்திற்கு வாழ்த்துடன் கூடிய வணக்கம்...!

ஆரம்பத்தில் இருக்கிறமில் வெளிவந்த 'காற்றாய் வருவேன்' தொடர்கதையினை மிகவும் விரும்பி வாசித்தேன். அதில் நான் வாசித்த பயங்கர சம்பவங்கள் இன்றும் எனக்கு நினைவிருக்கின்றது. அது முடிந்த பின் அவ்வாறான தொடர்கதை வெளிவராதா என உங்களிடம் பலமுறை கேட்டும் நீங்கள் பதில் தரவில்லை. ஆனால் கடந்த சில வாரங்களுக்கு முன் அடுத்த தொடர்கதைக்கான விளம்பரத்தை பிரசுரித்து ஆச்சரியத்தை கொடுத்தீர்கள்.

அது மட்டுமா? கடந்த திங்கள் 'ஆரம்பித்துவிட்டது திகில்வேட்டை அதிரப்போகிறது சூரக்கோட்டை' என மொழிவாணனின் 'கறுப்பு செப்டெம்பர் அழகி' தொடர் கதையின் முதல் பாகத்தை பிரசுரித்து அசத்திவிட்டீர்கள். மரகதத்தீவின் இரகசிய ஒற்றன் 'நெடுமாறன் 999' இன் உளவறியும் படலம் வித்தியாசமாக இருக்கும் என நம்புகின்றேன்.

**- வித்யா, ஹட்டன்.**



*இலங்கையிலிருந்து வெளிவருகின்ற சஞ்கையிலிருந்து வேறுபட்ட பரிமாணத்தில் வெளிவருகின்ற பெருமை இருக்கிறமை மட்டுமே சாரும். மக்களது பிரச்சினையை வெளிக்கொணரும் 'இருக்கிறம்' சஞ்சிகையில் வெளிவருகின்ற திரைப்பார்வை வித்தியாசமானது. இணையத்தளங்களில் இருக்கும் தமிழ் சினிமா விமர்சனங்களை அப்படியே கொப்பியடிக்காமல் சுயமாக எழுதுவது தான் இருக்கிறமின் தனிச்சிறப்பு. சென்ற வாரம் வெளிவந்த 'பெண் எழுத்தாளருக்கு நேர்ந்த வக்கிர கொடூரம்' ஆங்கிலப் படத்தின் விமர்சனம் வித்தியாசம். வாழ்த்துக்கள்.*

**- பிரியா, கொம்பனித்தெரு.**




30.05.2011 ஆன்று வெளிவந்த உங்கள் சஞ்சிகையின் உண்மையின் பதிவான '154 ஆம் இலக்க பஸ்ஸில் குடிமக்களின் மே தினம்' வாசித்தேன். மே தினத்தில் மட்டுமல்ல 154ஆம் இலக்க பஸ்ஸில் பயணிக்கின்ற பயணிகளுக்கு எப்பவுமே அமைதியில்லை.

அந்த பஸ் எப்பவுமே தேர்தான். ஆடி அசைந்து மெதுவாகத்தான் வரும். அதிகநேரம் காக்க வைத்தால்கூட பரவாயில்லை.

ஆனால், ஒரு கோயில் திருவிழாவிற்கு வந்த சனம் முழுவதும் அந்த பஸ்ஸினுள் இருப்பதைப்போல மூச்சு விட முடியாத சனம்தான் எப்பவுமே. இதை உங்கள் உண்மையின் பதிவில் எழுதியது என்னுடைய அனுபவத்தையே எழுதியதாக தோன்றியது. தொடந்தும் 'உண்மையின் பதிவு' பல விடயங்களைப் பதிய வேண்டும் என எதிர் பார்க்கின்றேன்.

**- அமுதா கிருபாகரன், கிருலப்பனை.**

(24ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## 15 நாட்களில்....

பிறகு அங்க இருந்து இடம்பெயர்ந்து இங்க வந்திட்டம். 1995 ஆம் ஆண்டு இடம்பெயரேக்க மறவன்புலோவில இருந்திட்டு 96 இல இஞ்ச திரும்பி வந்திட்டம். இப்ப எங்கள வசாவிளானுக்கு பக்கத்தில இருக்குற குட்டியபுலத்துக்கு இடம் பெயரச் சொல்லுறாங்கள். அங்க வீட்டுத் திட்டத்தில வீடு கட்டித்தாறம் எண்டு சொல்லீனம். அதப்பாத்தா எங்கட சொந்த இடத்திற்கு எங்கள விடமாட்டீனம் போலத் தான் கிடக்குது' என்று அந்தத் தாய் மனவேதனையுடன் கதைத்தார்.

மற்றுமொரு பிரதேசவாசி கூறுகையில் 'இது கோயில்காரர் எங்கள எழும்பச் சொல்லுற மாதிரித் தெரியேல்ல. எங்கட இடத்திற்கு விடமாட்டீனம் எண்டதால வேற இடத்திற்கு எங்கள மாத்த கோயில்காரர் எழும்பச் சொன்னதாச் சொல்லீனம் போலத்தான் கிடக்கு. எங்கள எழும்பச் சொல்லி கோயில்காரர் வந்து நேரக் கதைக்கேல்ல. ஜி.எஸ். தான் கதைச்சவர்' என்றார்.

காரைக்கால் இந்து மயானத்தையும் இவர்களது குடியிருப்பையும் ஒரு வீதிதான் பிரிக்கிறது. இங்குள்ள சிறுவர்கள் மயான வளாகத்துக்குள் விளையாடுவதையும் காண முடிந்தது. 'நாங்கள் நடுச் சாமத்திலயே மயானத்திற்குள் போய் வாறனாங்கள். அப்போது பிணங்கள்கூட எரியும். இங்கு மலசலகூடம் இல்லை. ஒரே ஒரு மலசலகூடம்தான் உள்ளது. அதைப் பெண்கள் பயன்படுத்துகிறார்கள். ஆண்கள் எல்லோரும் மயான வளவையே பயன்படுத்துகிறோம். எனக்கு 3 வயது இருக்கும்போதே இங்கு இடம் பெயர்ந்து வந்துவிட்டோம். அதால எமக்கு மயானம் பற்றி எந்த பயமும் இல்லை. இங்கு மயானம் இருப்பதாகவே எங்களால் உணர முடியவில்லை. பிணங்கள் எரியும் மணங்கள் எங்களுக்கு பழக்கப்பட்டு விட்டது. மழை காலங்களில்தான் கொஞ்சம் சிரமமாக இருக்கும்' என்றார் உயர்தரம்வரை படித்து பின்னர் வெளிவாரி முதல் கலைத்தேர்வு பரீட்சை எழுதி விட்டு பெறுபேற்றிற்காக காத்துக் கொண்டிருக்கும் அப்பிரதேச இளைஞர் ஒருவர்.

இம்மாதம் 19ஆம் திகதி நடைபெறப் போகும் கும்பாபிஷேக ஆரம்பத்திற்கு முன்னர்தங்களைஅங்கிருந்துவெளியேறி விடுமாறு இறுதியாக கடந்த 30.05.2011அன்றுநடைபெற்ற கூட்டத்தில் கூறியதாக அவ்வூர் மூதாட்டி ஒருவர் கூறினார்.

'நாங்கள் இங்கு மண்ணைக் கிள்ளவில்லை. அவர்களின் சொத்தை எடுக்கேவில்ல. அவர்களிண்ட மரம் தடிகளை முறிக்கேல்ல. ஒண்டும் களவெடுக்கேல்ல. இதில இருந்த மாதிரித் தான் இருக்கிறம். இவங்களுக்கு விருப்பமில்லை எண்டதாலதான் நாங்கள் இங்க கரண்ட் எடுக்கேல்ல. மலசலகூடம்கூடகட்டேல. அங்கால ஒரு மலசலகூடம்தான் இருக்கு பாரும். அமைச்சர் வீடுகட்ட உதவுறன் எண்டவர். இவையள் நிரந்தரமா தங்கிடுவம் எண்டு விடேல்ல தம்பி. இருபத்தொரு வருஷம் இருந்திட்டம். இன்னும் ஒரு மூண்டு மாதமோ நாலு மாதமோ இருந்துட்டுப் போறம்' என்று கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டார் அந்த மூதாட்டி.

அங்கு வந்த பெரியவர் ஒருவர் 'எங்களை தெல்லிப்பளைப் பக்கம் உள்ள அரச காணிகளில் குடியேற்றினால்கூட பரவாயில்ல, அங்க பள்ளிக்கூடம் இருக்கு. அங்க உள்ள பள்ளிக்கூடத்தில இதுகளச் சேர்க்கலாம். பிறகு எங்கட இடத்திற்கு விட்டாலும் படிச்ச பள்ளிக்கூடத்திலே தொடர்ந்து படிக்குங்கள். இப்ப வசாவிளானுக்கு மாத்திப் பிறகு எங்கட இடத்துக்கு மாத்திறதெண்டா என்ன நியாயம். இடம்பெயர்ந்த பிள்ளையள் நல்லாப் படிக்கக் கூட வழியில்லையே எனக் கவலையுடன் கூறினார்.

நாட்டில் இடம்பெற்று வந்த யுத்த சூழ்நிலையால் கடந்த 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து வந்து, காரைக்கால் முகாமில் தங்கியிருக்கும் மக்களை



வெளியேறுமாறு பிரதேச கிராம சேவகரின் ஊடாக கோயில் நிர்வாகம் பணித்திருப்பதாக முகாம் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இந்நிலையில் தாங்கள் கோயில் நிர்வாகத்தினரோடு கதைத்ததாகவும் நிர்வாகத்தினர் இது தொடர்பில் தங்களுக்கு எதுவும் தெரியாது என்று குறிப்பிட்டதாகவும் ஒரு சாரார் தெரிவிக்கின்றனர்.

இம்மக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக காரைக்கால் ஜே-117 பிரிவு கிராம சேவகரான சர்வகுணசீலனை தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்ட போது; கடந்த 20 வருடங்களுக்கு மேல் முகாம் மக்கள் தங்கியுள்ள இக்காணியானது காரைக்கால் சிவன் கோயிலுக்குச் சொந்தமானதென்றும் கோயில் நிர்வாகத்தினரின் வேண்டுகோளுக்கிணங்கவே மக்களை வெளியேறுமாறு தான் பணித்ததாகவும் எமக்குத் தெரிவித்தார். மேலும் கோயில் நிர்வாகத்தினர் மக்களை வெளியேற பணிக்குமாறு தனக்கும் அரச அதிபருக்கும் கடிதம் அனுப்பியுள்ளதாவும் தெரிவித்தார்.


அத்துடன் இவர்களை வசவிளான் பகுதியில் மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை பிரதேச செயலகம் மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

இவர்களை வேறு இடத்திற்கு இடம்பெயர வைக்கத் துடிக்கும் அதிகார பெருமகன்கள், அவர்கள் விரும்பும் இடத்தில் நிரந்தர வசிப்பிடங்களை அமைக்க ஆவன செய்யவேண்டும். இடப்பெயர்வின் வலிகள் மிகவும் கொடூரமானவை. தமிழர்கள் எல்லோருமே இடப்பெயர்வின் வலிகளை ஏதோ ஒரு சூழலில் எதிர்நோக்கி யிருக்கின்றனர்.

ஆனால், யுத்தம் முடிந்து விட்டதாக பறைசாற்றப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்த பின்பும் மீண்டும் ஒரு இடப்பெயர்வு என்பது இந்த மக்களால் ஜீரணிக்க முடியாத ஒன்று. இந்த மக்களின் ஏக்கங்களை நீக்கி அவர்களுக்கான வாழ்வாதார உதவிகளையும் அவர்கள் விரும்பும் இடங்களில் நிரந்தர வாழ்விடங்களையும் அமைத்துக் கொடுத்து அகதிகள் என்ற இவர்களது முகங்களில் பூட்டப்பட்ட முகமூடிகளை அகற்ற வேண்டியது அரசினதும் அதிகாரிகளினதும் கடமையல்லவா?

அதிரடி ரிப்போர்ட்

‘அண்ணே எங்கள 15 நாளுக்குள்ள இங்கயிருந்து எழும்பிப் போகச் சொல்லிட்டாங்கள். நாங்கள் எங்க போறது! எங்கட படிப்பு என்னாகிறது. யுத்தம் முடிஞ்சிட்டுதெண்டு எல்லோரும் சொல்லுகினம். ஆனா எங்கட இடப் பெயர்வுகள் எப்ப முடியுமெண்டு தெரியேல்ல. எங்கட முகங்களில குத்தப் பட்டிருக்கிற அகதி முத்திரை எப்போ அண்ணா கிழிக்கப்படும்’ என அந்தப் பள்ளி மாணவன் கூறிய வார்த்தைகள் என் மனதை ஒரு கணம் வலிக்கச் செய்தது.



# ‘15 நாட்களுக்குள் வெளியேறி விடுங்கள்’

## தடுமாறும் இணுவில் காரைக்கால் முகாம் மக்கள்

◀ கலியுகன் ▶


> ‘இது கோயில்காரர் எங்கள எழும்பச் சொல்லுற மாதிரித் தெரியேல்ல. எங்கட இடத்திற்கு விடமாட்டினம் எண்டதால வேற இடத்திற்கு எங்கள மாத்த கோயில்காரர் எழும்பச் சொன்னதாச் சொல்லீனம் போலத்தான் கிடக்கு. எங்கள எழும்பச் சொல்லி கோயில்காரர் வந்து நேர கதைக்கேல்ல. ஜி.எஸ். தான் கதைச்சவர்’

இது வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து நலன்புரி முகாம்களில் வசிக்கின்ற மக்கள் பற்றிய கதைகளோ அல்லது மீளக்குடியேறிய மக்களது கதைகளோ அல்ல. இருபது வருடங்களுக்கு முன்னர் கட்டுவன் வறுத்தல புரத்திலிருந்து இடம்பெயர்ந்து இணுவில் காரைக்கால் நலன்புரி நிலையத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் வலிகளைச் சொல்லும் கதை.

இணுவில் காரைக்கால் நலன்புரி நிலையமானது, இணுவில் கோண்டாவில் எல்லையோரத்தில் காரைக்கால் சிவன் கோவிலுக்குப் பின்னால் காரைக்கால் இந்து மயான எல்லையில் அமைந்துள்ளது. இவர்கள் குடியிருக்கும் காணிகள் காரைக்கால் சிவன் கோயிலுக்குரிய காணிகள். இந்த மக்கள் பெரும்பாலும் கூலிவேலை செய்தே வாழ்ந்து வருகின்றனர். இங்கு 14 கூடாரங்களில் 23 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 90 பேர் வாழ்கிறார்கள். இதில் 30 பேர் பாடசாலை மாணவர்கள்.

ஆனால் இங்கு 15 கூடாரங்களுக்கு மேல் அமைப்பதற்கு அனுமதியில்லை. 15 ஐத் தாண்டி இங்கு வாழும் ஏனைய குடும்பங்களுக்கு இங்கு பதிவும் இல்லை. சில நிபந்தனைகளின் அடிப்படையிலேயே இங்கு தாம் குடியிருக்க அனுமதிக்கப்பட்டதாகக் கூறும் இந்த மக்களுக்கு சீமெந்தினால் வீடுகள் அமைக்கவோ அல்லது மலசலகூடங்கள் அமைக்கவோ ஆலய நிர்வாகம் அனுமதி வழங்கவில்லை. அதனால் 21 வருடங்களாக மின் வசதி பெறக்கூட வழியற்றவர்களாக குப்பி விளக்குகளையும் அரிக்கன் லாம்புகளையும் நம்பித்தான் இவர்களின் இரவுகள் தொலைந்து போகின்றன.

காரைக்கால் நலன்புரி நிலையத்தில் உள்ள மக்கள் எந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள், அவர்களை எப்போது மீளக் குடியமர்த்தப் போகிறார்கள், அதுபற்றி ஏதாவது உறுதிமொழி



வழங்கப்பட்டுள்ளதா போன்ற தகவல்களைத் திரட்டுவதற்காக அங்கு சென்றிருந்தேன். ஆனால், அந்த மக்கள் கூறிய செய்தி என்னை தர்மசங்கடத்தில் ஆழ்த்தியது.

நான் அங்கு சென்றபோது முகாம் மக்களுடன் உரையாட வசதியாக அங்கிருந்த பாடசாலை மாணவன் ஒருவனை துணைக்கு அழைத்துச் சென்றேன். அவனிடமே மெல்ல ‘எப்படி தம்பி படிப்பு போகிறது, நன்றாக படிக்கிறாயா’ எனக் கேட்க, ‘எங்க அண்ண எங்களைப் படிக்க விடுறாங்கள், கரண்ட் இல்ல மலசலகூடம் இல்ல. தரையில இருந்து தான் படிக்கிறம். இப்ப எங்கட சொந்த இடத்துக்காவது விடுவாங்கள் எண்டு பார்த்தால் எங்களை வேற எங்கயோ கொண்டு போய் குடியேற்றப் போறாங்களாம். இஞ்ச கோவிலில் கும்பாபிஷேகம் நடக்கப் போகுதாம். நாங்கள் இங்கிருப்பது அவங்களுக்குப் பிடிக்கேல்ல போல. அதுதான் 15 நாளுக்குள்ள எங்கள எழும்பச் சொல்லியாச்சு’ என்று அச்சிறுவன் கூறும்போது அவனது முகம் ஏங்கியது. அவர்கள் கொடுத்த காலக்கெடு இவ்வாரம் 19ஆம் திகதியுடன் முடிவடைகிறது என்ற தகவலையும் அவனே சொன்னான்.

அந்த மாணவனின் தகவலை உறுதிப்படுத்த அங்கிருந்த பெரியவர் ஒருவரிடம் கேட்டேன். தம்பி எங்கட வேதனையைக் கிளறாதையும். எங்கட இடம் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள்ள இருக்கு. பலாலிக்கு கிட்டத்தான். எங்களை அங்கு விடுவது மாதிரி இல்ல. ஆனா எங்களை வேற ஒரு இடத்துக்கு மாற்றுவதற்கு அலுவலுகள் நடக்குது. இப்ப எங்கள 15 நாளுக்குள்ள இங்கிருந்து எழும்பச் சொல்லிப்போட்டாங்கள்’ என்றார்.

‘விதானையார் மூன்று முறை கூப்பிட்டு கதைச்சுப் போட்டார். கூட்டத்துக்கு கச்சேரியில இருந்தும் ஆக்கள் வந்தவை. கோயில்காரர் எங்கள அப்புறப்படுத்தச் சொல்லி அவருக்குக் கடிதம் கொடுத்தவங்களாம். என்ன செய்யிறதெண்டே தெரியேல்ல. சொந்த இடத்தில கொண்டு போய் விட்டால் கடனப் பட்டாவது வீடு வாசலத் திருத்தி தொழிலச் செய்யலாம். வேற இடத்திற்கு மாத்தினா தொழிலுக்கு எங்க போறது. இந்த பிள்ளையளின்ர படிப்புகள என்ன செய்யிறது’ என்றார் அருகில் நின்ற மற்றொருவர்.

இந்த மக்கள் இங்கு குடியேறும்போது ஆலய நிர்வாகத்தால் கடிதம் பெறப்பட்டதாகவும். சொந்த இடத்தில் மீளக் குடியமரும்வரை இங்கேயே இருக்க தாம் அனுமதிப்பதாக கூறியதாகவும் அம்மக்கள் தெரிவித்தனர். ஆனால் இவர்களது குடியிருப்புக்கள் ஆலயத்திற்கு இடைஞ்சல்தரும் வகையில் அமைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆலய வீதிகளுக்கு வெளிப்புறத்திலே, வீதியின் நீளத்திற்கே அமைக்கப்பட்டுள்ளதைக் காண முடிகிறது.

‘21 வருடங்களாக கோயில் திருவிழாக்களுக்கு இடைஞ்சல் தராத நாங்கள் இப்ப என்ன இடஞ்சலைக் கொடுக்கப் போகிறோம்’ என்பது அங்குள்ள வயதான தாய் ஒருவரின் கருத்து. ‘நாங்கள் 1990 ஆம் ஆண்டு ஆனி மாதம் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை எங்கட வீட்ட விட்டு வெளியேறினனாங்கள். கட்டுவனில இருந்து இடம்பெயர்ந்து தெல்லிப்பளையில இரண்டு வருடம் இருந்தனாங்கள்.

(23ஆம் பக்கம் பார்க்க...)

இச்சஞ்சிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர் பிரைவேற் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்பாஸ் வீதி, 185ஆம் இலக்கத்தில் 2011 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13ஆம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.